DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

25 வது வெள்ளி விழா
2021
UTHAYAN
# உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராந்த செய்தி இதழ்

$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1343
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 31, 2021

## You can get your Rapid Test results in an hour at Private Clinics across the GTA for $350?

## றொறன்ரோ பெரும்பாகத்தில் கோவிட் – 19 முன் பரிசோதனைக்கு 350 டால்கள் அறவிடப்படுகின்றதாக வெளியான செய்தியால் பொது மக்கள் அதிர்ச்சி

ஒன்றாரியோ மாகாணத்தின் பல நகரங்களில் PCR சோதனைகள் எனப்படும் கோவிட் முன் பரிசோதனைகளுக்கான நேரத்தைப் பெறுவதற்கு சிரமப்படுகின்றனர், மேலும் சோதனைகளுக்கு சமூகமளித்த ஆயிரக்கணக்கானவர்கள் முடிவுகளுக்காக பல நாட்கள் காத்திருக்கிறார்கள்.

ஆனால் 350 டாலர்களை கட்டணமாகச் செலுத்தி றொறன்ரோ பெரும்பாகத்தின் பல சிகிச்சை நிலையங்களில் ஒரு மணி நேரத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டு அதன் முடிவுகளைக் கூட பெற்றுக்கொள்ளலாம் என்ற செய்தி வேகமாகப் பரவி வருகையில் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் மாகாண அரசாங்கம் இது தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றுத என்று தங்கள் தொகுதிகளின் மாகாணப் பாராளுமன்றப் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுப்பதாகவும் எமது செய்யாளர் அறிவித்துள்ளார்.

தற்போது கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சில சிகிச்சை நிலையங்களிலும் அத்துடன் றொரன்ரோ மாநகரில் உள்ள குர் ர்நயடவா என்னும் சிகிச்சை நிலையத்தில் வெளிப்படையாகவே ஒரே நாளில் 159 பரிசோதனை முடிவைப் பெறுவதற்கு 150 டாலர்களும் அல்லது ஒரு மணி நேரத்திற்குள் பரிசோதனை முடிவுகைளப் பெறுவதற்கு 350 டாலர்களும் அறவிடப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

குர் ஹெல்த் என்பது PCR மற்றும் பிற சோதனைகளை கட்டணத்திற்கு வழங்கும் ஒரே கிளினிக் அல்ல. ஒன்டாரியோவில் உள்ள மற்ற கிளினிக்குகள் ரேபிட் க்ளினிக், சாண்டே மெடிக், ஸ்விட்ச் ஹெல்த் மற்றும் பல போன்ற விலைகளை ஆன்லைனில் விளம்பரப்படுத்துகின்றன. பலர் பல இடங்களை வழங்குகிறார்கள் குர் ஹெல்த் 20 பேரைக் கொண்டுள்ளது, மேலும் அதன் ஈட்டன் சென்டர் இருப்பிடம் பயணத்தின் அதிகரிப்புக்கு மத்தியில் நவம்பர் மாதம் திறக்கப்பட்டது.

இவ்வாறு பணம் அறிவிடும் பரிசோதனைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட மருத்துவ சேவையாளர் ஒருவர் ‘பணம் செலுத்துவது ஒரு பிரச்சினையாக இருந்தாலும், உயிரைக் காக்கும் சுகாதாரப் பாதுகாப்பை விரைவாக அணுகுவதற்கு சிலர் பணம் செலுத்துவதற்கு தாங்களாகவே முன்வருகின்றார்கள்” என்று தெரிவித்துள்ளார்.

இந்த பணம் அறவிடும் விடயமாக முன்னாள் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதிவுகளில்
”இந்த விடயமானது உண்மையில் ஒவ்வொரு ஒன்றாரியோ வாழ் பிரஜையையும் மிகவும் கோபப்படுத்த வேண்டும்.” என்று தெரிவித்துள்ளனர்.

## ஒன்றாரியோ மாகாணத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் மாணவர்களில் பலர் கவலைக்கு உள்ளாகியுள்ளார்களா?



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரம் என அதிகரித்து வருவதால் மக்கள் பெருமளவில் கவலைக்குள்ளாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கும் இந்த வேளையில் வருட இறுதி விடுமுறை ஆகியவற்றுக்கு பின்னர் பாடசாலைகளுக்கு திரும்ப வேண்டிய மாணவ மாணவிகளில் பலரும் இவ்வாறு கவலைக்குள்ளாகி இருப்பதாகவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

SPLC

மெய்நிகர் தன்னார்வத் தொண்டு



செயற் திட்டங்கள்



VOLUNTEERING FROM HOME

வீட்டில் இருந்தவண்ணம் தன்னார்வத் தொண்டு



நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்தால் இந்த செயற்பாட்டில் இணைந்துகொள்ள வரவேற்கப்படுகின்றீர்கள்.

உங்களுடைய நேரத்தையும் அறிவுத்திறன் சார்ந்த செயற்பாடுகளையும் எங்களுடைய சமூகத்திற்குப் பயன்பெறும் வகையில் அர்த்தமுள்ள இணைப்புக்கள் வழியாக அமைத்து கொள்ளுங்கள்

For More Information or to Register
Please Call or Email:

(English)
Elsa Uy (416) 493 – 3333 ext 305
Or email at elsa@splc.ca

(Tamil)
Sivanesan Muthiah (416) 493 – 3333 ext 288
Or email at sivanesn@splc.ca

Senior Persons Living Connected
3333 Finch Avenue East
416 493 3333 - www.splc.ca

Funded by New Horizons for Seniors Program – Community-Based Projects
Employment and Social Development Canada





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### COURIER DRIVERS WANTED

Courier Drivers wanted with your own car in Scarborough, GTA, Mississauga, Brampton, Etobicoke, Woodbridge and Pickering area.

Full time or partime.

**Pala: 416-320-1446**

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.



Our secure online application is easy to complete, just go to gopal@driveautogroup.ca

Or call Gopal Pillai at: (647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் பின்ச் - மார்க்கம் வீதிச் சந்திப்புக்கு அருகில் உள்ள உணவகத்தில் இலங்கை-இந்திய உணவு தயாரிக்கக் கூடிய சமையல் வல்லுனர்களும் சமையல் உதவியாளர்களும் உடன் தேவை. பயிற்சியும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**(647) 300-8856**

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் **Markham / Denison** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, **basement** தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு.
4 வாகனங்களுக்கான **parking** உண்டு.
407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

**விபரங்களுக்கு:**
**(647) 282-0643**
**என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## உதயன் கதிரோட்டம்

# தமிழக மீனவர்களின் கைதுகளில் பின்னால் உள்ளவர்கள் யார்? சட்டங்கள் மட்டுந்தானா?

கடந்த பல வருடங்களாக 'எரியுயும் பிரச்சனையாக' உள்ள இலங்கை இந்திய மீனவர்கள் எல்லைகள் தாண்டிச் செல்லும் பிரச்சனைகளும் அது தொடர்பாக இடம்பெறும் கைதுகளும் இறப்புக்களும் சிறைவாசங்களும் இன்னும் 'மோசமாகவே' தொடர்கின்றதை இரு நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

குறிப்பாக இலங்கைக் கடற்படை சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டும். படுகொலை செய்யப்பட்டும் உள்ள தமிழக மீனவர்கள் சாதாரண கடற்தொழிராளர்கள் ஆவார்கள். அவர்களின் பலர் நாட் கூலிகளாகவே உள்ளார்கள் என்பது எமக்குக் கிடைக்கும் தகவல்களின் படி தெரியவருகின்றது.

அவர்களை நிர்வாகம் செய்கின்றவர்களாக சிறிய முதலாளிகள். படகுச் சொந்தக்காரர்கள் என பல வட்டங்கள் உள்ளன. அவர்களுக்கு அடுத்ததாக உள்ள வட்டத்தில் நிச்சயம் அரசியல்வாதிகள் இருப்பார்கள்.


இவ்வாறான நிலையில். இலங்கைக் கடல் எல்லைக்குள் தாங்கள் சென்றால் 'ஆபத்து' உள்ளுத என்பதை நன்கு தெரிந்து கொண்டிருந்தாலும் தமிழக மீனவர்கள் அடிக்கடி ஏன் அங்கு வருகின்றார்கள். ஏன் கைதாகின்றார்கள் என்ற நியாயமான கேள்விகள் சாதாரண மக்கள் மத்தியில் தோன்றுகின்றதே தவிர. மற்றவர்களுக்கு ஏன் தோன்றவில்லை என்பதும் ஓர நியாயமான கேள்விதான்.

இலங்கைக் கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி ஊடுருவுகின்ற விவகாரம் சமீப காலமாக பரபரப்பு அடைந்து வருகின்றது. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசிப்பது அண்மைக் காலமாக அதிகரித்து வருவது ஒருபுறமிருக்கையில், அம்மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

வடபகுதி கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் பலர் சமீப காலமாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது மீன்பிடிப் படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. தமிழக மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறலானது இலங்கை மீனவர்கள் மத்தியில் எதிர்ப்பலைகளை அதிகரித்து வருவது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டிலும் இவ்விவகாரமானது பதற்றமான நிலைமையொன்றை உருவாக்கியிருக்கின்றது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவலைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வடபகுதி மீனவர்களால் சில தினங்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டம் நடத்திய மீனவர்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் சமூக ஆர்வலர்கள் இருந்தார்கள் என அறியப்படுகின்ற வேளையில், தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறலானது இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குமிடையில் கசப்புணர்வை வளர்த்து விடலாமென்ற அச்சம் இருநாட்டு தமிழின உணர்வாளர்களுக்கும் இல்லாமலில்லை. மீன்பிடி விவகாரத்தினால் முறுகல் நிலைமை அதிகரிக்குமிடத்து தமிழக மக்களுக்கும், வடக்கு மீனவர்களுக்கும் இடையே விரோதம் ஏற்பட்டு விடலாமென்பதே எமது அச்சம் ஆகும்.

# ஜனவரியில் இலங்கை அமைச்சரவையில் மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்கிறார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அமைச்சரவை 2022 ஜனவரி மாதம் மறுசீரமைக்கப்படக்கூடும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் இணக்கம் வெளியிட்டுள்ளார். அந்த மாற்றத்தை ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்த்துவதா? அல்லது 18ஆம் திகதி நிகழ்த்துவதா? என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

முக்கியமான சில அமைச்சுக்கள் கைமாற உள்ளதுடன், புதிய சிலருக்கும் வாய்ப்பளிக்க படவுள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

# பேராயர் தெஸ்மாண் டூட்டூவின் மறைவு குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ள ஆழ்துயர் செய்தி

தென் ஆப்பிரிக்க இனஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தவரும் நோபல் பரிசு வென்றவரும் உலகின் உளச்சான்றாய்த் திகழ்ந்தவருமான பேராயர் தெஸ்மாண் டூட்டூவின் மறைவு குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆழ்துயர் கொள்கிறது.

பேராயர் டூட்டூ அவர்களே, என்றென்றும் ஈழத்தமிழர் நெஞ்சில் நிலைத்திருப்பீர்கள்!

தென் ஆப்பிரிக்க இனஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தவரும் நோபல் பரிசு வென்றவரும் உலகின் உளச்சான்றாய்த் திகழ்ந்தவருமான பேராயர் தெஸ்மாண் டூட்டூவின் மறைவு குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆழ்துயர் கொள்கிறது.

தமது நீண்ட நெடிய வாழ்நாளில் அவர் உலகெங்கும் துயரப்பட்ட மக்களினங்களின் உரிமைகளுக்காக சலியாது போராடினார். இனஒதுக்கலைக் கலைக்கும் முயற்சியில் கறுப்புத் தென் ஆப்பிரிக்கர்களுக்காகப் போராடியது மட்டுமல்ல, இலங்கைத் தீவின் ஈழத் தமிழர்கள் உட்பட உலகெங்கும் ஒடுக்குண்ட மக்களினங்களின் உற்ற நண்பரும் தோழருமாக விளங்கினார்.

"அநீதி கோலோச்சும் நிலைமைகளில் எப்பக்கமும் சேராமல் நடுநிலை காப்பீர்களானால், நீங்கள் ஒடுக்குமுறையாளனின் பக்கம் நிற்கத் தீர்மானித்து விட்டதாகப் பொருள்" – இதுவே அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்த மெய்யியலாக இருந்தது. தம் துணிவுமிக்க செயல்களால் இந்தக் கருத்துக்குப் பொருள்தந்தார். முதலில் இன ஒதுக்கலுக்கு எதிரான இயகத்தில் பங்கு வகித்தார். பிறகு உலகுதழுவிய முறையில் மாந்தவுரிமைகளுக்காகப் போராடினார்.

சிறிலங்காவில் பேரினவாத ஆட்சியாளர்களை எதிர்த்து எப்படி மீண்டும் மீண்டும் எமது சார்பில் அவர் வெளிப்படையாக ஓங்கிக் குரல் கொடுத்தார் என்பதை ஈழத்தமிழர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். அவர் கொழும்பு ஆட்சியாளர்களைச் சாடியதோடு, நாட்டின் ஆய்தப்படைகள் தாம் செய்யும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படுவோமென்ற அச்சமே இல்லாமல் முழுமையான சட்ட விலக்குடன் தமிழர்களுக்கு எதிராக, இனவழிப்புக் குற்றமே புரிய இடமளித்தமைக்காகப் பன்னாட்டுலகச் சமுதாயத்தையும் சாடினார்.

"மாந்தவுரிமைச் செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்களும், ஆட்சிக்கு எதிரானவர்களும் தொடர்ந்து இன்றளவும் ஒடுக்கப்படுவதும் காணாமலாக்கப்படுவதுமான நிகழ்வுகள் உண்மையில் கொடுந்திகலூட்டக் கூடியவை" என்றார் டூட்டூ. மூத்தவர்களின் குரலாக இறுதி மூச்சுவரை ஒலித்தவர் சிறிலங்காவில், போரின் கடைசிக் கட்டங்களில் இழைக்கப்பட்ட பெருந்திரளான வன்கொடுமைக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தி வந்தார்.

2013ஆம் ஆண்டு கொழும்பில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் முன்னின்று நடத்திய பொதுநலவாய நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைப் புறக்கணித்து ஈழத்தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைக் கவனப்படுத்த முதன் முதலாக அழைப்பு விடுத்தவர்களில் பேராயர் டூட்டூவும் ஒருவர்.

அந்த நேரத்தில் அவர் சொன்னார்: "சிறிலங்கா ஆட்சியாளர்கள் நாணயமாகச் செயல்படவில்லை என்று கருதுவதற்குப் போதிய காரணங்கள் உள. உலகம் தன்னாலியன்ற எல்லா வழிகளிலும் நெருக்குதல் கொடுக்க வேண்டுமென நினைக்கிறேன்."

2014ஆம் ஆண்டு உலகு தழுவிய முறையில் 38 மாந்தவுரிமைச் செயற்பாட்டளர்கள் மற்றும் அமைப்புகளோடு சேர்ந்து அவர் முன்வைத்த கோரிக்கை: சிறிலங்காவில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்தும், மாந்தகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்தும் புலனாய்வு செய்திட ஐநா மாந்தவுரிமைப் பேரவை பன்னாட்டு விசாரணை ஆணையம் அமைக்க ஆணையிட வேண்டும் என்பதாகும்.

அதிகாரத்தைப் பார்த்து உண்மை பேச அஞ்சியவரல்லர் ஆயர் டூட்டூ. தலாய் லாமா தென் ஆப்பிரிக்காவுக்கு வருகை தர விசா வழங்க மறுத்து சீன அரசாங்கத்தின் அழுத்தத்துக்குப் பணிந்தமைக்காக தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தை அவர் வெளிப்படையாகவே குற்றஞ்சொன்னார். உலகுதழுவிய பெயரும் புகழும் பெற்றவராக இருந்த போதிலும் அவர் ஒருபோதும் ஒடுக்குமுறையாளர்களை அரவணைத்துக் கொண்டதில்லை. ஒடுக்குமுறையால் பாதிப்புற்றுத் துயரம் சுமந்தவர்களைச் சாலப் பரிந்து ஏற்றுக் கொண்டவராகவே எப்போதும் இருந்தார். அவர்கள் ஆடிய போது அவரும் ஆடினார், அவர்கள் சிரித்த போது அவரும் சிரித்தார், அவர்கள் அழுத போது அவரும் அழுதார்.

ஈழத்தமிழர்கள் ஆற்றல்மிக்க தங்கள் கூட்டாளியை இழந்து விட்டனர் என்பது மட்டுமல்ல. உலகம் அறம்சார் திசைகாட்டி ஒருவரை இழந்து விட்டது. துணிவுக்கும் அறத்துக்கும் நீதிநெறிக்கும் ஆளுருவமாகத் திகழ்ந்தவர் ஆயர் டூட்டூ. அவர் இல்லாத உலகில் இன்னுங்கொஞ்சம் இருள் கூடிப்போனது போல் உணரப்படும்.

நீதிக்கான அவரது ஆர்வத்துடிப்பும், ஏழை எளியோர், ஒடுக்குண்டோர் பால் அவரது தோழமையும் நம்மை வழிநடத்த வேண்டும்.

பேராயர் டூட்டூவின் மறைவால், ஈழத் தமிழர்கள் அருமை நண்பரையும், தங்கள் குறிக்கோளுக்காகப் போராடும் உலக வீரனையும் இழந்து விட்டார்கள். எம் நெஞ்சிலும் நினைவிலும் அவர் என்றென்றும் பதிக்கப்பட்டிருப்பார்.


MULTIMILLION DOLLAR PRODUCER
# 1 HOMELIFE HIGHER STANDARDS TOP PRODUCER 2021
HOMELIFE NATIONAL FOUNDER'S CLUB AWARD 2020
# 1 HOMELIFE HIGHER STANDARDS TOP PRODUCER 2021
MULTIMILLION DOLLAR PROUCERS 2021
எமது வெற்றியின்
பங்காளிகளான வாடிக்கையளர்களுக்கும் நண்பர்களுக்கும்
புதுவருட வாழ்த்துக்களும் நன்றிகளும்
Award Night 2021
Homelife Future Award Night 2021
Abi Amalan
Real Estate Broker
416.732.1810
Amal Ganeshamoorthy
Broker of Record
416.829.9993
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE | HOMELIFE FUTURE AMAL-ABI REALTY INC., BROKERAGE
(905) 201-9977 | 7 Eastvale Dr #205, Markham, ON L3S 4N8

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோ மாகாணத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் மாணவர்களில் பலர் கவலைப்படுவதாகத் தெரிகின்றது

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரம் என அதிகரித்து வருவதால் மக்கள் பெருமளவில் கவலைக்குள்ளாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கும் இந்த வேளையில் வருட இறுதி விடுமுறை ஆகியவற்றுக்கு பின்னர் பாடசாலைகளுக்கு திரும்ப வேண்டிய மாணவ மாணவிகளில் பலரும் இவ்வாறு கவலைக்குள்ளாகி இருப்பதாகவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக மகிழ்ச்சியாக பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் வகுப்பறை நண்பர்கள் ஆகியோரோடு குதுா-கலமாக கல்வி கற்று நட்பு பாராட்டி வந்த ஒன்றாரியோ மாகாணத்தின் மாணவ மாணவிகள் பலர் மீண்டும் பாடசாலைகளின் வகுப்பறைகளுக்குச் சென்று கல்வி கற்கவே விரும்புகின்றார்கள் என மேலும் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரொறன்ரோ நகரில் கற்றுவரும் 10 ஆம் வகுப்பு மாணவி எலினா நாளாந்தம் புதிய கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை 10,000 என்னும் இலக்கத்தை நெருங்குவதைப் பார்த்து கவலைப்படாமல் இருக்க முடியாது. என்று தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் பள்ளிக்குச் செல்வதைப் பற்றி எலினா கவலைப்படுகிறார் என அவரது தாயார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் மேலும் 200 மாணவர்களுடன் ஒரு மூடப்பட்ட பாடசாலை சிற்றுாண்டி சாலையில் மதிய உணவு சாப்பிட வேண்டும்.

தனது பள்ளியில் பாதுகாப்பு நெறிமுறைகள் இல்லாதது மற்றும் சமூக விலகல் குறித்தும் லெனினா கவலைப்படுகிறாள், அங்கு அவளது சகாக்கள் மற்றும் ஆசிரியர்கள் சிலர் தடுப்பூசி போடவில்லை, மேலும் மாணவர்கள் பெரும்பாலும் முகமூடி தேவைகளை மீறுகிறார்கள் இதைப் பற்றியும் லெனினா கலவலைப்படுவதாகவும் அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

ஆனால் பாடசாலைகள் மூடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் ”வீட்டில் பாதுகாப்பாக இல்லாத நிலையில் பாடசாலைகள் மிகவும் அவசியம் என்றும் அவ்வாறான நிலையில் தனது வகுப்பு தோழர்கள் மற்றும் அவரது நண்பர்கள் ஆகியோரின் மன ஆரோக்கியத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்தும் லெனினா கவலைப்படுவதாகவும் அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

பிரம்ரன் வசிக்கும் 9 ஆம் வகுப்பில் கற்கும் மாணவி கிறிஸ்ரினா செய்தியளர்களிடம் உரையாடுகையில் ஆன்லைனில் கற்ற ரின்னே கூறுகையில், ”நான் 3 ஆம் தேதி மீண்டும் பள்ளிக்குச் செல்ல பயமாக உள்ளது, மேலும் கற்றலுக்குச் செல்வதற்கான செயல்முறையைப் பற்றி சமீபத்தில் என் பெற்றோரிடம் பேசிக்கொண்டிருந்தேன். ”ஆன்லைனில் கற்றுக்கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால் இப்போது எனது விருப்பங்கள் அதுவாக இருக்கும் அல்லது பள்ளிக்குச் சென்று நோய்த் தொற்றுக்கு உள்ளாவதையும் நான் விரும்பவில்லை என்றும் கிறிஸ்ரினா தெரிவித்தார்.

”நாங்கள் மீண்டும் பாடசாலைக்குச் சென்றால், நாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்பதை உறுதிப்படுத்த உண்மையான திட்டம் எதுவும் இல்லை என்று நான் உணர்கிறேன்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# கனடா — ரொறன்ரோ மாநகரின் ரொறன்ரோ கிறிஸ்த்தவ சபை தேவாலயத்தில் நத்தார் திருநாளை வரவேற்கும் ஏற்பாட்டு நாள் பிரார்த்தனைகள்




கனடா-ரொறன்ரோ மாநகரில் பின்ச்-மிடில்பீல்ட் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள ரொறன்ரோ கிறிஸ்த்தவ சபையின் தேவாலயத்தில் இவ்வருடத் திற்குரிய நத்தார் திருநாளை வரவேற்கும் ஏற்பாட்டு நாள் பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகள் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

சபையின் நிறுவனரும் பாஸ்டருமான சோதி அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

வழிபாடுகளுக்கு அடையாளமாக தெய்வீக உணர்வுடன் இசை ஆராதனை. கவிதை வாசிப்பு. உரை மற்றும் நாடகம் ஆகியன இடம்பெற்றன.

பல சகோதர சகோதரிகள் அங்கு கலந்து கொண்டு மிகுந்த உருக்கத்தோடு இயேசு பிரானின் சிறப்புக்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.




MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# தமிழ்த்தேசிய அரசியலின் சரியான செல் திசைக்கு வலுவான சிவில் சமூகக் கட்டமைப்பு அவசியம் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

இலங்கை செய்திகள் Sri Lanka News



ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒருமுறை சர்வதேசம் அவர்களைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதியாக ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா இருந்தபோது இலங்கையின் கதவுகளை அமெரிக்காவுக்கு அகலத் திறந்துவிட்டிருந்தார். அப்போது, அமெரிக்கப் பிரசன்னத்தை இலங்கையில் தவிர்ப்பதற்காக இந்தியா ஈழத்தமிழர்களைக் கையாண்டிருந்தது. இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து இலங்கையைத்தன் வழிக்குக் கொண்டுவந்திருந்தது. இப்போது, ராஜபக்ச அரசாங்கம் இலங்கையைச் சீனாவுக்குத் திறந்துவிட்டுள்ள நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கையைப் பணியவைக்கும் முயற்சியில் தமிழ்க்கட்சிகளைக் கையாளத்தொடங்கியுள்ளன. இந்நிலையில், தமிழ்த்தேசிய அரசியலைச் சரியான செல்திசைக்கு நகர்த்துவதற்கு வலுவானதொரு சிவில் சமூகக் கட்டமைப்பை உருவாக்குவது அவசியமாகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு ஞாயிற்றுக்கிழமை (26.12.2021) நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: இந்தியாவும், அமெரிக்காவும், சீனாவும் தமிழ்க் கட்சிகளைக் கையாளத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில் இக்கட்சிகள் இராஜதந்திர ரீதியாக இந்நாடுகளைக் கையாளுவதில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றன. தனித்தனிக் கட்சிகளாக ஏனைய கட்சிகளுக்கு எதுவும் தெரியாமலும், ஒரு கட்சிக்குள்ளேயே தனிநபர்களாக ஏனைய உறுப்பினர்களுக்குத் தெரியாமலும் இந்நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன. இவ்விடயங்களை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது இராஜதந்திரமாக ஆகாது என்று கூறிவருகின்றனர். மைத்திரி-ரணில் கூட்டை உருவாக்கியபோதும் தமிழ் மக்களின் நலன் தொடர்பாகப் பேசப்பட்டதென்றும் அதனை வெளிப்படையாகப் பேசுவது இராஜதந்திரம் அல்ல என்றும் கூறியிருந்தனர். தமிழ் மக்களின் தலைவிதி-யைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தனிக் கட்சிகளிடமும் தனிநபர்களிடமும் இவ்வாறு விட்டுவிடுவது மிகவும் ஆபத்தானது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கூறுவதற்காகப் பல தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன. இக்கட்சிகளின் கூட்டில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் இப்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இவை வடக்குக்கிழக்கு இணைப்பை ஒருபோதும் ஆதரித்தவை அல்ல. தொடர்ந்தும் எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளை இணைத்துக்கொண்டமை ஏற்கனவே பலவீனமாகவுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் பலவீனப்படுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலோ என்றே எண்ணத்தோன்றுகிறது. அவ்வாறுதான் அது அமையவும் போகின்றது.

கூட்டுக்கட்சிக்குள்ளே கட்சிகளாகவும், கட்சிகளுக்குள்ளே தனித்தனித் தலைவர்களாகவும் பிரிந்து நிற்பது ஈழத்தமிழர்களைக் கையாளுவதற்குச் சர்வதேசத்துக்கு இலகுவானதாக இருக்கும். ஆனால், ஈழத்தமிழ் இனத்துக்கு மிகவும் ஆபத்தானது. இந்நிலையிலேயே தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு கட்சிகளை ஒருங்கிணைக்கவும், சர்வதேசங்களைத் தமிழ்த் தரப்புக் கையாளுவதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கும் சிவில் சமூகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இச்சிவில் சமூக அமைப்பு கடந்த காலத்தில் கட்டப்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் தோல்விகளைக் கருத்திற்கொண்டு அரசியல் கட்சிகளின் பினாமிகளாக அல்லாமலும் இவ்வமைப்பின் மூலம் கிடைக்கும் வெளிச்சத்தைப் பயன்படுத்தித் தனிப்பட்ட அரசியல் ஆதாயம் தேடுவனவாக அல்லாமலும் இருக்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.



# இலங்கையில் பல உயிர்களைக் "குடித்த" எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புச் சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயலும் கிழக்கிலங்கை கல்லூரி மாணவர் லதேஸ் பத்மநாதன்



இலங்கையின் கிழக்கு மாகாண நகரங்களில் ஒன்றான கல்முனை மாந-கர சபைக்குள் அடங்கும் கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை மாணவர்லதேஸ் பத்மநாதன் தற்போதைய காலகட்டத்துக்கு மிகவும் அவசியமான உபகரணம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

கல்முனை - கார்மேல் பாத்திமா தேசி-ய பாடசாலை மாண-வர் ஒருவர் தற்போதைய காலகட்டத்துக்கு மிகவும் அவசியமான உபகரணம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

தற்போது நாட்டில் பல பாகங்களிலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்த வண்ணமே இருக்கின்றன. இதனால் மக்களின் உயிர் மற்றும் பொருள் சேதங்களுக்குள்ளாகி வருகின்றன.

இதற்குத் தீர்வாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள கமு/கமு கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்வி பயிலும் பாண்டிருப்பைச் சேர்ந்த பத்மநாதன் சுலோஜினிதேவி தம்பதியினரின் புதல்வன் லதேஸ் எனும் மாணவனால் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு நடைபெறாமல் தடுப்பதற்காக Gas Safe Box எனும் புதிய கண்டுபிடிப்பொன்றை உருவாக்கியுள்ளார்.

எரிவாயுவின் சிலிண்டரிலிருந்து அதிக எரிவாயு கசிவு ஏற்படும் போது, எரிவாயு அடுப்புக்கள் வெடிக்கின்றன. அடுப்பில் உள்ள Sensor மூலம் வெடிப்பதற்கு முன்னரே Gas Safty Box உள்ள System ஆனது எரிவாயு கசிவை கட்டுப்படுத்துகின்றது. இதன் மூலம், எரிவாயு அடுப்பு வெடிப்பதை தடுப்பது மட்டுமன்றி மேலதிகமாக கசிவில் உள்ள எரிவாயுவையும் மீதப்படுத்துகின்றது.

எனவே, இதனால் எந்தவித சேதமுமின்றி பாதுகாப்பாகவும்,பயமின்றியும் மக்கள் தங்களது சமையல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் லதேஸ் குறிப்பிடுகையில், “இதனை இரு வாரங்களாக இரவுபகலாக முயற்சி செய்தேன். எங்கள் கிராமத்திலும் அருகிலுள்ள பல கிராமங்களிலும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.அதனை நேரில் சென்று அறிக்கை ஒன்றை தயாரித்தேன். மேலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு செய்திகளையும் சேகரித்து ஆராய்தேன். பின்னர் இதற்கான காரணத்தை கண்டறிந்தேன். எரிவாயு வெடிப்பு சம்பவத்தினால் மக்களுடைய நாளாந்த நடவடிக்கைகள் மந்தமடைந்ததையும் மக்கள் அச்சத்துடன் இருப்பதையும் உணர்ந்து வேதனையடைந்தேன்.

இதற்காக ஒரு கண்டுபிடிப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். எனினும், அடுத்த வருடம் க.பொ.த (சா/தர) பரீட்சையும் எழுத இருப்பதால், எனது படிப்பு நேரம் தவிர்ந்து, இரவு நேரங்களில் இரு வாரமாக தூக்கமின்றி இதனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். இதற்கான பொருட்களை Online மூலம் வாங்கினேன்.

முதலாவதாக மூன்று Safe Box இனை உருவாக்கினேன். அது நூறு வீதம் வெற்றியளிக்கவில்லை. இறுதியாக இதற்கு முன்னர் உள்ள எரிவாயு வெடிப்பை கட்டுப்படுத்தும் திட்டங்களையும் ஆராய்ந்து பரிசோதனையில் ஈடுபட்டேன்.

இறுதியாக Gas Safty Box எனும் ஒரு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கினேன். அது சிறந்த முறையில் வேலை செய்ய தொடங்கியது. மேலும் இதிலும் சில குறைபாடுகள் உள்ளன. அதனை மேலும் சீர்செய்து சந்தைப்படுத்தல் செய்வதற்கு தீர்மானித்துள்ளேன்.

இதற்காக எனக்கு வழிகாட்டியாக இருந்த எனது தாய், தந்தை, மற்றும் எனது பாடசாலை அதிபர் டிலாசால் அருட் சகோதரர் S சந்தியாகு சேர் அவர்களுக்கும், எனது பாடசாலை ஆசிரியரான ரவி சேர் அவர்களுக்கும் மேலும் சில தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிய சோ.வினோஜ்குமார் அண்ணா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என இவ்வாறு தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

பாடசாலை அதிபர் டிலாசால் அருட் சகோதரர் S சந்தியாகு சேர் அவர்களினால் பாராட்டு விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் பாடசாலை அதிபர் குறிப்பிடுகையில், “இவ்வாறான வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் விபத்துக்கள் ஏற்படும்போது, அதற்காக உடனடித் தீர்வாக கண்டுபிடிப்புக்களைச் செய்யும் மாணவர்கள் எமது சமுதாயத்தின் பெரும் சொத்துக்கள் ஆவார்கள். இந்த மாணவர் இதற்கு முதலும் பல கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளார்.




தனது கற்றல் நடவடிக்களைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றார். இவ்வாறான புத்தாக்க சிந்தனை கொண்ட மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவி செய்வதனால் புதிய தொழில் வாய்ப்புகளையும் உருவாக்க முடியும். மேலும் நாட்டிற்கு உதவக்கூடிய பல கண்டுபிடிப்புக்களைச் செய்யக்கூடிய பல திறமைகள் அவரிடமுள்ளது. அவரைப் போன்ற மாணவர்களை இவ்வாறு விழாக்களை நடாத்தி ஊக்குவித்து வருகின்றோம்.

இதற்கு முன்னர் இந்தோனேசியாவில் நடைபெற்ற சர்வதேச கண்டுபிடிப்பாளர் போட்டியில் எமது பாடசாலை மாணவனான முகேஷ் என்பவர் தங்கப்பதக்கம் வென்றார் என தனது உரையில் குறிப்பிட்டார்.

மேலும், கண்டுபிடிப்புக்கான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கிவரும் யாழ். பல்கலைக்கழக மாணவனும், இளம் கண்டுபிடிப்பாளருமான சோ. வினோஜ்குமாரினால் இம்மாணவனின் கண்டுபிடிப்புக்கான ஆக்கவுரிமைப் பத்திரம் எடுப்பதற்கு நிதி உதவியையும் வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# லண்டனிலிருந்து கிளிநொச்சி சென்று தங்கியிருந்த பெண் சடலமாக மீட்கப்பட்டார்

இலங்கை செய்திகள் Sri Lanka News

லண்டனில் இருந்து திரும்பி கிளிநொச்சி - உதயநகர் பகுதியில் தனிமையில் வசித்திருந்த நிலையில் நேற்று மாலை முதல் காணாமல் போயிருந்த பெண் பொதி செய்யப்பட்ட நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு காணாமல்போயிருந்த குறித்த பெண்ணின் சடலம் பொதி செய்யப்பட்ட நிலையில் கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் பகுதியில் அடையாளம் காணப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் அம்பாள்குளம் பகுதியியை சேர்ந்த 22 வயதுடைய இளம் குடும்பத்தர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றது.

குறித்த சந்தேக நபரின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த சந்தேக நபரை அழைத்து சென்று பொலிசார் அடையாளம் காட்டியுள்ளனர். குறித்த சடலம் சம்பவம் இடம்பெற்ற பகுதியிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கந்தபுரம் பரப்பாலம் பகுதியில் பொதி செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளது. குறித்த பாலத்தில் அதிகளவான முதலைகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்னொருவரின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் எடுத்து வந்து வீசியுள்ளதாக தெரியவருகின்றது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

3 வருடங்களுக்கு முன்பாக லண்டனில் இருந்து வந்து கிளிநொச்சி அம்பாள் குளம் உதயநகர் பகுதியில் உள்ள காணியை பார்ப்பதற்காக குறித்த பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கியிருந் இராசேந்திரம் இராசலட்சுமி (வயது-67) என்பவரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிட்த்தக்கது.





# இலங்கை மக்களின் மனதில் நெருப்பு எரிகிறது – எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆதங்கம்

தற்போது அடுப்பில் நெருப்புக்குப் பதிலாக இலங்கை மக்களின் மனதில் நெருப்பு எரிகிறது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், நத்தார் தினத்திற்கு முன்பு எரிபொருள் விலையை அதிகரித்து சிறந்த நத்தார் பரிசை அரசாங்கம் வழங்கியதாகவும் புத்தாண்டு பரிசாக தற்போது கையிருப்பிலுள்ள டொலர்களையும் செலவு செய்து கடன் தவனையை அரசாங்கம் செலுத்தவுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச 27ம் திங்கட்கிழமையன்று மக்கள் குறையை கேட்டறியும் "மனிதாபிமான சுற்றுலா"வின் இரண்டாவது விஜயத்தை அம்பலாந்தொட்டையில் ஆரம்பித்து மக்களை சந்தித்து பேசி குறைகளைகேட்டறிந்ததுடன் "குடும்ப ஆட்சியே நாட்டின் அழிவு" என்ற துண்டு பிரசுரத்தையும் வழங்கினார்.

மத்திய வங்கி ஆளுநர் டொலர் மாபியாவின் வஞ்சகர் என்று கூறிய எதிர்க்கட்சி தலைவர், அவர் இந்நாட்டு மக்களினதும் ஏற்றுமதியாளர்களினதும் வாழ்க்கையுடன் விளையாடி கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த நபரொருவர் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், மொட்டு பொருளாதார சீரழிவின் பிரதான சூத்திரதாரி அவர் என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த குற்றத்தின் பொறுப்பில் இருந்து அவரினால் தப்பிக்க முடியாது என்றும் நாட்டுக்கு இந்தளவு சாபத்தை கொண்டு வந்த அமைச்சர்களுக்கு மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# விடுதலைப் புலிகளின் தலைவரை விட மோசமான அழிவை ராஜபக்சவினர் நாட்டுக்குச் செய்துள்ளனர்

## - பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விட நாட்டுக்கு மிக மோசமான அழிவை ராஜபக்ஷவினர் தேடித் தந்துள்ளதாகவும் நாடு வங்குரோத்தானதை ஒரு தசாப்த காலத்தில் மீட்க முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பம் இந்த நாட்டை மிகவும் கடுமையான நிதி நெருக்கடிக்கு இட்டுச் சென்றது என்பது தற்போது உலகுக்குத் தெளிவாகியுள்ளது என கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகி பல மாதங்களாகியும் முக்கிய அமைச்சுகளுக்கான பொருத்த மான செயலாளர்களை நியமிக்க முடியாமல் போனது.

இதன் மூலம் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஜனாதிபதி தயாரில்லை என்பது தெளிவானது எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# மன்னார் கவிஞர் வை.கஜேந்திரன் எழுதிய "நிலா" சிறுவர் கதை நூல் வைபவ ரீதியாக வெளியீட்டு விழா



மன்னார் கிறிஸ்ரின் வசந்தி வைரமுத்து வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் கவிஞர் வை.கஜேந்திரன் எழுதிய "நிலா" சிறுவர் கதை நூல் வெளியீட்டு விழா புதன்கிழமை (29) மாலை 3.30 மணியளவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர், மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் இடம்பெற்ற குறித்த நூல் வெளியீட்டு விழாவில் விருந்தினர்களாக மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.போல் அமல்ராஜ், மன்னார் கல்வி வலய ஆரம்ப கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.செல்ரன் யூடிற், மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஆலோசகர் எஸ்.விமலேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கவிஞர் வை.கஜேந்திரன் எழுதிய "நிலா" சிறுவர் கதை நூல் மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கிய மன்றத்தின் தலைவர், மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இதன் போது திணைக்கள அதிகாரிகள், சிறுவர்கள் என பலர் கலந்து கொண்டனர். குறித்த நூல் சிறுவர் கதைகளை உள்ளடக்கிய மையினால், குறித்த நூல் நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்கள் ஊடாக வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**







இந்தியா செய்திகள்
India News

# என்னை ஏளனமாக பேசியவர்கள் இப்போது பரிந்துரைக்கு வருகிறார்கள் என்கிறார் தமிழிசை சௌந்தரராஜன்



தமிழ்நாடு பாஜக தலைவராக இருந்த தமிழிசை சௌந்தரராஜன் தற்போது புதுச்சேரி மற்றும் தெலங்கானா மாநில ஆளுநராக இருக்கிறார். எம்.எல்.ஏ., எம்.பி தேர்தலில் போட்டியிட்ட தமிழிசை தோல்வியடைந்தாலும் தனது பாஸிட்டி எனர்ஜியை எப்போதும் விடாதவர். அதேபோல் சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் அவரை அதிகம் கலாய்த்தாலும் எதனையும் தனக்குள் ஏற்றிக்கொள்ளாமல் தன்னுடைய அடுத்தடுத்த வேலைகளில் பரபரப்புடன் இருப்பவர்.

இந்நிலையில் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் சமீபத்தில் பேட்டி அளித்தார். அதில் தனது அம்மா குறித்தும், தனது பணிகள்குறித்தும் ஏராளமான விஷயங்களை பகிர்ந்துகொண்டார்.

அந்தப் பேட்டியில் பேசிய அவர், "ஆளுநராக மாறினாலும் என்னுடைய தினசரி நடவடிக்கைகளில் எந்தவித மாற்றமுமில்லை. அனைத்து நாள்களிலும் எனக்கு பணி இருக்கும். என்னுடைய அம்மா ராஜ் பவனில் இருந்தார். அப்பாவின் ஆதரவு அம்மாவுக்கு பெரிதாக இல்லை. அதனால் அவருக்கு எல்லாமே நான்தான். அம்மாவின் தியாகத்திற்கு ஈடு எதுவும் இல்லை. யாரும் நம் மீது குறை சொல்லாத அரசியல்வாதியாக இருக்க வேண்டுமென அம்மா கூறினார். அதனை நான் இன்றுவரை பாதுகாத்துவருகிறேன். அவரை கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் ராஜ் பவனில் மகாராணி போல் வைத்திருந்தேன் அது எனக்கு மிகப்பெரிய திருப்தி. அவர் இறந்த பிறகு அவரது உடல் மின் மயானத்திற்குள் செல்வதற்கு தயாராக இருந்தது. அப்போது நான் அம்மா அம்மா அம்மா என மூன்று முறை அழைத்தேன். ஏனெனில் மீண்டும் அப்படி அழைக்கமுடியாது. கவலையை துடைத்துவிட்டு அடுத்த வேலையை பார்க்க வேண்டும் என அம்மா கூறுவார். அதனால்தான் தூத்துக்குடியில் தோல்வியடைந்த அன்று மாலையே பத்திரிகையாளர் சந்திப்பு வைத்தேன். எதுவாக இருந்தாலும் நான் கடந்துவந்துவிடுவேன். என் கணவரும் மகளும் சென்னையிலும், என்னுடைய மகன் கோயம்புத்தூரிலும் பணி செய்கிறார்கள். சென்னை செல்லும்போது கணவரையும் மகளையும், கோவை செல்லும்போது மகனையும் பார்ப்பேன். நான் ஸ்டூலில் ஏறி நின்று பத்திரிகையாளர்களிடம் பேசினேன். அதில் எனக்கு மிகவும் வருத்தம் என்னவென்றால் அதிமுகவை சேர்ந்த செய்தித் தொடர்பாளர் ஒருவர், அதனை கிண்டல் செய்யும்விதமாக ஒரு விவாதத்தில் பேசினார். நான் உயரத்தில் குள்ளமானவர்தான். ஆனால் அறிவிலோ செயலிலோ குள்ளம் கிடையாது. சீப்பு வாங்கவில்லையா என என்னை பலர் கிண்டல் செய்து பேசினார்கள். அந்த வீடியோக்கள் எல்லாம் இன்னமும் இணையதளங்களில் இருக்கின்றன. என்னை துச்சமாக நினைத்த ஏளனமாக பேசிய அனைத்து அரசியல் தலைவர்களும் எதற்காகவாவது பரிந்துரைக்குமாறு என்னை தொடர்பு கொண்டுதான் இருக்கிறார்கள். நான் கிண்டலுக்கு ஆளாக்கப்பட்டதை மறக்க வேண்டும் என நினைக்கிறேன். தெலுங்கு மக்கள் என்னை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். ஆண்கள் என்னை அக்கா என்றோ, தங்கச்சி என்றோ அழைக்கிறார்கள். அங்கு தமிழ் அக்கா, இங்கு தெலுங்கு அக்கா, மொத்தத்தில் இசை அக்கா. கவர்னர் என கூப்பிட்டால் திரும்பி பார்க்க தோன்றாது. அக்கா என கூப்பிட்டால்தன் திரும்பி பார்க்க தோன்றுகிறது. பாஜகவை தமிழ்நாட்டி வளர்ப்பதற்கு வெறித்தனமாக உழைத்தேன். இன்னும் கொஞ்சம் ஆதரவு இருந்திருந்தால் சிறப்பாக செயல்பட்டிருக்கலாமோ என்ற ஆதங்கம் இன்னமும் இருக்கிறது" என்றா.

# அரசுப்பேருந்தில் அலுவலகம் சென்ற மயிலாடுதுறை ஆட்சியர் – கூட்டமாக இருந்ததால் நின்று கொண்டே பயணம் செய்தார்

சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்க வாரத்தில் திங்கள் கிழமை ஒருநாள் அரசு அதிகாரிகள் வாகனங்களை பயன்படுத்தாமல் சைக்கிளில், நடந்து அல்லது பொது பேருந்தில் அலுவலகம் வரவேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது. அதன் தொடர்ச்சியாக பல்வேறு மாவட்டங்களில் ஆட்சியர்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்தி அலுவலகம் வருதல், சைக்கிளில் அலுவலகம் வருதல் என பல வழிகளில் பயணங்கள் மேற்கொண்டு சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தனது வீட்டில் இருந்து நடந்து பேருந்து நிறுத்தம் சென்று அங்கு இருந்து அரசு பேருந்தில் ஆட்சியர் அலுவலகத்திற்கு பணிக்கு வருகை புரிந்தார்.

சுற்றுச்சூழல் மாசடைவதை தடுக்க கீழ நாஞ்சில்நாடு பகுதியில் உள்ள ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் இருந்து, மாவட்ட ஆட்சியர் லலிதா 3 கிலோ மீட்டர் தூரம் தொலைவில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அரசுப் பேருந்தில் வந்தடைந்தார். மேலும் அவர் மகளிருக்கான விலையில்லா பேருந்து பயணத்திட்டத்தில் டிக்கெட் எடுக்காமல் பயணம் செய்தார். பேருந்து முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்ததால் பேருந்தில் நின்று கொண்டே பயணம் செய்த மாவட்ட ஆட்சியர், கீழவீதி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி அங்கிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நடைபயணமாக வந்து சேர்ந்தார்.



மாவட்ட ஆட்சியரோடு ஆண் அதிகாரிகளும் இன்று ஆட்சியர் அலுவலகத்திற்கு அரசு பேருந்தில் டிக்கெட் எடுத்து வந்தடைந்தனர். வாரத்தில் ஒருநாள் இதுபோல் அனைத்து அதிகாரிகளும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும் என்று அப்போது மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார். ஆனால் கொரோனா, ஒமிக்ரான், என வைரஸ் தொற்று பரவுவதை தவிர்க்க முக கவசம் சமூக இடைவெளியை கடுமையாக பின் படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் இந்த வேளையில், அரசு பேருந்தில் சமூக இடைவெளியை பின்பற்ற வழியின்றி கூட்டம் வழிந்து நிரம்ப மக்கள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அரசு பேருந்தில் பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.





# மோடியை எதிர்க்க இது நேரமில்லையென கட்சியினருக்கு உத்தரவிட்டுள்ள திமுக தலைமை

புதிய மருத்துவக்கல்லூரிகளை திறந்து வைப்பதற்காக தமிழகம் வரும் பிரதமர் மோடியை விமர்சித்து, எந்த பதிவும் சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டாம் என கட்சியினருக்கு திமுக தலைமை அறிவுறுத்தியுள்ளதாம். ஆர்வக்கோளாறில் ஐடி விங் நிர்வாகிகளில் சிலர், மோடியை எதிர்த்து டிவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் கருத்து பதிவிடக் கூடும் என்பதால் முன் கூட்டியே இந்த அறிவுறுத்தலாம். கடந்த காலங்களில் பிரதமர் மோடி தமிழகம் வருகை தந்த போது கோ பேக் மோடி என்ற ஹேஷ்டேக்கை டிரெண்ட் செய்த திமுக கருப்பு பலூன்களை பறக்கவிட்டது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் புதிதாக கட்டப்படுள்ள 11 மருத்துவக்கல்லூரிகளை திறந்து வைப்பதற்காக ஜனவரி 12-ம் தேதி மதுரை வருகிறார் பிரதமர் மோடி.

அங்கிருந்து அவர் விருதுநகர் செல்வதற்கான முன்னேற்பாடுகளை பிரதமர் அலுவலகமும் தமிழக அரசும் செய்து வருகிறது. பொங்கல் பரிசாக தமிழகத்திற்கு 11 மருத்துவக் கல்லூரிகளை பிரதமர் மோடி தருவதாக பாஜகவினர் பரப்புரை செய்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களுக்கு திமுகவினரும் சமூகவலைதளங்களில் பதிலடி கொடுத்து வருகின்றனர். இதனிடையே, கடந்த காலங்களை போல் பிரதமரின் தமிழக வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐடி விங்கில் உள்ள நிர்வாகிகளில் சிலர் ஆர்வக்கோளாறில் ஏதேனும் பதிவை வெளியிட்டோ அல்லது மோடிக்கு எதிரான ஹேஷ்டேக்கை டிரெண்ட் செய்தோ அரசுக்கு சிக்கல் ஏற்படுத்திவிடக் கூடாது என நினைத்த திமுக தலைமை அதுபோன்ற காரியங்களில் யாரும் ஈடுபடக் கூடாது எனக் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

இதனால் பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தமிழகம் வரும் பிரதமர் மோடிக்கு இந்தமுறை வரவேற்பு மழை மட்டுமே பொழியவிருக்கிறது. மருத்துவக்கல்லூரிகளுக்கான கட்டிட கட்டுமானப்பணி அதிமுக ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டது என்பதால், அவர்கள் தரப்பிலும் பிரதமர் மோடியை வரவேற்க தயாராகி வருகின்றனர். தமிழகம் வரும் பிரதமருக்கு ஸ்டாலின் நேசக்கரம் நீட்டும் நிகழ்வு தேசிய அரசியலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது.

# எழுத்தாளர் அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது

சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை என்கிற சிறுகதை தொகுப்புக்காக எழுத்தாளர் அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 2021-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது எழுத்தாளர் அம்பைக்கு (சிஎஸ் லட்சுமி) அறிவிக்கப்பட்டுள்ளது. "சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை" என்ற சிறுகதைக்காக அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழின் சிறந்த பெண் படைப்பாளிகளில் ஒருவரான அம்பை 1960-லிருந்து எழுதி வருகிறார். இதுபோன்று எழுத்தாளர் மு.முருகே'க்கு பால புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை என்ற சிறுகதை தொகுப்புக்காக மு.முருகேஷ்க்கு பால புரஸ்கார் விருது வழங்கப்படுகிறது. கவிதை, ஹைக்கூ, சிறுகதை தொகுப்பு என பல்வேறு இலக்கியங்களை மு.முருகேஷ் படைத்துள்ளார்.



# இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மாணவ மாணவிகளுக்கு ஓர் முன்னுதாரணமாக விளங்கும் புதிய மருத்துவர் தரிஷிகா

இலங்கை செய்திகள்
Sri Lanka News



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பட்டமளிப்பு விழாவின் போது, முதன்நிலை மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட பட்டதாரிகளுக்கென வழங்கப்படும் 37 தங்கப் பதக்கங்களில் 13 பதக்கங்களை பெற்று மருத்துவரான தமிழ் பெண் ஒருவர் சாதனை படைத்துள்ளார். இலங்கையின் கிழக்கு மாகா-ணம் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த தர்ஷிகா தணிகாசலம் என்பவரே இந்த வியப்பு மிகுந்த சாதனையை நிகழ்தியுள்ளார்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழங்களில் முதன்நிலைப் பல்கலைக்கழகம் என தரப்படுத்தப்பட்டுள்ள, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றவர் தர்ஷிகா.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இம்மாதம் நடைபெற்றபோது, தனது பட்டத்துடன் 13 தங்கப் பதக்கங்களையும் தர்ஷிகா பெற்றுக் கொண்டார். ஐந்து வருடங்களைக் கொண்ட மருத்துவ பீடக் கற்கையில் வெளிக்காட்டிய திறமைகளுக்காக, இந்தப் பதக்கங்கள் அவருக்கு வழங்கப்பட்டன.

சிறந்த மருத்துவபீட மாணவி, எம்.பி.பி.எஸ் இறுதியாண்டு பரீட்சையில் பெற்றுக் கொண்ட சிறந்த பெறுபேறு, சிகிச்சை மருத்துவத்தில் சிறப்பினை வெளிப்படுத்தியமை மற்றும் அறுவை சிகிச்சையில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து கொண்டமை உள்ளிட்ட 13 விடயங்களில் சிறப்புத் தேர்ச்சியினை வெளிப்படுத்தியமைக்காக இவருக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மருத்துவத்துறை வெற்றிப் பெண்ணாகத் திகழும் தர்ஷிகாவின் தந்தை தணிகாலசம் பாடசாலை அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். தாயார் குமுதா குடும்பத் தலைவி பொறுப்பில் உள்ளார். இவர்களின் நான்கு பிள்ளைகளில் தர்ஷிகா இரண்டாமவர். தர்ஷிகாவின் சகோதரர்கள் அனைவரும் உயர் தரத்தில் (பிளஸ் 2) விஞ்ஞானத்துறையை தேர்ந்தெடுத்து கற்றவர்கள். தர்ஷிகாவின் அண்ணன் விஞ்ஞானத்துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர். தற்போது ஆராய்ச்சி விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகின்றார்.

மருத்துவ பீடத்தில் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட தர்ஷிகா தற்போது தகுதிவாய்ந்த ஒரு அரச மருத்துவராக பணியாற்றத் தொடங்கியுள்ளார். இவரின் இளைய சகோதரர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மூன்றாமாண்டு மாணவராக உள்ளார். தங்கையும் தரம் 12 எனப்படும் உயர்தர வகுப்பில் விஞ்ஞானத்துறையைக் கற்று வருகின்றார்.

"தங்கள் பிள்ளைகள் எல்லோரும் விஞ்ஞானத் துறையைக் கற்பதற்கு பெற்றோர்களின் அழுத்தம் அல்லது விருப்பம் காரணமாக இருந்ததா" என, தர்ஷிகாவின் அம்மாவிடம் செய்தியாளர்கள் வினவியபோது "இல்லை" என்றார். "நாங்கள் எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை, விஞ்ஞானத்துறை என்பது அவர்களின் விருப்பத் தெரிவாக இருந்தது. பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற பெற்றோர்களாக நாங்கள் உதவி வருகின்றோம்" என அவர் பதிலளித்தார்.



விஞ்ஞானத் துறையைக் கற்பதில் தனது அப்பாவின் குடும்பத்தினர் இயல்பாகவே ஆர்வமுடையவர்கள் என்று கூறும் தர்ஷிகா, "அம்பாறை மாவட்டம் கோ-ளாவில் பிரதேசத்தின் முதலாவது பெண் விஞ்ஞானப் பட்டதாரி (பி.எஸ்.சி) சொர்ணசோதி, எனது அப்பாவின் தங்கை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் இறந்து விட்டார்" என்றார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்கள் செறிந்து வாழும் அக்கரைப்பற்றின் ஸ்ரீ ராமகிருஷ்ண மிடின் மகா வித்தியாலயத்தில் ஆரம்பம் முதல் 05ஆம் வகுப்பு வரையிலும், 06ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை அக்கரைப்பற்று ராமகிருஷ்ணா கல்லூரியிலும் தனது பாடசாலைக் கல்வியைப் பயின்ற தர்ஷிகா, 2014ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அதிக புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பெற்று அங்கு கல்வி கற்கப் புகுந்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களோடு உரையாடுகையில் தர்ஷிகா தொடர்ந்து கூறுகையில் "சாதாரண தமிழ் பேசும் கிராமம் ஒன்றிலிருந்து தலைநகரில் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட தான், ஆரம்பத்தில் நகர்ப்புற வாழ்க்கையுடன் ஒத்துப் போவதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டதாகக் கூறினார். "சிங்கள மொழி தெரியாமலிருந்தமை பெரும் பிரச்னையாக இருந்தது" என்றார்.

இருந்தபோதும் சவால்களையெல்லாம் கடந்து, ஐந்து ஆண்டுகளைக் கொண்ட மருத்துவப் படிப்பில், ஒவ்வொரு வருடமும் முதன்நிலை மாணவியாக தான் தெரிவாகி வந்ததாக பூரிப்புடன் கூறினார். 37 பதக்கங்களில் 13 பதக்கங்கள் உங்களுக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்தீர்களா என தர்ஷிகாவிடம் கேட்டதற்கு, சிரித்தபடி "இல்லை" என்றார். தற்போது கிழக்கு மாகாணத்தின் தான் பிறந்த அக்கரைப்ப ற்றிலிருந்து 60 மைல்களுக்கு அப்பால் உள்ள மட்டக்களப்பு நகரில் தர்ஷிகா வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றுள்ள தர்ஷிகா இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு ஓர் முன்னுதாரணமாக விளங்குகின்றார் என மக்கள் பேசிக்கொள்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி வெற்றியாளர் மருத்துவர் தர்ஷிகா அவர்களை கிழக்கு மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கும் நேரடியாக தர்ீகாவின் இல்லத்திற்குச் சென்று பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.





இந்தியா செய்திகள்
India News

# இசைமேதை" எம். எஸ். சுப்புலட்சுமியின் வாரிசுகளின் குரலில் ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம் இசைத்தட்டை வெளியிட்ட இளையராஜா

கர்நாடக இசையை ஆன்மாவோடு கலந்து கொடுத்த மாபெரும் இசைக் கலைஞர், மறைந்த பாரத ரத்னா எம். எஸ். சுப்புலட்சுமி. பக்தி பாடல்களை பாடி நம் கண் முன்னே இறைவனை கொண்டு வந்து நிறுத்திய தெய்வீக குரலுக்கு சொந்தக்காரர். இவர், திருமலை கோவிந்தனுக்கு வெங்கடேச சுப்ரபாதத்தை பாடிய இசைத்தட்டு 1963 ஆம் ஆண்டு வெளியானது. திருமாலின் புகழைப் பாடும் வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதி தேவஸ்தானத்தில் ஒலிபரப்பு செய்தது மட்டுமின்றி: 1975 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாக எம்.எஸ். சுப்புலட்சுமி நியமிக்கப்பட்டார். இத்தகைய சிறப்புமிக்க வெங்கடேச சுப்ரபாதத்தை இன்றைய தலைமுறையினர் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் நோக்கில் டாப் தமிழ் நியூஸ் யூட்யூப் சேனல் புதிய அத்தியாயத்தை தொட்டுள்ளது. ஏற்கனவே கந்த சஷ்டி கவசத்தை சூப்பர் சிங்கர் புகழ் பிரியங்கா குரலில் வெளியிட்டு 12 மில்லியன் பார்வையாளர்களை கடந்து சாதனை படைத்த டாப் தமிழ் நியூஸ் நிர்வாகம், தற்போது ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதத்தை எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் கொள்ளு பேத்திகள் எஸ்.ஐஸ்வர்யா மற்றும் எஸ். சௌந்தர்யா ஆகியோர் பாட, மாண்டலின் கலைஞர் ராஜேஷ் இசையில் புதுப்பொலிவுடன் வெளியிட்டுள்ளது.

இசைஞானி இளையராஜா, "ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம்" ஆல்பத்தை வெளியிட்டுள்ளார். இந்நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத், மாண்டலின் ராஜேஷ், பாடகிகள் ஐஸ்வர்யா, சௌந்தர்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதுகுறித்து இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா கூறியதாவது. "சங்கீத உலகத்திலேயே மிகவும் உயர்ந்த பேரும் புகழும் பெற்ற எம்.எஸ்.அம்மா அவர்கள் பாடிய வெங்கடேச சுப்ரபாதத்தை அவரது தலைமுறையாக எம்.எஸ்.அம்மாவின் பேத்திகள் பாடியிருக்கிறார்கள். திரு. ராஜேஷ் அதற்கு இசைக்கருவிகளை இசைத்து அதை மென்மேலும் அழகுப்படுத்தி இருக்கிறார். இதை நான் எப்படி பார்க்கிறேன் என்றால்... எம்.எஸ். அம்மா பாடிய காலத்திலே அவர்களின் குரலை கேட்பதற்காகவே, உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் அவரை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த தலைமுறைக்கு, அவர்களின் சந்ததியிலேயே எம்.எஸ்.அம்மாவின் பேத்திமார்கள் பாடியிருப்பதும், ராஜேஷ் அதற்கு உதவி செய்ததும், இந்தத் தலைமுறையினருக்கும், தலைமுறை தலைமுறையாக சங்கீதம் செல்ல வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் இருப்பதாகதான், நான் பார்க்கிறேன். வருங்கால சந்ததியினருக்கு நாம் கொடுக்காமல் சங்கீதத்தை கையிலேயே எடுத்துக்கொண்டு போனால், இதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது? அந்த பணியை செவ்வனே செய்து வரும் எம்.எஸ். அம்மாவின் பரம்பரைக்கு என்னுடைய வாழ்த்தையும், அவர்கள் மென்மேலும் உயர வேண்டும் என்ற பிரார்த்தனையையும் இறைவனிடம் வைத்துக்கொண்டு, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள என்னை அழைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்து கொள்கிறேன். நன்றி.

இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத் பேசும் போது. "மிக சிறந்த எம்.எஸ். சுப்புலட்சுமி அம்மா பாடிய ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதத்தை தெரியாதவர்கள் இந்த உலகத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட இந்த லெஜெண்டரி சுப்ரபாதத்தை மீண்டும் என்னுடைய நண்பரும், சகோதரருமான ராஜேஷ் ரீஅரேஞ்ச் செய்தது மிகவும் மகிழ்ச்சி. அதில் ஐஸ்வர்யா - சௌந்தர்யா இருவரும் அழகாக பாடி உள்ளார்கள். இசைஞானி இளையராஜா அவர்கள் சொன்னது போல் சுப்ரபாதத்தின் இந்த புதிய பரிமாணம் வருகிற தலைமுறைக்கும் செல்ல ஒருவழியாக இருக்கும் என்று நானும் நம்புகிறேன். இந்த அழகான நிகழ்ச்சியில் நானும் பங்கு கொண்டேன் என்பது மகிழ்ச்சியாக உள்ளது. ராஜா சார் ஆசியுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆல்பம் மிகப்பெரிய வெற்றியை அடைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். அதேபோல் எங்கள் குரு மாண்டலின் சீனிவாசன் அவர்களின் ஆசியும் எங்களுடன் எப்போதும் இருக்கிறது".




இசைக்கலைஞர் மாண்டலின் ராஜேஷ் கூறியதாவது. "ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். சந்தோஷம் என்பதை விட மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாக நினைக்கிறேன். எம்.எஸ்.அம்மா பாடிய பாடலில் பணியாற்ற எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் நானும் ஒரு பங்கு வகித்துள்ளேன் என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது. ஐஸ்வர்யா மற்றும் சௌந்தர்யா இருவரும் மிக சிறப்பாக பணியாற்றி உள்ளார்கள். அதுமட்டுமில்லாமல் இசைஞானி இளையராஜா அவர்கள் இந்த பாடலை வெளியிட்டது, அவரின் ஆசி கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அதேபோல் இசையமைப்பாளர், என் சகோதரர் தேவிஸ்ரீ பிரசாத் இங்குவந்து நிகழ்ச்சியில் பங்கு கொண்டது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. அவர் கூறியது போல மாண்டலின் சீனிவாசன் அண்ணனின் ஆசீர்வாதம் இங்கு நிறைந்துள்ளது. நன்றி வணக்கம்.

பாடகி ஐஸ்வர்யா மற்றும் சௌந்தர்யா பேசும் போது. இன்று மிகவும் விசேஷமான நாள். இன்று இசைஞானி இளையராஜா அவர்கள் நானும், என் தங்கையும் பாடிய ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம் வெளியிட்டது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை தருகிறது. இந்த வெங்கடேச சுப்ரபாதத்திற்கு இசையமைத்தவர் மாண்டலின் ராஜேஷ் அவர்கள். இந்த வெங்கடேச சுப்ரபாதம் நிறைய பேரை சென்று சேர வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. நன்றி".

# மதுரை உயர்நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் "நிறுத்தப்பட்டுள்ள" பிரதமர் மோடியும் முதல்வர் மு. க. ஸ்டாலினும்

**ராஜரத்தினம்- மார்க்கம் - கனடா**





இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 68 மீனவர்களை உடனடியாக இந்தியா அழைத்து வர இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது என்று இந்தியப் பிரதமர் மோடி அவர்களையும் தமிழகத்தின் முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களையும் கேள்வியெழுப்பிய உயர்நீதிமன்ற மதுரைகிளை நீதிபதிகள், விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கும் மாநில அரசிற்கும் உத்தரவிட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இலங்கையில் பணியாற்றும் மதிப்பிற்குரிய நீதிபதி இளஞ்செழியன் அவர்களைப் போன்று. இவ்வாறான துணிச்சல் உள்ள நீதிபதிகள் தமிழ்நாட்டிலும் உள்ளார்களே என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 68 தமிழக மீனவர்களையும், 10 படகுகளையும் விடுவிக்கக்கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தமிழ்நாடு மீனவர் உரிமை பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளராக உள்ள திருமுருகன் என்பவர் மனுதாக்கல் செய்தார். அந்த மனுவில், இலங்கையின் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை கைது செய்தது 1974 ஆம் ஆண்டு கச்சத்தீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது. கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கையில் பல்வேறு மனித உரிமை மீறலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் உடல் முழுவதும் கிருமி நாசினி தெளித்து அவமதிக்கப்பட்டு உள்ளனர். இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கடலோர காவல் படையால் கடந்த 34 ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டும், தாக்கப்பட்டும் வருகின்றனர். இதுவரை ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் கடந்த அக்டோபர் 18 ஆம் தேதி இலங்கை கடற்படை கப்பல் மோதி தமிழக மீனவர்கள் 3 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் தமிழக மீனவர்கள் 68 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை மீட்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளது. எனவே, இலங்கைக் கடற்படை, கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்ட 68 தமிழக மீனவர்களையும், அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 10 படகுகளையும் விடுவிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்த போது, மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார் என்று தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்களை இந்தியா கொண்டுசெல்வது தொடர்பாக, இலங்கை வெளியுறவு துறையை தொடர்புக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் இதுக்குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய கால அவகாசம் தேவை என்றும் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டுக்கொண்ட நீதிபதிகள், ஜனவரி மாத தொடக்கத்திலே 68 மீனவர்களும் தாயகம் திரும்ப வகையில் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தி விசாரணையை டிசம்பர் 31 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழகத்தின் மீனவர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடிபட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது. இதனிடயே இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 68 மீனவர்களை விடுதலை செய்யும் வரை போராட்டம் தொடரும் எனவும் ஜனவரி 1ல் ரயில் மறியல் நடத்த உள்ளதாகவும் மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளனர்.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதும், பிடித்துச்சென்று சிறையில் அடைப்பதும் நீண்ட நெடுங்காலமாக நீடித்து வருகிறது.

அண்மையில் கூட, 68 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து, அங்குள்ள சிறைகளில் அடைத்து இருக்கிறது.

ஏற்கனவே குஜராத் மீனவர்கள் பாகிஸ்தான் கடற் படையினரால் சுடப்பட்டதில் ஒருவர் இறந்தார். இந்த விவகாரத்தில் உடனடியாக செயல்பட்ட மத்திய அரசு, பாகிஸ்தான் தூதரை வரவழைத்து கடுமையாக எச்சரித்தது.

ஆனால், தமிழக மீனவர்கள் 68 பேரை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே 68 தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை அளிக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

விசாரணை முடிவில், "புத்தாண்டு தினத்தை தங்களின் உறவினர்களுடன் கொண்டாடும் வகையில் 68 மீனவர்களையும் மீட்க துரித நடவடிக்கை எடுங்கள்" என்று நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

இந்த விசாரணை 31ம் திகதி வெள்ளிக்கிழமை மதுரை நீதி மன்றத்தில் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கையில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்களுக்கு முன்பாக நீண்ட வரிசைகளில் மக்கள் முண்டியடிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகளை விட மக்கள் கடவுச்சீட்டுக்கள் பெறுவதில் ஆர்வம்

இலங்கையில் கடவுச்சீட்டு அலுவலகம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஆகியவற்றில் அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகளை விட நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தற்போது, அக்டோபரில் அனைத்து பதிவுகளும் முழுமையாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளதால், ஆன்லைன் மூலம் பாஸ்போர்ட் முன்பதிவு செய்யும் வாய்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

வரிசையில் நிற்பவர்கள், தகுந்த நபர்களுக்கு உரிய வேலை கிடைப்பதில்லை என்றும், மற்றொருவர், அரசிடம் இருந்து மக்களுக்கு எதுவும் கிடைக்காததால், நாட்டை விட்டு வெளியேறுவதே தற்போது சிறந்த வழி என்கிறார்கள்.

இலங்கை உண்மையிலேயே நல்ல நாடு, எனினும் தற்போது அதை ஆட்சி செய்பவர்களிடமே பிரச்சினை உள்ளது என மற்றொரு இளைஞர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று குர்ஐலு 07.00 மணி முதல் பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன்பாக பலர் வரிசையில் நின்றுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் கல்விக்காக நாட்டை விட்டு வெளியேறவில்லை எனவும் எமது செய்தியாளர் குறிப்பிட்டார். ஆனால் வேறு நோக்கங்களுக்காக, இது எனவும் இலங்கைக்கு ஒரு சாத்தியமானது அல்ல என்றும் குறிப்பிட்டார்.

நீண்ட நாட்களாக அமுலில் உள்ள பயணத்தடை காரணமாக கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் தவிப்பதாகவும், அதுவே நீண்ட வரிசையில் காத்திருப்பதற்குக் காரணம் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) பிரியந்த ஹப்புஆராச்சி தெரிவித்தார். பாஸ்போர்ட் அலுவலகங்களுக்கு முன்னால்.

இதே நேரம் அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கிரீன் கார்ட் லாட்டரி முறைக்கு விண்ணப்பிக்க அதிகளவிலான மக்கள் புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதை காணக்கூடியதாக இருப்பதாகவும், ஏனைய நாடுகள் தமது பயணக் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதனால் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலை இவ்வாறிருக்க. இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை நாளை முதல் மீண்டும் அதிகரிக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் பண்டார தெரிவித்துள்ளார். இது தொடர்பான புதிய விலைகளை நாளை அறிவிக்க முடியும் எனவும் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால் மா நிறுவனங்கள் கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தன. 400 கிராம் பால் மா பாக்கெட் 90 ரூபாயிலும், ஒரு கிலோகிராம் பால் மா பாக்கெட் 225 ரூபாயிலும் அதிகரிக்கவுள்ளது.

மேலும். இலங்கைக்கு அத்தியவசிய உணவு பொருட்கள் உட்பட பொருட்களை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், பொருட்களை வழங்க தயக்கம் காட்டி வருவதாக அத்தியவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நதெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சில இறக்குமதி பொருட்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் குறித்த வெளிநாட்டு நிறுவனங்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. பணத்தை செலுத்தும் வரை குறித்த நிறுவனங்கள் பொருட்களை வழங்குவதை நிறுத்தியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வாறான விடயங்கள் இலங்கை வாழ் மக்களை வெளிநாடுகளுக்கு செல்வதை தூண்டுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

**- எமது செய்தியாளர் விக்டர்**




# இராமநாதன் கல்லூரி — சுன்னாகம் திறனாய்வு வகுப்புத் திறப்பு நிகழ்வு



கடந்த 22-12-2021 திகதி புதன்கிழமை, கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் அவர்கள் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இலண்டனில் வசிக்கும், அளவெட்டி திரு. சிவசிதரம்பரநாதன் சிவகணேசன் அவர்கள், திறனாய்வு வகுப்பு அமைவதற்கு வேண்டிய நிதி உதவியை இலண்டன் இரத்தினம் நிதியத்திற்கு வழங்கியிருந்தார். திரு. கணேசன் அவர்களின் தாயார் திருமதி. மங்கையற்கரசி சிதம்பரநாதன் இராமநாதன் கல்லூரி பழைய மாணவியாவார்.

இரத்தினம் நிதியம் இதுவரையில் 100ற்கு மேற்பட்ட திறனாய்வு வகுப்புகளை நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. யமுனா இராஜசீலன் அவர்கள் நாடா வெட்டி வகுப்பறையைத் திறந்து வைத்தார்.





அவர் பேசும் பொழுது வருங்கால சூழலில் கணினி உபயோகத்தின் முக்கியத்துவம் பற்றியும் திறனாய்வு வகுப்புகளின் உதவியால் வசதியில்லாத பிள்ளைகளும் பயன் அடைந்து வாழ்கையில் முன்னேறுவார்கள் எனக் குறிப்பிட்டார்.

திரு. செல்லையா மோகநாதன், கோட்டக் கல்வி அலுவலகம், திரு. கிருஷ்ணகுமார் - ஐஆர்மு, டாக்டர் ஆதித்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அதிபர் அவர்கள், இரத்தினம் பவுண்டேஷனுக்கும் விருந்தினருக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.



# இலங்கையை காப்பாற்ற சீனாவிடமும் இந்தியாவிடமும் பாரிய நிதி உதவிகளைக் கோரியுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச

## இலங்கை அரசானது நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்வதில் இருந்து தப்புவதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது

இலங்கை அரசானது நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்வதில் இருந்து தப்புவதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது. இந்தியா, சீனா என இரண்டு நாடுகளிடமும் உதவிகளைக் கேட்டுள்ளது. சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ அடுத்த வாரம் இலங்கைக்குச் செல்லவுள்ள நிலையில், திருகோணமலை எண்ணெய் கிடங்கு கூட்டு வளர்ச்சி பணிக்காக இந்தியா பக்கம் திரும்பியுள்ளது இலங்கை என அறியப்படுகின்றது.

இலங்கை கடந்த சில மாதங்களாகவே கடுமையான பொருளாதார நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. இதனால் அங்கு விலைவாசிகள் அனைத்தும் விண்ணை மூட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதற்கிடையே சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி ஜனவரி 7-9 நாட்களில் இலங்கை செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக சீனாவில் இருந்து 99,000 டன் உரத்தை இறக்குமதி செய்வதற்கான ஆர்டரை இலங்கை ரத்து செய்து. இதனால் அதிருப்தி அடைந்த சீனா, இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்தது. இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெறுகிறது.

இம்மாத தொடக்கத்தில் அந்த சீன நிறுவனம் 8 மில்லியன் டாலர் இழப்பீடு கேட்டு சட்டப்பூர்வமான நடவடிக்கைகளைத் தொடங்கியது. இதையடுத்து 6.4 மில்லியன் டாலரை செலுத்த இலங்கை ஒப்புக் கொண்டது. இந்தச் சூழ்நிலையில் சீனா வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி-இன் வருகை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இதன் மூலம் இழந்த நல்லுறவை மீட்க முடியும் எனச் சீனா நம்புகிறது.

இதற்கிடையில், திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் கிடங்கு பண்ணையை இந்தியாவுடன் கூட்டாக மேம்படுத்தும் திட்டங்களை இறுதி செய்வதில் இலங்கை இறுதிக்கட்டத்தில் உள்ளது. இது தொடர்பாக இரு நாட்டில் இருந்தும் எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. மேலும், இது தவிர இலங்கையின் தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க இந்தியாவும் உதவும் வகையில் நிதியுதவியை அளிக்கலாம் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் அரச அதிகாரி ஒருவர் கூறுகையில், "இரண்டு விஷயங்களும் (திருகோணமலை கிடங்கு, இலங்கையின் நிதி நெருக்கடி) என இரண்டும் சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் ஒன்றை நாம் செயல்படுத்தத் தொடங்கினாலே பொருளாதார நிலைமை மேம்படும். அடுத்த மாதம் திருகோணமலை எண்ணெய் கிடங்கு ஒப்பந்தத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்" என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.


இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு கடந்த நவம்பர் மாதம் 1.6 பில்லியன் டாலராக குறைந்துள்ளது. அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக உணவு இறக்குமதியும் குறைந்துள்ளது. இதனால் அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை மூட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்த மாத தொடக்கத்தில், சர்வதேச தரமதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச், கடனை திருப்பி செலுத்தும் நாடுகளுக்கான மதிப்பீட்டில் இலங்கையை CCஇல் இருந்து CCC என்ற நிலைக்கு தரமிறக்கியது.

ஃபிட்ச் நிறுவனத்தின் இந்த செயலை விமர்சித்த இலங்கை அரசு, நிதி உதவிக்காக நட்பு நாடுகளை இலங்கை தொடர்பு கொண்டு வருவதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளது. மார்ச் 2022 இறுதிக்குள் நட்பு நாடுகளில் இருந்து நிதியுதவி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் இலங்கை தெரிவித்துள்ளது. சீனாவிடம் உதவி சீனாவிடம் இருந்து கடன் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியுதவி ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது இலங்கை. இது தவிர 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் சீனாவுடன் கடனை இலங்கை ரூபாயாகவே செலுத்தும் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டது. அதேபோல சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் இலங்கை ரூபாயாகப் பணம் செலுத்துவது குறித்தும் இலங்கை ஆலோசித்து வருகிறது.

பயணம் இத்துடன் நிற்காமல் இலங்கை இந்தியாவிடமும் உதவி கோரியுள்ளது. இதற்காகக் கடந்த நவம்பர் மாதம் டெல்லிக்குச் சென்ற இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ச முக்கிய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார். எரிபொருள் இறக்குமதி கடன், திருகோணமலை எண்ணெய் கிடங்கு இந்தியா-இலங்கை கூட்டுத் திட்டம், நாணயப் பரிமாற்றத்தின் சலுகை உள்ளிடவை குறித்து அப்போது ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருகோணமலை எண்ணெய் கிடங்கு திட்டத்திற்கு அடுத்த வாரம் நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 2021 : ஓர் அரசியல் மதிப்பீடு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



மற்றொரு பெரும் தொற்று ஆண்டு கடந்து போகிறது. உலகில் உள்ள ஏனைய நாடுகளைப் போலவே இலங்கைத் தீவும் வைரஸை எதிர்கொள்கிறது. எனினும் அண்மையில் கொழும்பிலுள்ள சீன தூதரகம் ருவீட் பண்ணியது போல இலங்கைத்தீவு அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளை விடவும் வேகமாக தடுப்பூசிகளை போட்டு முன்னணியில் நிற்கிறது. இது விடயத்தில் மட்டும்தான் ராஜபக்சவின் ராணுவ மயமாக்கல் வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற எல்லா விடயங்களிலும் இந்த அரசாங்கம் தோற்றுக் கொண்டிருக்கிறது.

வைரஸ் தொற்று மற்றும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு அரசாங்கத்திற்கு ஒரு கெட்ட ஆண்டு மட்டுமல்ல தோல்வியை ஒப்புக் கொண்டு நிலைப்பாட்டை மாற்ற வேண்டி வந்த ஒரு ஆண்டுதான். குறிப்பாக டெல்டா திரிபு வைரஸ் நாட்டை உலுப்பிய பொழுது அரசாங்கம் அதன் நிலைப்பாடுகளை மாற்ற வேண்டி வந்தது. வெளியுலகத்துக்கு ஒரு மாற்றம் நடக்கிறது என்று காட்டும் விதத்தில் அரசாங்கம் பசில் ராஜபக்சவை முன்னிறுத்தி மாற்றங்களை காட்டியது. இந்த மாற்றங்களின் வழியாக அரசாங்கம் அதன் வெளியுறவு அணுகுமுறைகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இறுக்கத்தை தளர்த்தியது. எனினும் கொள்கை என்று பார்த்தால் அது அரசாங்கத்தை பொறுத்தவரை பின்னடைவுதான்.

ஏனென்றால் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் சிங்கள மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் யாவும் மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் எதிரானவை. ஆனால் Covid-19 இன் விளைவுகள் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தன. அதன் விளைவாக தன் நிலைப்பாட்டிலிருந்து அரசாங்கம் கீழே இறங்க வேண்டி வந்தது. எந்த அமெரிக்காவின் மில்லீனியம் சலேஞ் உடன்படிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்ததோ, எந்த அமெரிக்காவின் சோபா உடன்படிக்கை, குறுக்குச் சேவை உடன்படிக்கை போன்றவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்ததோ, எந்த அமெரிக்கா ராணுவ தளபதிக்கு பயணத் தடை விதித்ததோ, அதே அமெரிக்காவின் இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்ட பசில் ராஜபக்சவை நிதி அமைச்சராக நியமித்து அதன் மூலம் அரசாங்கம் தன் முன்னைய நிலைப்பாடுகளில் இருந்து தளர்வுப் போக்கை காட்டியது. அதைத்தொடர்ந்து ஜி.எல். பீரிஸ் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். மகிந்த சமரசிங்க அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டார். ஐநாக் கூட்டத்தொடரில் அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் உள்ளூர் வடிவிலான ஒரு பொறிமுறைக்கு தயார் என்று அறிவித்தது.

இவ்வாறாக மேற்கு நாடுகளுடனும் ஐநாவுடனும், இந்தியாவுடனும் ஒருவித சுதாகரிப்பைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இப்படிப் பார்த்தால் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் தன் வெளியுறவு நிலைப்பாடுகளில் தளர்வைக் காட்டிய ஒரு ஆண்டு இதுவெனலாம். எனினும் வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகளிலிருந்து நாட்டை மீட்க முடியவில்லை. பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரை இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் மிக மோசமான ஆண்டுகளில் ஒன்றாக இந்த ஆண்டு கருதப்படும். இலங்கை தீவு முன்னெப்பொழுதும் சந்தித்திராத வித்தியாசமான பொருளாதார நெருக்கடிகளை அனுபவித்த ஓராண்டு இது. சாதாரண சனங்களை பொறுத்தவரை அரசாங்கம் ஏறக்குறைய தோல்வியடைந்துவிட்டது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதன் மினுமினுப்பை இழந்த ஓர் ஆண்டு. இது அரசாங்கத்தின் நோக்கு நிலையிலிருந்து.

அதேசமயம் தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் இந்த ஆண்டு முன்னைய ஆண்டுகளைப் போன்று திருப்திகரமான வெற்றிகள் எதையும் பெறாத ஒரு ஆண்டுதான். எனினும் இந்த ஆண்டில் மூன்றுமுக்கிய விடயங்கள் கவனிப்புக்குரியவை.

முதலாவது கடந்த மார்ச் மாதம் ஐநா கூட்டத்தொடரையொட்டி மூன்று கட்சிகள் இணைந்து ஒரு பொதுக் கடிதத்தை அனுப்பின. அது ஒரு முக்கிய அடைவு. 2009க்கு பின் தமிழ் கட்சிகள் அவ்வாறு ஐக்கியப்பட்டு ஐநாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியது என்பது திருப்பகரமானது. அக்கடிதத்தில் மூன்று கட்சிகளும் ஜெனிவாவை தாண்டிப் போக வேண்டிய இலக்குகள் குறித்து ஒற்றுமைபட்டிருந்தன. அதுவும் ஓர் அடைவு.

அதன்பின் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஐநா கூட்டத் தொடரையொட்டி ஐந்து கட்சிகள் ஒற்றுமைப்பட்டன. அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசுக் கட்சியும் இணையவில்லை. ஐநா வை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்ற மற்றொரு எத்தனம் இது. இந்த ஒருங்கிணைப்பு முயற்சியை டெலோ இயக்கம் முன்னெடுத்தது.

மூன்றாவது ஒருங்கிணைப்பு முயற்சியும் டெலோ இயக்கத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இந்தியாவை நோக்கி பெரும்பாலான தமிழ் கட்சிகள் இணைந்து கூட்டாக ஒரு கோரிக்கையை முன்வைக்கும் முயற்சியிது. அக்கோரிக்கை தொடர்பான வாதப் பிரதிவாதங்களை தனியாக எழுத வேண்டும். இந்த நடவடிக்கையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியே நிற்கிறது. எனினும் ஒப்பீட்டளவில் அதிகளவு கட்சிகள் அதில் ஒன்றிணைந்துள்ளன.

இந்தியாவை நோக்கி அல்லது அமெரிக்காவை நோக்கி அல்லது ஐநாவை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பது என்பது தனிய வேண்டுகோள்கள் என்பதற்கும் அப்பால் அவற்றின் ஆழமான பொருளில் ராஜதந்திர நகர்வுகளே. வெளியுறவு நகர்வுகளே. இந்த அடிப்படையில் தொகுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு மூன்று வெளியுறவு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மூன்று நகர்வுககளிலும் காணப்படும் பிரதானமான பலம் தமிழ் கட்சிகளை ஆகக் கூடிய பட்சம் ஒருங்கிணைந்தமைதான். இவற்றில் உள்ள அடிப்படை பலவீனம் என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் கட்சி நலன்களை முழுமையாக கடக்கவில்லை என்பதுதான்.

முதலாவது முயற்சியில் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக மேலும் இரு கடிதங்கள் அனுப்பப்பட இருந்தன. ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு காரணம் சம்பந்தப்பட்ட கட்சிகளில் ஒன்று தனியோட்டம் ஓடியமைதான். சிவில் சமூகங்களின் தலையீட்டால் அப்படி ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அந்த கடிதத்தில் கேட்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அடுத்தடுத்த கட்ட கட்டமைப்பு சார் வளர்ச்சிகளுக்கு போவதற்கு சிவில் சமூகத்திடமும் பலம் இருக்கவில்லை. கட்சிகளும் தயாராக இருக்கவில்லை. அப்படி ஒரு கூட்டு கோரிக்கை அனுப்பப்பட்ட பின்னர்தான் கட்சிகளுக்கு இடையேயான முரண்பாடுகள் அதிகரித்த அளவிலும் அசிங்கமான விதங்களிலும் வெளிப்பட்டன.

அதுமட்டுமல்ல ஜெனிவாவை கடந்து போக வேண்டும் என்று கூறும் கட்சிகள் எவையும் அதற்குரிய கட்டமைப்பு சார் தயாரிப்புகளோடு இல்லை. இந்த ஆண்டு மட்டுமல்ல கடந்த 12 ஆண்டுகளில் அவ்வாறான கட்டமைப்புக்கள் எவையும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு வெற்றிடத்தில்தான் அடுத்த ஜெனிவா கூட்டத்தொடர் கடந்த செப்டம்பர் மாதம் வந்தது. அதில் கட்சிகள் வேறு ஓர் ஒருங்கிணைப்புக்கு போயின. அம்முயற்சியை டெலோ இயக்கம் முன்னெடுத்தது. அங்கேயும் ஐநாவுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. அங்கேயும் கடிதங்களுக்கு முன்னும் பின்னும் சர்ச்சைகளும் சண்டைகளும் இடம்பெற்றன.

அடுத்த கட்டமாக இப்போது இந்தியாவுக்கு கூட்டாக ஒரு கோரிக்கையை முன் வைக்க முயற்சிக்கப்படுகிறது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணையவில்லை. தொடக்கத்தில் இணையப் பின்னடித்த தமிழரசுக் கட்சி அமெரிக்காவை நோக்கி ஒரு குழுவை அனுப்பியது. எனினும் அண்மையில் அக்கட்சி டெலோவின் முன்னெடுப்புகளில் இணைந்து கூட்டுக் கோரிக்கையை மாற்றியமைத்தது.


எனவே தொகுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு தமிழ்கட்சிகள் பிராந்திய பேரரசை நோக்கியும், ஐநாவை நோக்கியும், உலக சமூகத்தை நோக்கியும் கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்ற முனைப்போடு ஏதோ ஒரு விதத்தில் ஐக்கியப்பட்டு, ஏதோ ஒரு கோரிக்கையை முன்வைத்து உழைத்த ஆண்டு எனலாம். ஆனால் இக்கோரிக்கைகளுக்கிடையே தொடர்ச்சி இல்லை, மட்டுமல்ல இக்கோரிக்கைகளுக்கிடையே முரண்பாடுகளும் உண்டு. அதைவிட முக்கியமாக இக்கோரிக்கைகளை செய்முறைக்கு கொண்டுபோக தேவையான வெளியுறவு கட்டமைப்புகள் கட்சிகளிடம் உண்டா?

வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது அரசியல் விமர்சகர்களின் விருப்பம் மட்டுமல்ல. கட்சிகளின் தனி ஓட்டம் அல்ல. அல்லது கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளை வெளிப்படுத்தும் ஒரு விடயப் பரப்பும் அல்ல. வெளிவிவகாரம் எனப்படுவது அரசற்ற ஒரு மக்கள் கூட்டத்தைப் பொறுத்தவரை தேச நிர்மாணத்தின் இன்றியமையாத ஒரு பகுதி. அது தூய இலட்சியவாதம் அல்ல. கற்பனாவாதம் அல்ல. அது யதார்த்தமாயுள்ள சாத்தியக்கூறுகளை கையாளும் ஒரு கலை. வாய்ப்புக்களை கையாளும் ஒரு கலை. வாய்ப்புகளைக் கெட்டித்தனமாக கையாள்வதன்மூலம் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை கனிய வைக்கும் ஒரு கலை. அதற்கு பொருத்தமான ஒரு பொதுக் கட்டமைப்பும், பொருத்தமான வெளியுறவுக் தரிசனமும் தேவை.

எனவே தொகுத்துப் பார்த்தால் கடந்து செல்லும் ஆண்டில் தமிழ் கட்சிகள் மூன்று ஒருங்கிணைப்பு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. இம்மூன்று ஒருங்கிணைப்பு முயற்சிகளின் விளைவாக இதுவரை இரண்டு கூட்டுக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது முயற்சி இன்னமும் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு மூன்று வெவ்வேறு ஒருங்கிணைப்பு முயற்சிகளினூடாக மூன்று வெவ்வேறு வெளியுறவு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு ஒரு முக்கியமான தொடக்க ஆண்டு. இவற்றுடன் சுமந்திரன் குழுவினரின் அமெரிக்கப் பயணத்தையும் சேர்க்கலாம். இந்நான்கு வெளியுறவு நகர்வுகளும் உரிய துறைசார் நிபுணத்துவத்துடன் விசுவாசமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்க்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்கள் அடுத்த ஆண்டிலாவது ஒரு பொருத்தமான வெளியுறவுக் கொள்கையை வரையவேண்டும். ஒரு பொருத்தமான வெளியுறவு கட்டமைப்பை கட்டியெழுப்ப வேண்டும்.

## வீணாவின் கவிக்கணை

விடை காணா முடியா விடையங்களை
விதி என்று எண்ணி விலகாமல்,
அழுது புலம்பாமல், உன் உணர்வை
சிதைக்காமல், அழகாய் அமைதியாய்
மௌனம் காத்து, உன் சிந்தையில்
உதித்ததை செயல்படு, விந்தையாய்
சுழலும் உலகமும் கூட சற்றே
வியந்துதான் போகும் உன்னைக்கண்டு,
மௌனத்தில் உதித்திடும் உண்மைகள்
எல்லாம் உனக்கு விடையளிக்கும்
விந்தையைப்பார்ப்பாய், வியந்திடுவாய்
ஜெயித்திடுவாய்!



# ஒரு முயற்சியும் முட்டுக்கட்டையும்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

*எச்சரிக்கை: இந்த கட்டுரை நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் அதன் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மேலும் தொடர்புடையவர்களுடன் மேற்கொண்ட உரையாடல்கள், இதர தகவல்களின் அடிப்படையில் எவ்வித காழ்ப்புணர்ச்சியுமின்றி எழுத்தப்பட்ட பகுப்பாய்வாகும்.*

“**நா**லு போலிசும் நல்லா இருந்த ஊரும்” என்று ஒரு தமிழ்த் திரைப்படம். சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான அந்த திரைப்படம் படம் வர்த்தக ரீதியில் தோல்வியடைந்தது, ஆனாலும் ஒரு செய்தியைச் சொன்னது. அமைதியாகவும், நல்வழியிலும், முன்னேற்றப் பாதையிலும் செல்லும் ஒரு ஊர் இருக்குமாயின் அது பலருக்கு பொறுக்காது. அந்த அமைதியைக் குழப்பி, அந்த குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது சிலருக்கு பிடிக்கும். இறுதியில் ஒரு சிலரால் ஒரு நல்ல விஷயம் எப்படி நிலைகுலைய வைக்கப்படுகிறது என்பது புரியும்.

அந்தப் படத்தின் கதை அடிப்படையில் பல தசாப்தங்களுக்கு முன்னர் வெளியான ஆங்கிலப் படம் ஒன்று மற்றும் சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான சுவீடிஷ் திரைப்படம் ஒன்றின் கலவையாக இருந்தது. நல்ல கருவைக் கொண்ட கதை பாழாக்கப்பட்டது என்கிற விமர்சனம் அந்தப் படம் வெளியான போது எழுந்தது. மேலும் போட்ட காசையும் எடுக்க முடியாமல் சென்றது.

எனினும் அந்த திரைப்படம் ஒரு கருத்தை ஆழமாகக் கூறியது. ஒரு நல்ல முயற்சி முன்னெடுக்கப்பட்டால் அதற்குப் பல முட்டுக்கட்டைகள் ஏற்படும் அது அந்த நோக்கத்தையே சிதைத்துவிடும் என்பதாகும். மேலும் அந்த நோக்கத்தில் குறைகள் இருக்கலாம், ஆனால் அந்த குறைகள் அடையாளம் காணப்பட்டு களையப்பட வேண்டுமே தவிர, ஊரையே காலி செய்வதோ அல்லது நல்ல நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்ட காரியம் சீர்கெட்டுப் போகக் கூடாது என்பதே அந்தப் படம் சொல்ல வந்து, சரியாகச் சொல்லாமல் விட்ட பிழை.

அப்படித்தான் இலங்கையில் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்த ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்ட நிலையில் அது இப்போது குழப்பப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. கடந்த பல தசாப்தங்களாக, ஏன் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் சிறுபான்மை மக்கள் அதாவது தமிழ் பேசு மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவது தொடர்கதையான ஒன்று. தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை இல்லாதது அல்லது அது ஏற்பட்டுவிடக் கூடாது என்று பலதரப்பினர் முனைப்பாகச் செயல்பட்டது ஆகியவை சாபக்கேடான ஒன்றாக இருந்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டால், அதன் மூலம் தமது அதிகார பலம் ஆட்டம் காணும் என்பதால் அந்த ஒற்றுமை ஏற்படக் கூடாது என்பதில் தொடர்ச்சியாக வந்த அரசுகள் கவனமாக இருந்துள்ளன. தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் ஒரு அணி அல்லது கட்சிக்கு விழுமாயின் அது தென்னிலங்கை அரசியலில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

“அரசியல் நரி” ஜெ ஆர் கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மற்றும் புதிய அரசியல் யாப்பின் அடிப்படை நோக்கமும் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் ஒருங்கிணைவதைத் தடுத்து, அவர்களில் ஒருவர் எதிர்க்கட்சித்தலைவராகக் கூட வந்துவிடக் கூடாது என்பதாகும். அவருக்குப் பிறகு வந்த எந்த அரசாலும் சிறுபான்மை மக்களுக்கு மனதளவில் கூட எதுவும் செய்துவிட முடியாமல் செய்தது அவர் கொண்டுவந்த அரசியல் யாப்பு. மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரான போது ஜெ ஆர் செய்த அரசியல் சித்து விளையாட்டுக்களை தமிழ் பேசும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள், அப்படிச் செய்திருந்தால் அது வருந்தத்தக்க ஒன்று.

இப்படியான பின்புலத்தில் தான் டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலாந்தனின் முன்னெடுப்பில் கொழும்பு வெள்ளவத்தையில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் அவருடன் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். தமிழ் பேசும் கட்சிகளை ஒருங்கிணைத்து அந்த மக்களின் அபிலாஷைகள் மற்றும் உரிமைகளை வென்றெடுக்க நாடு தழுவிய நோக்கில் செயல்படும் எண்ணத்திலேயே அந்த கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் மனோ கணேசன், ராதாகிரு‘ணன், திகாம்பரம் மற்றும் டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளாட் அமைப்பின் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, தமிழ் தேசிய மக்கள் கூட்டணியின் தலைவர் சி வி விக்னேஸ்வரன், முஸ்லிம் தரப்பில் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உட்பட பல தலைவர்கள் இரண்டு கட்டமாக நடைபெற்ற கூட்டத்தில் பங்குபெற்றனர். இதற்கு முன்னோடியாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டம் அமைந்திருந்தது.

நவம்பர் மாதம் யாழில் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது சட்டத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் காணப்பட வேண்டும் என்று ஒரு கருத்து உருப்பெற்றது.

முதலில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவது மற்றும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தும்படி இந்தியாவைக் கோருவது என ஒருமித்த கருத்து ஏற்பட்டிருந்தது. பின்னர் கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் மேலதிகமாக கலந்துரையாடவும் முடிவானது. 13 ஆவது திருத்தம் முழுமையான அரசியல் தீர்வல்ல, அதிகாரப் பரவலாக்கம் என்பதற்கு அப்பால் சென்று சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை என்பதும் வலியுறுத்தப்பட்ட அதேவேளை, குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தில் கூறியவற்றையாவது முழுமையாகப் பெற்றுக்கொள்ள இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதி ஆதரவு கோருவது என்றும், அதற்கான வரைவு கடிதம் ஒன்றை தயார் செய்து அடுத்த கூட்டத்தில் விவாதிப்பது என்றும் முடிவானது.




கொழும்பில் நடந்த அடுத்த கூட்டத்தில் வரைவு கடிதம் அதன் தலைப்பு ஆகியவை விவாதிக்கப்பட்டு ஓரளவுக்கு உடன்பாடு காணப்பட்டு டிசம்பர் பிற்பகுதியில் நடைபெறும் கூட்டத்தில் இறுதி வடிவம் கொடுப்பது என்றும் முடிவான நிலையில், குழப்பங்களும் குழப்புவதும் அரங்கேறியது. அந்த கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் சம்பந்தருடன் பங்குபெற்ற சுமந்திரன் மற்றும் மாவை ஆகியோர் முன்னர் உடன்பட்ட விஷயங்கள் மற்றும் வரைவு தீர்மானங்கள் தொடர்பில் குறுக்குச்சால் ஓட்டினர். அரசியல் தீர்வு குறித்து அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் உதவியைப் பெற வேண்டும், இந்தியாவை நம்பியோ அல்லது 13 ஆவது திருத்தமோ எந்த பலனையும் தராது என்கிற நிலைப்பாட்டில் சுமந்திரன் இருந்ததாக கூட்டத்தில் பங்குபெற்றவர்கள் என்னிடம் தெரிவித்தனர். மேலும் சம்பந்தரின் உடல்நலக் குறைபாடு காரணமாக அவர் சார்பாக அனைத்து முடிவுகளையும் சுமந்திரனே எடுக்கிறார் என்ற விமர்சனமும் எழுந்தது. இலங்கை தமிழரசு கட்சி மட்டுமின்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளேயும் அவர் யாரையும் எது தொடர்பிலும் கலந்தாலோசிப்பதில்லை என்கிற குற்றச்சாட்டு நீண்டகாலமாக நிலவி வருகிறது.

எனினும் இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் பெறப்படுவதில் இந்தியாவை உள்வாங்காமல் தீர்வு சாத்தியமில்லை என்பதை அனைவரும் அறிவார்கள். சுமந்திரன் நம்புவதாகக் கூறப்படும் அமெரிக்கா மட்டுமல்ல ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், கனடா போன்ற தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவு நாடுகளும் இந்தியாவை கலந்தாலோசித்தே முன்னரும் முடிவெடுத்துள்ளனர் இனியும் எடுப்பார்கள் என்பது உறுதி. அப்படியான யதார்த்த சூழலில், பல தசாப்தங்களுக்கு பிறகு தமிழ் பேசு கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு முன்னெடுப்பைச் செய்யும் போது இலங்கை தமிழரசுக் கட்சி முட்டுக்கட்டை போடும் வகையில் நடந்து கொள்கிறது என இந்த கூட்டத்தில் பங்கு பெற்ற-கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட- அனைவரும் மிகவும் எரிச்சலும் மனக்கசப்பும் அடைந்துள்ளனர். பொதுவான அம்சங்களுக்காக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை ஒன்றாக மூன்று சுற்றுக் கூட்டத்திற்கு ஒன்று கூட்டுவதே இன்றைய காலகட்டத்தில் சவாலான ஒரு விஷயம்.



நல்லதொரு முன்னெடுப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் பிரதான அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி கட்டையைக் கொடுத்துக் குழப்புகிறது என வடக்கு கிழக்கிலுள்ள பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள், கல்விமான்கள் என பல்வேறு தரப்பினரும் விசனம் வெளியிட்டுள்ளனர். வடக்கில் சீனா கால்பதிக்க தீவிர முயற்சிகளை எடுத்து வரும் நிலையில், இந்தியாவைக் கழற்றிவிடுவது அல்லது புறந்தள்ளுவது தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்னெடுப்பது, நீடித்திருக்க கூடிய அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளுவது ஆகியவற்றில் இந்தியாவின் பங்கு இன்றியமையாதது. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் 13 ஆவது திருத்தம் மற்றும் இந்திய அனுசரணை பற்றிப் பேசும் போது, கூட்டமைப்பு தனி ஆவர்த்தனம் வாசிப்பது இந்தியாவை எரிச்சலடையச் செய்துள்ளது. புதுடில்லி இது குறித்து தீவிரமாகச் சிந்தித்து வருகிறது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழ் பேசும் கட்சிகள் ஒரே தளத்தில் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவில் நிலைப்பாடாகவும் இருந்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் “இந்தியா வேண்டாம்” என்கிற நிலையிலிருந்து அதை வெளிப்படுத்துவதை தாங்கள் அவதானித்துள்ளோம் என்பதற்கான சமிஞ்கைகள் இந்தியத் தரப்பிலிருந்து வெளியாகின்றன. கூட்டமைப்பு இந்தியா சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பதும் கேள்விக்குறியே. இலங்கை தொடர்பில் அதீத கரிசனை காட்டிய நோர்வேயின் சிறப்பு தூதராக இருந்த எரிக் சொல்ஹைம் ஒரு முறையல்ல பல முறை எனக்களித்த பேட்டியில் இந்தியா இல்லாமல் இலங்கையில் சமாதானமும் இல்லை, தீர்வும் இல்லை என்று கூறியதை நினைவுகூர்கிறேன். மேலும் ஒரு விஷயத்தை அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது. இலங்கையில் கடைசியாக 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையும் மலையகம் மற்றும் கொழும்பிலுள்ள தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையும் தோராயமாக ஒரே அளவில் உள்ளது காணப்படுகிறது. வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதும் யாவரும் அறிந்ததே. இதையும் இந்தியா கவனத்தில் எடுத்துள்ளது. மலையக மக்களின் நலன்களை முன்னெடுப்பதில் தமக்குத் தார்மீகக் கடமையுள்ளது என்பதையும் இந்தியா உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது.

நல்லதோர் முன்னெடுப்பை கூட்டமைப்பில் உள்ள சில குழப்பியுள்ளனர் என்பது தமிழ் பேசும் மக்களிடையே பெரும் ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை பலருடன் உரையாடும் போது என்னால் அறிய முடிகிறது. அதேபோன்று கூட்டமைப்பு மந்தையிலிருந்து விலகிய ஆடு போலப் பயணிக்கிறது, இலக்கோ இலட்சியமோ இல்லாமல் பயணிக்கிறது, சொந்த காசில் சூனியம் வைத்துக் கொள்கிறது என்று பலர் ஆதங்கப்படுவது போல் நானும் கவலைப்படுகிறேன்.

*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு- நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே*

# ஸ்ரீ லஹரி கிருஷ்ணுனி கீதாம்ருதம் இசைத் தட்டு வெளியீடு


இந்தியா செய்திகள் India News



ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை உலகெங்கும் பரப்பி வரும் திருநெல்வேலி மாவட்டம் முக்கூடலில் உள்ள மனுஜோதி ஆசிரமத்தின் சார்பில், ஐதராபாத்தில் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின், பகவத் கீதையின் சாரம்சக் கருத்துக்கள் அடங்கிய "ஸ்ரீ லஹரி கிருஷ்ணுனி கீதாம்ருதம்" என்ற ஆன்மீக இசைத் தட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது. முதல் இசைத் தட்டை தொழில் அதிபர் வி.ஜி.சந்தோஷம் வெளி-யிட, ஐதராபாதிலுள்ள திரைப்பட தயாரிப்பாளர் கொண்டேட்டி சுரேஷ் பெற்றுக் கொண்டார். விழாவில் மனுஜோதி ஆசிரமத்தின் தலைவர் பால் உப்பாஸ் என் லாறி சிறப்புரையாற்றிய போது, "உங்கள் அனைவருக்கும் ஸ்ரீமன் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் நாமத்தில்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பகவத்கீதை சாராம்ச கருத்துக்கள் அடங்கிய ஸ்ரீலஹரி கிருஷ்ணா கீதாம்ருதம் ஆடியோ வெளியீட்டு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ் விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் எங்களது மனுஜோதி ஆசிரமத்தின் சார்பாக வருக வருக என வரவேற்கிறேன் இன்றைக்கு ஒரு மகத்தான நாள். இறைவன் ஒருவரே! நாம் அனைவரும் அவருடையபிரஜைகள் என்ற நல்லெண்ணத்தோடு இந்த ஹைதராபாத் பட்டணத்தில் கூடியுள்ளோம். பகவத்கீதையில் கிருஷ்ணர் என்ன கூறுகிறார் என்றால், எப்பொழுதெல்லாம் தர்மத்திற்கு குறைவும் அதற்குநிறைவும் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் தர்மத்தை நிலைநிறுத்த என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன் என்கிறார். கடவுள் ஒருவரே! இந்த உலகில் அநீதியும் அக்கிரமங்களும் அதிகரிக்கும் போது அவற்றைநியாயந்தீர்க்க கடவுள் இந்த பூமிக்கு இறங்கி வருகிறார். இதைத்தான் நாம் அவதாரங்கள்என்கிறோம். இந்தியா ஒரு ஆன்மீக தேசமாக இருக்கிறது. இந்தியா ஏழ்மையான நாடாகதோன்றினாலும் இங்கு தான் கடவுள் இருக்கிறார். இந்த புண்ணிய தேசத்தில் இருந்து அனேகஅவதாரங்கள் தீர்க்கதரிசிகள் மகான்கள் தோன்றி இருக்கிறார்கள். இந்த புண்ணிய பூமியில்இருந்து தான் மகத்தான மதங்கள் தோன்றி பரவி இருக்கிறது. குறிப்பாக தென்னிந்தியாவில்பூமியின் பல வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள் அமைந்து இருக்கின்றன. இவ்வளவு வரலாற்று சிறப்புமிக்க மகத்துவமிக்க சூழ்நிலையிலும் நமது தேசமானதுமதங்கள் மற்றும் மொழி வாயிலாக பிரிந்து கிடக்கிறது. இந்த உலகத்தில் உள்ள மதங்களில் இந்துத்துவம் கிறிஸ்துவம் இஸ்லாமியம் இன்னும் பல முக்கிய மதங்களும் இந்தியாவில்தான் உள்ளது. மதச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றினால் தான் பிரிவினைகள் ஏற்படுகிறது. வேதங்களை ஆராய்ந்து அது ஒரே இறைவனைத்தான் குறிக்கின்றது என்பதைமுதலாவதாக தெரிந்து கொண்டோம் என்றால், நமக்குள் வேற்றுமைகள் ஒளிந்து ஒற்றுமை நிலவும் கடவுள் ஒருவரே! அவரையே கிறிஸ்தவர்கள் கிறிஸ்து இயேசு என்றும், இந்துக்கள் நாராயணர்என்றும், இஸ்லாமியர்கள் அல்லாஹ் என்றும், யூதர்கள் ஏகோவா என்றும் அழைக்கிறார்கள். அனைத்து மதத்திற்கும் வேதங்களை கொடுத்தவர் அந்த ஒரே இறைவனே. அவரை பல்வேறு காரணபெயர்களால் அழைக்கின்றனர்.

ஆனால் தீர்ப்பு நாளின் நாயகன் ஒருவனே. அவனே இறைவன். இதைத்தான் அனைத்து வேதங்களும் சொல்லுகின்றது. இறைவன் ஸ்ரீ கிருஷ்ணர் மூலம் பகவத்கீதையில் பேசினார். முகமது நபியின் மூலம் குர்ஆனில் பேசினார். இயேசு மூலம் பைபிளில் பேசினார். ஆனால் இவை மூன்றும் முரண்படுவதில்லை. ஜனங்கள் தான் முரண்படுகிறார்கள் வேதாகமும் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் உரியது அல்ல அதுஎல்லோருக்கும் ஏன் உலகத்திற்கே உரியது பகவத்கீதையும் குர்ஆனும் கூட ஒவ்வொருவரும் படிப்பதற்காகவே இருக்கிறது. வேதாகமும் தீர்க்கதரிசிகள் உடைய ஒரு புத்தகமாக இருக்கிறது பவிஷ்ய புராணம் அவருடைய தீர்க்கதரிசனம் ஆகும். பகவத்கீதை அவருடைய தீர்க்கதரிசியின் மூலமாக எழுதப்பட்டதாகவும் குர்ஆனும் அவருடைய தீர்க்கதரிசியின் மூலமாக எழுதப்பட்டது. அனைத்து சமயங்களும் ஒரே இறைவனைத்தான் குறிக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேதங்களைப்படிக்க வேண்டும் வந்ததும் அதில் அனைத்து வேதங்களையும் படிப்பதற்கு கற்பித்து வருகிறோம். இவ்வுலகில் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு இறை நம்பிக்கையும் வேதங்களை கற்பதும் அவசியமாகிறது. 1963 ஆம் ஆண்டு இந்தக் கொள்கையை உலகமெங்கும் செல்வதற்கு மனுஜோதி ஆசிரமம்என்ற ஆசிரமத்தை நிறுவினார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரிகிருஷ்ணா அவர்கள் போதித்தார்கள். இதை மற்ற மக்களும் தெரிந்துகொள்வதற்காகத்தான் பகவத்கீதையின் சாராம்சம் கருத்தில்கொண்டு இந்த ஆடியோ ஆல்பத்தை தயார் செய்து இருக்கின்றோம். ஒரே இறைவன் என்றநம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தியாவிலுள்ள எல்லாமாநிலங்களிலும் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் போதனைகளை தெரியப்படுத்துகின்றோம். இறைவன்நமக்கு ஒலி நீர் காற்று போன்ற அனைத்தையும் இலவசமாக தந்திருக்கிறார் இறைவன் நமக்குஅளித்த எண்ணற்ற இயற்கை வளங்களை நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தி, அதன் மூலம் மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். அனைத்து வேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள ஒரே இறைவனைப் பற்றிய கருத்துக்களை புத்தகங்களாக வெளியிட்டு அதை இலவசமாக கொடுத்து வருகிறோம். இது நமது இந்தியாவை ஒருசக்தி வாய்ந்த தேசமாக வெளிப்பட செய்யும் என நாங்கள் நம்புகிறோம்பகவத் கீதையில் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்று சொல்லப்பட்டது போலஅனைத்து வேத நூல்களிலும் உள்ள ரகசியங்களையும் ஸ்ரீமன் நாராய-ணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாமக்களுக்கு அருளிய போதனைகளையும் அச்சடித்து அனைத்து தரப்பு மக்களுக்கும் இலவசமாககொடுத்து வருகின்றோம்.

தர்மயுகம் அல்லது ராமராஜ்யம் அல்லது இறைவனுடைய அரசாட்சி இந்த பூமியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகில் பல மாற்றங்கள் ஏற்படும் சூழ்நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எல்லா வேதங்களையும் படிப்போம்! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொள்வோம். பக்தி பாடல்கள்வாயிலாக அனைத்து தரப்பு மக்களிடம் சென்று சேரும் வகையில் இந்த ஆல்பத்தை வெளியிடுகின்றோம். இதை மற்ற மக்களும் தெரிந்துகொள்வதற்காகத்தான் பகவத்கீதையின் சாராம்சம் கருத்தில்கொண்டு இந்த ஆடியோ ஆல்பத்தை தயார் செய்து இருக்கின்றோம். ஒரே இறைவன் என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தியாவிலுள்ள எல்லாமாநிலங்களிலும் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் போதனை-களை தெரியப்படுத்துகின்றோம். இறைவன் நமக்கு ஒலி நீர் காற்று போன்ற அனைத்தையும் இலவசமாக தந்திருக்கிறார் இறைவன் நமக்கு அளித்த எண்ணற்ற இயற்கை வளங்களை நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தி, அதன் மூலம் மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகி-றோம். அனைத்து வேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள ஒரே இறைவனைப் பற்றிய கருத்துக்களை புத்தகங்களாக வெளியிட்டு அதை இலவசமாக கொடுத்து வருகிறோம். இது





நமது இந்தியாவை ஒருசக்தி வாய்ந்த தேசமாக வெளிப்பட செய்யும் என நாங்கள் நம்புகிறோம். பகவத் கீதையில் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்று சொல்லப்பட்டதுபோல அனைத்து வேத நூல்களிலும் உள்ள ரகசியங்களையும் ஸ்ரீமன் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாமக்களுக்கு அருளிய போதனைகளையும் அச்சடித்து அனைத்து தரப்பு மக்களுக்கும் இலவசமாககொடுத்து வருகின்றோம். தர்மயுகம் அல்லது ராமராஜ்யம் அல்லது இறைவனுடைய அரசாட்சி இந்த பூமியில்நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகில் பல மாற்றங்கள் ஏற்படும் சூழ்நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எல்லா வேதங்களையும் படிப்போம்! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொள்வோம். பக்தி பாடல்கள்வாயிலாக அனைத்து தரப்பு மக்களிடம் சென்று சேரும் வகையில் இந்த ஆல்பத்தை வெளியிடுகின்றோம்" என்று கூறினார்.

ஆசிரமத்தின் தலைவர் பால் உப்பாஸ் என் லாறி பேசியதை தொடர்ந்து அவரது சகோதரர் லியோ பால் சி லாறி சிறப்புரையுடன் விழா நிறைவுற்றது.

# ஒமைக்ரான் வைரஸ் சமூக தொற்றாக மாறுகின்றது என்கிறார் தமிழக சுகாதாரத் அமைச்சர் மா.சுப்பிரமணியன்



தமிழகத்தில் ஒமைக்ரான் பரவல் குறித்து மத்திய குழுவினர் ஆய்வை தொடங்கியுள்ளனர். வெ-ளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு மட்டும் ஒமைக்ரான் தொற்று இருந்த நிலை மாறி, சமூகத் தொற்றாக மாறி வருகிறது என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

ஒமைக்ரான் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்திய பிர-தமர் மோடி, தொற்று பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களுக்கு மத்திய குழுக்களை அனுப்ப உள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி, தமிழகம், கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்தர பிர-தேசம், பஞ்சாப், ஜார்க்கண்ட், பிஹார், மேற்கு வங்கம், மிசோரம் ஆகிய 10 மாநிலங்களுக்கு மத்தியகுழுவினர் சென்று ஆய்வு செய்து, ஆலோசனை வழங்குவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், மருத்துவர்கள் வினிதா, பர்பசா, எஸ்.சந்தோஷ்குமார், தினேஷ்பாபு ஆகியோர் கொண்ட மத்திய குழுவினர் 26-ம் தேதி சென்னை வந்தனர். சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வ விநாயகம், ஊரக நலப் பணிகள் இயக்குநர் குருநாதன் ஆகியோரை மத்திய குழுவினர் நேற்று சந்தித்து, தமிழகத்தில் ஒமைக்ரான் பாதிப்பு நிலை, கரோனா தடுப்பூசி நிலவரம், மருத்துவ கட்டமைப்புகள் குறித்து கேட்டறிந்தனர். பின்னர், நந்திவரம் ஆரம்ப சுகாதார நிலையம், சென்னை விமான நிலையம் சென்று ஆய்வு நடத்தினர். சென்னை அரசு பொது மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் இன்று ஆய்வு நடத்த உள்ளனர். மத்திய குழுவினர் உடனான ஆலோசனைக்குப் பிறகு, செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறிய-தாவது: தமிழகத்தில் கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி சிறப்பாக நடக்கிறது. செங்கல்பட்டு, குன்னூரில் உள்ள தடுப்பூசி மையத்தில் உற்பத்தியை தொடங்கி வைத்தால் எதிர்காலத்தில் இதுபோன்ற பேரிடர் காலங்களில் மிகவும் பயனளிக்கும். தமிழகத்தில் ஒமைக்ரான் தொற்றால் 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 18 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்துவிட்டனர். 16 பேர் சிகிச்சையில் உள்ளனர். 97 பேருக்கு ஒமைக்ரான் அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது. இவர்களது பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை.

ஒமைக்ரான் பாதிப்பு குறித்த விவரங்களை புனே, ஹைதராபாத், பெங்களூரு மரபணு ஆய்வகங்களுக்கு பரிசோதனைக்கு அனுப்பினால், தொற்று இருப்பதாக 10 நாட்களுக்குபிறகு தகவல் வருகிறது. அதற்குள்பலரும் குணமடைந்தே சென்று விடுகின்றனர். நாட்டிலேயே தமிழகத்தில் மட்டும்தான் தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் ரூ.4 கோடியில் மரபணு ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒமைக்ரான் பரிசோதனை நடத்தமத்திய அரசு அனுமதித்தால் உடனுக்குடன் பாதிப்பை கண்டறியலாம். வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு மட்டும் ஒமைக்ரான் தொற்று இருந்த நிலை மாறி, தற்போது சமூக தொற்றாக மாறி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட 51 பேருக்கு ஒமைக்ரான் அறிகுறி.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் கடந்த 17-ம் தேதி ஒருவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர், அந்த நோயாளிக்கு கரோனா தொற்று பாதிப்பு இருப்பது உறுதியானது. இதையடுத்து, அந்த வார்டில் பணியில் இருந்த நோயாளிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர் மாணவிகள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அதில், 60-க்கும் மேற்பட்டவர்களுக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 23 நோயாளிகள், 28 மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் என மொத்தம் 51 பேருக்கு "எஸ்" ஜீன் குறைபாடு (ஒமைக்ரான் தொற்று அறிகுறி) இருப்பது பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து, 51 பேரின் மாதிரிகளும் ஒமைக்ரான் பரிசோதனைக்காகபுனே, ஹைதராபாத் ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மூத்தக் குடிமக்கள் முதன்மை குடிமக்கள்

**வே. பாலகிருஷ்ணன், இ.கா.ப**
**(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி)**



திருப்பூர் மாவட்டத்தில் ஒரு கோயிலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மூத்தக் குடிமகன் ஒருவரை காக்கும் முயற்சியாக அவரிடம் பேசி அவர் பின்னணியைத் தெரிந்து கொண்ட பின் அவரை அவர் குடும்பத்துடன் சேர்த்து வைக்க முயன்றபோது அவர் "தயவு செய்து வீட்டுக்கு மட்டும் அனுப்பிவிடாதிர்கள்" என கைகளைக் கூப்பி அவர் அழுதது இன்றும் என் கண்முன்னே நிற்கின்றது. பின்னர் அவரின் இரு மகன்களையும் வரவழைத்து அவர்களுக்கு நீண்ட ஆற்றுப்படுத்தல் செய்தபின் தந்தையும் குழந்தைகளும் ஆரத் தழுவியபோது கண்ணில் கண்ணீர் சாரைசாரையாக கொட்டியதை பார்க்கும்போது "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்ற வள்ளுவர் வரிகள் வந்து நின்றன. இதைப் போல் நூற்றுக்கணக்கான தருணங்களைமூத்தக் குடிமக்கள் குறித்தபாதுகாப்பு பணியில் கண்டிருக்கிறேன்.

அவர்கள் சமுதாயத்தின் அனுபவப் பாடங்கள் சுமந்து நிற்பவர்கள். அவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் உள்ளன. அந்த அறிவும் அனுபவப் பாடமும் எந்தப் பல்கலைக்கழத்திலும் கற்றுக்கொடுக்கப்படுவதில்லை ஏனென்றால் அவர்களே ஒவ்வொரு வீட்டிலும் பல்கலைக் கழகங்களாகத் திகழ்கிறார்கள்.

மூத்தக் குடிமக்களுக்கு முன்னுரிமை வழங்காத எந்த சமுதாயமும் முன்னேறுவது கடினம். வளரும் நாடுகளை ஒப்பிடுகையில் வளர்ந்த நாடுகளில் மூத்தக் குடிமக்களின் சதவிகிதம் அதிகமாக இருக்கின்றது. மேலை நாடுகளில் வளர்ந்து வரும் மருத்துவ முன்னேற்றம் மக்களின் வயதைப் பின்னால் தள்ளிக் கொண்டேபோகிறது. இதனால் மக்கள் நீண்டகாலம் வாழ்வதால் மூத்தக் குடிமக்களின்எண்ணிக்கை அதிகரிக்கிறது.



அதேபோல் திருமண பந்தத்திற்கு உட்பட்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் தம்பதிகளின் எண்ணிக்கைகுறைவதும், வளர்ந்த நாடுகளில் மூத்தக் குடிமக்களின் சதவிகிதம்மொத்த மக்கள் தொகையில் அதிகமாக இருப்பதற்கு காரணம். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் தற்போது இளைஞர்களின் விகிதாச்சாரம் அதிகமாக இருந்தாலும் எதிர்காலதில் மூத்தக் குடிமக்கள் விகிதம் அதிகமாக வாய்ப்புள்ளது. தேசிய புள்ளிவிபர அலுவலகத்தின் அறிக்கைபடி இந்தியாவின் மூத்தக் குடிமக்கள் எண்ணிக்கை 2021 இல் 138 மில்லியனில் இருந்து 194 மில்லியனாக 2031-ல் வளர இருக்கின்றது. இது 10.1 சதவீதத்திலிருந்து 13.1 சதவீதமாக மொத்த மக்கள் தொகையில் உள்ளது.

இதே மூத்தக் குடிமக்களின் சதவிகிதம் கனடாவில் 2020 இல் 18 சதவீதமாக உள்ளது. தற்போதும்கூட எண்ணிக்கை அடிப்படையில் இந்தியாவில் மூத்தக் குடிமக்களின் எண்ணிக்கை பல வளர்ந்த நாடுகளின் மொத்த மக்கள் தொகையைவிட அதிகமாக உள்ளது. எதுவாக இருந்தாலும் மூத்தக் குடிமக்களின் நலம் பேணுவது மனிதகுல வாழ்தலின் அவசியம்.

மூத்த குடிமக்களை காப்பதில் அந்தந்த குடும்பத்திற்கு முதன்மை கடமை இருந்தாலும், குடும்பம் இன்றி, பாதுகாவலர்கள் இல்லாமல் தனித்திருக்கும் மூத்த குடிமக்களுக்கு காவல்துறை துணையாக நிற்கின்றது.

மூத்த குடிமக்கள் சந்திக்கக்கூடிய பிரச்சினைகள்பொதுவாக வாழ்வாதாரப் பிரச்சனைகள், பாதுகாப்புக்கானப் பிரச்சினைகள், நோய்நொடிமற்றும் உளவியல் ரீதியான பிரச்சனைகள் எனப் பலவகைப்படும். பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மேற்சொன்ன பிரச்சனைகளையும் காவல்துறை தலைமேற்கொண்டு செய்து வருகிறது.

சாதாரண காலங்களில் ஏற்படும் பிரச்சனைகளை விட கோவிட்-19 போன்ற நோய்கள் தாக்கும் போதும், இயற்கை பாதிப்பின் போதும் மூத்தக் குடிமக்கள் அதிகமான பிரச்சனைகளை சந்திக்கின்றனர், அந்த நேரங்களில் அவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்திப் பார்ப்பது அவசியம்.

கோவிட்-19 முழு அடைப்பு இருந்த கடந்த ஆண்டுகளில் தனியாக இருக்கும் மூத்தக் குடிமக்கள் யார் யார் என்று கணக்கெடுத்து அவர்களை சந்தித்து அவர்களின் உணவு, மருத்துவம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளை அறிந்து காவல்துறையில் தெரிவிக்க 'Reach me' என்ற செயலி மூலம் தன்னார்வத் தொண்டர்கள் காவல்நிலைய வாரியாக சேகரிக்கப்பட்டு மூத்தக் குடிமக்களின்தொடர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களின் தேவைகளை, முக்கியமாக மருத்துவத் தேவைகளை அறிந்து தன்னார்வலர்கள் சொல்லும் பட்சத்தில் அதற்கான ஏற்பாட்டை அரசு மூலமாகவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் நிறைவேற்றி மூத்தக் குடிமக்கள் முழுமையாக பாதுகாக்கப்பட்டனர்.

மூத்தக்குடிமக்கள் பாதுகாப்புச் சட்டப்படி அவர்களுக்கு உறவினர்களிடமிருந்தோ அல்லது வேறு எவரிடமிருந்தோ இன்னல்கள் வரும் பட்சத்தில் நிர்வாகத்துறை நடுவர் (Executive Magistrate) அலுவலகத்தில் மனு கொடுத்து அதற்கான நிவாரணத்தை பெற முடியும். இந்த சட்டம் மிகவும் பயனுள்ள சட்டமாக இருந்தபோதிலும் இதைப் பற்றிய விழிப்புணர்வும், பயன்படுத்தும் முறைகளும் இன்னும் பெரும்பாலான மூத்த குடிமக்களுக்கு சென்று சேரவில்லை. அப்படியே தெரிந்து இருந்தாலும் அதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் காரண-மாக அதன் முழு நிவாரணம் தேடும் மூத்தக் குடிமக்கள் குறைவாகவே இருக்கின்றனர்.



இந்தச் சட்டப்படி ஒவ்வொரு காவல் நிலையத்திலும் காவல்துறைக்கும், மூத்தக் குடிமக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கு மூத்தக் குடிமக்கள் தரப்பிலிருந்து ஒரு நபரை நியமனம் செய்து அதன்மூலம் குறைகளை முறையிட்டு உரிய நிவாரணம் தேடிக்கொள்ள வழி உள்ளது. ஆனால் அது இன்னும் பல இடங்களில் முழுமையான செயல்பாட்டுக்கு வரவில்லை.

ஆகவே முதியோர் பாதுகாப்பு சட்டம் பற்றிய விழிப்புணர்வு மூத்தக் குடிமக்களுக்கும், காவல்துறையினருக்கும் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். இந்த சட்டம் மூலம் நிவாரணம் பெற உள்ள வழிமுறைகளையும், நடைமுறைகளையும் எளிதாக்க வேண்டும். மேலும் முதியோர் பாதுகாப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்ய அவர்களுக்கு உதவி செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இலவச சட்ட உதவி அளிக்க சட்டப் பணிக்குழு மூலம் வழக்கறிஞர்களும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் குடிமக்கள் மத்தியில் ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி பெற்ற பிள்ளைகள் அவர்களை கைவிட்டாலும், காவல்துறை அவர்களை கைவிடாது என்ற உறுதியை ஏற்படுத்திகிறோம்.

நான் காவல் கண்காணிப்பாளராக திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் பணிபுரிந்தபோது மூத்தக் குடிமக்களின் குறைகளை களைவதற்கு தனி குறைத் தீர்ப்பு முகாம் நடத்தி அதன் மூலம் அவர்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து நிவாரணம் பெற முடிந்தது.

பின்னர்நான் மயிலாப்பூர், துணை ஆணையராக பணிபுரிந்த பொழுது அப்பகுதியில் குடிசைப் பகுதியில் வாழ்ந்து வந்த மூத்தக் குடிமக்கள் படும் துன்பத்தை பார்த்து ஒரு நாள் முழுவதும் அவர்களுக்கென பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அவர்களை மகிழ்வித்து, வயதான காலத்தில் இருக்கும் தனிமையை போக்க அவர்களின் பேரன், பேத்தியுடனும், மற்ற குழந்தைகளுடனும் இணைப்பை பலப்படுத்தும் வகையில் அவர்களுக்கு கதை சொல்வதற்கு வாய்ப்பும், அந்தக் கதைகளை கேட்டு குழந்தைகள் மகிழ்வதற்கும் மூத்தக் குடிமக்களின் முக்கியத்துவத்தை உணரவும் வழிவகை செய்யப்பட்டது. அது தொடர்ந்து செயல் படுத்தப்பட்டது. காதலர் தினத்தன்று தனியாக இருக்கும் மற்றும் கணவன், மனைவியாக வாழும் மூத்த குடிமக்களுக்கு அவர்கள் இருக்கும் இடத்தில் சென்று அவர்களுக்கு மலர் கொத்து வழங்கியும் அவர்களை சந்தித்து அன்பை வெளிப்படுத்தியும் அவர்களை கவனித்து கொண்டது நெகிழ்ச்சியை உருவாக்கியது.

நான் ரயில்வேத்துறையில் காவல்துறை துணைத்தலைவராக இருந்த பொழுது காவல்துறை தலைமை இயக்குநர் திரு. சைலேந்திரபாபு அவர்களின் ஆலோசனைப்படி ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் சுற்றித்திரியும் பிச்சைக்காரர்கள், மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள், வயதானோர் என அனைவரையும் காப்பாற்றி அவர்களை உறவினர்களிடம் சேர்த்தும், முதியோர் இல்லங்களில் ஒப்படைத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 800-க்கும் மேற்பட்டபேர்கள் இவ்வாறு பாதுகாக்கப்பட்டனர். அதில் பெரும்பாலானோர் மூத்தக் குடிமக்கள் ஆவர். இன்றுவரை அவர்களின் நலனைப் பேணி வருகிறோம்.

முதியோர் பாதுகாப்புக்காக ஒரு சில காவல் அதிகாரிகள் சிறப்பு திட்டங்களை ஏற்படுத்தி உள்ளார்கள். "வேர்களைத்தேடி" என்ற திட்டத்தின்படி மூத்தக் குடிமக்களை நேரில் சென்று பார்த்து அவரின் குறைகளை கேட்டறிந்து திருநெல்வேலி நகரக் காவல்துறையால் அவர்களின் குறைகள் களையப்பட்டன.

இளமை, முதுமை இரண்டும் எல்லோருக்கும் வரக்கூடிய இயற்கையின் நியதி. இளைஞர்கள் மூத்தக் குடிமக்களை கவனித்துக் கொள்ளவில்லை என்றால் அவர்கள் முதுமை நிலையை அடையும் பொழுது அவர்களுடைய குழந்தைகள் அவர்களை கவனிக்காமல் விட்டு தனிமை நிலையை அடையக்கூடும். ஆகவே மூத்தக் குடிமக்களை பாதுகாப்பது நம் கடமை மட்டுமில்லாது தேவையும் கூட.



# 'போர் வெற்றி கொண்டாடுவதற்கு அல்ல': பேராயர் டெஸ்மண்ட் டூட்டு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)




ஒரு செய்தியாளரின் வாழ்வில் சில தருணங்கள், பேட்டிகள், நிகழ்வுகள், புகைப்படங்கள், நேர்முக வர்ணனை, குண்டு வெடிப்புகளை அடுத்து எழும் புகை மண்டலங்கள், அற்புதமான மற்றும் தனித்துவமான செய்தி என்று அவர் கருதிச் சேகரிக்கும் தகவலும் செய்தியும் ஆசிரியரின் காழ்ப்புணர்ச்சியால் புறந்தள்ளப்படுவது போன்றவை மறக்க முடியாதவை. அவை மகிழ்ச்சி மற்றும் வேதனைகள் நிறைந்தவை.

செய்தியாளரும் செய்தியும் வெவ்வேறானவை என்பது ஊடகத்துறையில் பாலபாடம். ஆனால் சில நிகழ்வுகள் செய்தியாளர் என்பதற்கு அப்பாற்பட்டு தனிமனிதனாய் அந்தச் செய்தியாளரை நெகிழச் செய்யும். அதை வார்த்தைகளால் கூற முடியாது. அதை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே அது புரியும். செய்தியாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள் அனைவரும் வட கொரியாவின் அரச தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர் போன்று "ஓவராக அழுவதும்-மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பதும்" போன்றவர்கள் அல்ல. செய்தியாளர்களும் உணர்ச்சிகளைக் கொண்ட மனிதப் பிறவிகள் தான். மற்றவர்களுக்காக இல்லாவிட்டாலும் சில விஷயங்கள் ஒரு செய்தியாளருக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் பெருமிதத்தை உணர்த்தக் கூடும்.

அப்படியான மகிழ்ச்சி மற்றும் பெருமிதத்தை ஏற்படுத்திய ஒரு தருணம் தான் பேராயர் டூட்டுவை நான் பேட்டி கண்டது. ஒவ்வொரு கதைக்கும் பின்னும் ஒரு கதை உண்டு என்று ஊடகத்துறையில் கூறப்படுவதுண்டு. பேராயர் டூட்டுவுடனான பேட்டி எப்படிச் சாத்தியமாயிற்று என்பதே ஒரு தனிக்கதை.

29 நவம்பர் 2009 ஞாயிற்றுக்கிழமை. நான் பிபிசி தமிழோசையில் பணிபுரிந்த காலம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை எனக்கு விடுப்பு கொடுக்கப்படவில்லை. வெள்ளி, சனி ஆகிய வாராந்திர விடுப்பிற்குப் பிறகு எப்போதும் ஞாயிற்றுக்கிழமை பணி நாள். அடாவடித் தலைமையின் அராஜகமான செயற்பாடுகளில் அதுவும் ஒன்று. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள், அரச விடுமுறைகள், தமது பிள்ளைகளின் பாடசாலை விடுமுறைக்கு ஏற்ற வகையில் வருடாந்திர விடுப்பு, சொந்த காரியத்திற்காக இந்தியா செல்லும் போது, அதைச் சென்னை மற்றும் டில்லியில் இருந்த செய்தியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் என்று கூறி பிபிசி செலவில் ஊருக்குச் சென்று வந்தது போன்ற பல அராஜகங்களில் ஒன்றுதான் இந்த ஞாயிறு விடுப்பு என்பதும். அது தனிக்கதை.

அன்று காலை அலுவலகம் சென்ற போது லண்டனைத் தலைமையகமாக் கொண்டு இயங்கும் "தி எல்டர்ஸ்" என்கிற அமைப்பு இலங்கை தொடர்பாக அறிக்கை ஒன்றி வெளியிடவுள்ளது என்கிற ஒரு செய்தி கிடைத்தது. அந்த அறிக்கை பேராயர் டூட்டு அவர்களால் தென் ஆப்ரிக்காவிலிருந்து வெளியாகும் என்றும் தகவல் கசிந்தது. உடனடியாக எனக்குள் இருந்த ஊடக ஆர்வம் மேலோங்கியது. அறிக்கை வரும் முன்னரே நாம் அவரிடமே பேசினால் சிறப்பாக இருக்குமே என்று ஒரு எண்ணம்! ஆனால் இரண்டு மணி நேரத்திற்குள் தொடர்பு கொண்டு எப்படிப் பேசுவது, பேட்டி எடுப்பது, இதிலேயே கவனம் செலுத்தி நேரத்தை செலவிட்டு பிறகு அது சாத்தியப்படவில்லை என்றால் என்னவாகும் போன்ற பல கேள்விகள். இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று முடிவெடுத்தேன்.



சரி, அவரை எப்படித் தொடர்பு கொள்வது. உடனடியாக அடுத்த அறையிலிருந்த ஆப்பிரிக்க மொழி சேவைகளில் இருந்த நண்பர்களிடம் வி'யத்தைச் சொல்லி உதவ முடியுமா என்று கேட்டேன். முயல்கிறோம், முடிந்தால் தொடர்பு எண் எடுத்துத் தருகிறோம், ஆனால் அவரது தகுதியை வைத்து பார்க்கும் போது அவர் உனக்கு (ஆப்பிரிக்கர் அல்லாதவருக்கு) பேட்டியளிப்பாரா அதுவும் தொலைபேசி வழியே என்று ஒரு வினாவை எழுப்பினார்கள். நீங்கள் தொடர்புக்கான எண்ணை தாருங்கள் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி உடனடியாக கலையகம் சென்று எண்ணை சுழற்றினால் முதல் ஏமாற்றம். "இந்த எண் தற்போது உபயோகத்தில் இல்லை, தயவு செய்து எண்ணை சரிபார்க்கவும்" என்ற பதிலே கிடைத்தது.

உடனடியாக அடுத்த செயலில் இறங்கி ஜொஹனஸ்பர்க்கிலுள்ள பேராயர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்ட போது, சிறிது நம்பிக்கை ஒளி பிறந்தது. அவர்கள் வேறொரு எண்ணைக் கொடுத்து தொடர்பு கொள்ளுமாறு கூறினர், அங்கிருந்து வேறொரு எண் பிறகு இதர வேலைகளை பார்ப்போம் என்ற முடிவுக்கு வரும் தருவாயில் வேறொரு எண் கிடைத்தது. அந்த எண்ணில்- "அவரது கைப்பேசி எண் இல்லை, வீட்டு எண் வேண்டுமானால் தருகிறோம் முயன்று பாருங்கள்" என்ற பதில் கிடைத்தது. எண்ணை சுழற்றினேன். அடித்தது அதிர்ஷ்டம். திருமதி டூட்டு அழைப்பை எடுத்தார். அவரிடம் விநயமாக எனது கோரிக்கையை வைத்தேன்.

"மகனே.....பேராயர் தேவாலயம் சென்றுள்ளார்......இன்னும் ஒரு மணி நேரத்தில் மதிய உணவிற்காக வீட்டிற்கு வருவார்.....அப்போது தொடர்பு கொள்ளுங்கள்.....பிறகு அது உங்களுக்கும் அவருக்குமான விடயம்.....கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கட்டும்".

அந்த ஒரு மணி நேரம்- பிரசவ வேதனை. "அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை" ஆகிவிட்டால் என்ன செய்வது? இந்த சிந்தனைகளுக்கு இடையே அந்த பேட்டி சித்தியாகக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இருந்த பல நண்பர்கள் அடிக்கடி "துக்கம் விசாரித்தபடி" இருந்தனர். இதில் மேலும் ஒரு சிக்கல் இருந்தது. அவரது பேட்டி ஆங்கிலத்தில் இருக்கும், அதைத் தமிழோசை வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்ப மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும், அதற்கும் நேரம் வேண்டுமே. அடுத்த மேசையில் அமர்ந்திருந்த பிபிசியின் சிங்கள சேவையான "சந்தேஷ்யவில்" இருந்த நண்பர்கள், "சிவா.... பேட்டி முடிந்தவுடன், எமக்கும் அதலிருந்து சில பகுதிகளை வெட்டித் தர முடியுமா?" இதேவேளை லண்டன் நேரம் மாலை 5.30 மணிக்கு பிபிசியின் உலகத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்க வரும்படி அழைப்பு.

ஒரு வழியாக ஒருமணி நேரத்திற்குப் பிறகு ஆண்டவனை பிரார்த்தித்துக் கொண்டு பேராயருக்கு அழைப்பெடுத்தேன். திருமதி டூட்டு எடுத்து "காத்திருக்கவும்-அழைக்கிறேன்" என்றார். பேராயர் வந்தார், வணக்கம் கூறி வேண்டுகோளை முன்வைத்தேன். தேவாலயத்திலிருந்து மிகவும் களைப்பாக வந்துள்ளதாகக் கூறினார்.

"ஐயா, 2-3 நிமிடங்கள் நீங்கள் நேரம் அளித்தால் மிகவும் மகிழ்ச்சியளிக்கும், போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உங்கள் செய்தி ஆறுதலை அளிக்கும் என்று சற்று அழுத்தமாக வேண்டுகோளை வைத்தேன்.

"சரி, நான் வயதானவர், எனவே உங்கள் வேண்டுகோள் படி 2-3 நிமிடங்கள் பேசலாம்" என்றார்.

பேட்டி ஆரம்பித்தது........நீண்டுகொண்டே சென்றது.......13 நிமிடங்களையும் தாண்டியது......... "நான் இன்னும் பகல் உணவு சாப்பிடவில்லை என்பதை நினைவூட்டுகிறேன்".

"மன்னிக்க வேண்டும் ஆயர் அவர்களே....இன்னும் ஒரேயொரு கேள்வி....உங்கள் ஆசியுடன் விடைபெறுவேன் என்று கூறி" அந்த கேள்வியைக் கேட்டேன். பொறுமையாக பதில் கூறியவர், "இந்த பேட்டியின் மூலம் தமிழர்களுக்கு நல்லது நடந்தால் நான் மகிழ்வேன்" என்று கூறியோடு, "நீங்கள் ஒரு மிகச்சிறந்த செய்தியாளர், 2-3 நிமிடங்கள் என்று கூறி 15 நிமிடங்கள் வரை உரையாடினீர்கள். மகிழ்ச்சி. கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கட்டும்" என்று அவர் பகல் உணவிற்குச் செல்ல நான் எனது மேசைக்கு ஓடி வந்தேன். பிறகு பேட்டியை விட மிகப் பெரிய வேலையான "வெட்டி ஒட்டுவது" (எடிட்டிங்) தொடங்கியது. அவர் கூறியதிலிருந்த முக்கிய விஷயங்களை துண்டு துண்டாக வெட்டி மொழிபெயர்ப்பைச் செய்து முடிந்தேன். மூச்சு வந்தது. அப்படியே சிங்கள சேவைக்கும் அதே பேட்டியின் துண்டுகளை அளிக்க அவர்களும் அதை மொழிபெயர்த்து எங்களை போலவே தலைப்புச் செய்தியாக்கினர்.




அவர் என்னுடன் உரையாடியதை ஒளிபரப்பி பிபிசியின் உலகத் தொலைக்காட்சி ஒளிபரப்பு என்னைப் பேட்டி கண்டது. அவர் கூறிய கருத்துக்கள், அது தொடர்பில் எனது எண்ணம், இலங்கை அரசு எப்படி இதற்கு பதிலளிக்கும் போன்றவை விவாதத்தில் இடம்பெற்றன.

அந்த பேட்டியில் அவர் கூறிய முக்கியமான விஷயம் இதுதான்.

"நம்பிக்கை இல்லையென்றால் நீடித்திருக்கும் சமாதானம் சாத்தியம் இல்லை. இராணுவ வெற்றி ஒன்றைப் பெற்றுள்ள இலங்கை அரசு, அதன் மூலம் பெற்ற ஆதாயங்களை விரயமாக்க கூடாது. தமிழ் மற்றும் இதர அனைத்து சிறுபான்மையின மக்களுக்குக் கடமையாற்ற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது".

"இலங்கைக்கு தற்போது தேவையான ஒன்று, தொலை நோக்குப் பார்வை கொண்ட உறுதியான தலைமையே. அந்தத் தலைமை கடந்த காலங்களில் இருந்த பிரிவினைகள் மற்றும் வேற்றுமைகளைக் களைந்து உண்மையான இணக்கப்பாடு, சமாதானம், கௌரவமான வாழ்க்கை ஆகியவை அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்".

"நீங்கள் நேரடியாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு சொல்ல விரும்பும் செய்தி என்ன?

"ஒரு இனத்தை மற்றொரு இனம் நசுக்கி ஒடுக்குவதை இறைவன் பொறுக்க மாட்டார். அப்படியான நடவடிக்கை மனித குலத்திற்கு எதிரான குற்றமே" என்று கூறிய பேராயர் டூட்டுவில் குரலில் இருந்த ஆழமான வேதனையை என்னால் உணர முடிந்தது.

நிறவெறிக் கொள்ளையை முடிவுக்குக் கொண்டுவருவதில் தீவிரமாக ஈடுபட்டதற்காக 1984 ஆம் ஆண்டு அவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

தென் ஆப்ரிக்காவில் நிறவெறிக் கொள்கை கொண்ட ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு அமைக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிதல் மற்றும் இணக்கப்பாட்டைக் காண்பது குறித்த குழுவுக்குத் தலைவராகவும் அவர் இருந்தார்.

"போரில் பெற்ற வெற்றி கொண்டாடுவதற்கல்ல, வெற்றி பெற்றவர்கள் பரந்த மனதுடன் நடந்துகொள்ள வேண்டும். தோல்வியடைந்தவர்களைச் சிறுமைப்படுத்தாமல், அவர்களது நியாயமான அபிலாஷைகளைக் கண்டறிந்து அதை உணர்ந்து அதை நிறைவேற்ற வேண்டும். அதில் தான் அவர்கள் பெற்ற வெற்றி தங்கியுள்ளது".

உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் அவருக்குத் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். தமது நெருங்கிய உறவு ஒன்றை இழந்த சோகம் அவர்களிடம் காணப்படுகிறது. இதுவே அவர் தமிழர்கள் மீது எந்தளவுக்கு அன்பு வைத்திருந்தார் என்பதற்குச் சான்றாகும்.



பேராயர் டெஸ்மண்ட் டூட்டுவின் வார்த்தைகளுக்கு இனியாவது இலங்கை அரசு செவிமடுத்தால் அதுவே அவருக்கான மிகப்பெரும் அஞ்சலியாக இருக்கும்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

STEELES
PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் சீனத்தூதுவர் யாழ்ப்பாணம் வந்திருப்பாரா?

- தீபச்செல்வன்

"ஆழக்கடல் எங்கும் சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று, தமிழீழ கடல் எங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று.." ஈழச் சிறுவர்களின் முணுமுணுப்பிற்குரிய இந்தப் பாடல் சங்ககாலம் தொட்டு தமிழர் வரலாறு முழுவதும் படர்ந்திருந்த ஆழக்கடல் போன்ற வரலாற்றை எளிமையாகச் சொல்கிறது. உலகத்தின் வியப்பிற்குரிய விடயமாக தமிழர்களின் கடல் பற்றிய அணுகுமுறைகள் துவங்குகின்றன. வரலாற்றின் முதல் காலம் எனச் சொல்லப்படுகிற சங்க காலத்திலேயே தமிழரின் கடல் படை ஆற்றல் நிறைந்திருப்பதை பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களின் வழியாக வியப்புடன் அறிந்திருக்கிறோம். வரலாற்றில் தமிழர்கள் கடல் குறித்துக் கொண்டிருந்த வீரத்தின் உச்சமாகவே ஈழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கடற்படை வரலாற்றின் பக்கங்களில் தன்னை பதிவு செய்திருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்த சீனத் தூதுவர் குய் சென் ஹாங் யாழ் மற்றும் மன்னார் கடல்களின் வழியே இந்தியாவை காண முயற்சித்துள்ளார். "இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம்" என்று குய் சென் ஹாங் கேட்டிருப்பது இந்தியாவுக்கான அச்சுறுத்தல் மாத்திரமல்ல, ஈழத் தமிழர்களை சூழப் போகும் அப்பாயத்தின் வெளிப்பாடுமாகும். இதில் சிங்களவர்கள்மீதான இலக்கும் உள்ளடக்கமே. ஏற்கனவே யாழ்ப்பாணத் தீவுகளை சீனா பெற முயற்சி செய்ததும் அதற்கு இந்தியா வெளிப்படுத்திய அரசியல் நகர்வுகளையும் கண்டிருக்கிறோம். இனப்படுகொலைப் போருக்கு ஆதரவு அளித்த சீனா அதற்குப் பிறகும் ஐ.நா அவையிலும் ஸ்ரீலங்காவை பாதுகாப்பதில் முன்னணி நாடாக நின்று செயற்படுவதற்கு பின்னாலும் ஆக்கிரமிப்பு நோக்கம் ஒன்று மாத்திரமே இருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு நகரில் துறைமுக நகரம் என நாட்டின் பகுதிகள் தாரை வார்க்கப்பட்டு இலங்கை சீனாவின் மாநிலமாக மாறி வருகிறது. அல்லது இலங்கைக்குள் சீனா ஒரு மாநிலம் ஆகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் அன்றைக்கு தமிழர்களின் தாயகத்தை கேட்டுத்தான் போராடினார்கள். அவர்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சொல்லி மாபெரும் இனப்படுகொலையுடன் ஒரு விடுதலை இயக்கத்தை அழித்த ஸ்ரீலங்கா அரசு இன்றைக்கு இலங்கையை துண்டாடி சீனாவுக்கு விற்றுப் பரிசளித்துக் கொண்டிருக்கிறது. தம் சொந்த நிலத்திற்காக போராடிய மக்களையும் போராளிகளையும் இனப்படுகொலை செய்த இலங்கை அரசு இன்று தமது நிலத்தை இன்னொரு நாட்டிற்குக் தாரை வார்ப்பதையே தேசப்பற்று என்கிறார்கள் ராஜபக்ச குடும்பத்தினர்.

தென்னிலங்கையை மெல்ல மெல்ல கைப்பற்றிய சீனா தற்போது வடக்கிலும் குறி வைத்திருப்பதன் வெளிப்பாடாகவே சீனத் தூதுவர் குய் சென் ஹாங் அவர்களின் வடக்கு விஜயம் அமைந்துள்ளது. அத்துடன் வடக்கில் மூன்று நாட்கள் தங்கியிருந்ததுடன் தமிழர்களின் வரலாற்று மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை எல்லாம் சென்று பார்த்துள்ளார். குறிப்பாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று அங்கு அந்த ஆலய விதிமுறைப்படி மேலாடையின்றி உட்சென்று வழிப்பாட்டில் ஈடுபட்டமை தமிழர்களின் மனங்களையும் ஆக்கிரமிக்கும் முயற்சி என்றே அரசியல் ஆய்வுகள் மதிப்பிடுகின்றன.

சீனா கொழும்பையும் அம்பாந்தோட்டையும் ஆக்கிரமித்த போதே பிரபாகரன் இருந்திருந்தால் சீனா வந்திருக்காது என்றும் பிரபாகரன் தன் சொந்த நிலத்திற்காக போராடினார், ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களோ சொந்த நிலத்தை அந்நிய நாடுகளில் தாரை வார்க்கின்றனர் என்று பல சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆக்குரோசமாகப் பேசினார்கள். வடக்கு கிழக்கின் பாதுகாப்புக்கு மாத்திரமல்ல தெற்கின் பாதுகாப்புக்கும் புலிகள்தான் தேவை என்றும் தலைவர் பிரகாரன் தான் தேவை என்றும் கோருகிற குரலாகவே இது அமைகிறது. விடுதலைப் புலிகள் இல்லாத ஸ்ரீலங்கா என்பது அபாயகரமாக மாறிவருகிறது. அன்றைக்கு வடக்கு கிழக்கு மாத்திரமின்றி ஒட்டுமொத்தமாக இந்த தீவு முழுவதையும் புலிகள் பாதுகாத்திருந்தனர் என்ற உண்மையை சிங்களதேசமே இன்று உணர்கிறது. அதற்கு அடிப்படையாக விடுதலைப் புலிகளின் கடற்படை கட்டமைப்பு வலுக்கொண்டிருந்தது. தமிழர்களிடம் வரலாறு முழுவதும் பரவியிருந்த கடற்படை ஆற்றல் புலிகள் இயக்கத்திடம் நவீன கடற்படையாக பரிணமித்தது.

அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஓசெர் மற்றும் மேனன் ஆகியோர் அண்மையில் புதுச்சேரி மாநிலத்தில் ஒரு ஆய்வு நிகழ்வில் பங்கெடுத்தனர். அதன் போது சோழர் என்பது ஒரு குறிப்பிட்ட வம்சாவழி இல்லை என்றும் அதன் ஒரு நிலத்தின் பெயர் என்றும் தமது ஆய்வுகளின் வழி கருத்துரைத்துள்ளனர். ஈழம் போலவே சோழம் என்பது தமிழ் நிலத்தின் பெயர் என்று அவர்கள் கூறுகின்றனர். குறிப்பாக கடற்படை ஆற்றலின் வழியாக சோழர்கள் இலங்கையை மாத்திரமின்றி இந்துனேசியா, கம்போடியா போன்ற நாடுகள் வரை தமது ஆட்சியை விரித்திருந்தனர். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே சங்ககாலத்தில் காவிரிப்பூம் பட்டினம் என்ற கடல் நகரத்துடன் சோழர்களின் கடற்வழிப் பயணமும் கடற்படை கட்டமையும் துவங்குகிறது.

பத்தாம் நூற்றாண்டில் சோழர்கள் தமது ஆட்சி எல்லைகளை இந்தியாவை விட்டு வெளியில் நகர்த்திய போது மக்களை பாதுகாக்கும் பலமான கடற்படை கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். கடலோரக் காவலர்கள், சுங்கப்படை, தனியார் படை முதலிய கடற்படை சார்ந்த பல்வேறு படைகளை உருவாக்கிய சோழர்கள் தாரணி, லூலா, வஜிரா போன்றபோர்க் கப்பல்களையும் பல்வேறு விதமான சிறிய ரகப் படகுகளையும் கொண்டிருந்தனர். அத்துடன் கடலில் போரிட பல்வேறு விதமான கடற்கலங்களையும் கடற்சமர் ஆயுதங்களையும் கண்டு பிடித்தனர். கடற்கொள்ளையினைத் தடுக்கும் சமாதான கால சுற்றுக்காவல் செய்தல், வாணிப கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், நட்பு கடற்கலங்களுக்கு பாதுகாப்பு அளித்தல், தாயக துறைமுகத்திற்கு அருகிலும் ஆழ்கடலிலும் கடற்சமர் புரிதல், கடற்கரை முகப்புக்களை உருவாக்குதல் அல்லது தேவையான நேரத்தில் படைக் குவிப்பைச் செய்தல், நேசநாட்டின் எதிரிகளுக்குப் பயணத் தடை ஏற்படுத்தல், எதிரியின் கடற்கலங்களை நாசப்படுத்தல் முதலிய இலக்குகளை சோழர் கடற்படை கொண்டிருந்தது.

சோழர்களின் இச் சாதனைகளின் பிறகு ஆயிரம் வருடங்களின் பின்னர் தலைவர் பிரபாகரன் ஈழ மண்ணில் கடற்புலிகள் அமைப்பை உருவாக்கினார். 1984இல் துவங்கப்பட்ட கடற்புலிகள் அமைப்பு 1990களில் இருந்து கடற்சமர்களைத் துவங்கியது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கிய பங்களிப்பை வழங்கிய கடற்புலிகள் அமைப்பு அதன் உள்ளே பல போர் சார்ந்து நவீனக் கட்டமைப்புப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவு, விடுதலைப் புலிகளின் ஈரூடகப் படையணி, புலிகளின் நீர்மூழ்கி கப்பல் பிரிவு என சோழர்களை விஞ்சிய கட்டமைப்பால் ஈழக் கடலை தமது பலமான பாதுகாப்பில் வைத்திருந்தது புலிகள் இயக்கம். அத்துடன் இந்துமா சமுத்திரத்திலேயே கடல் அமைதி நிலவ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பே ஆணிவேராக இருந்தது.

இத்தகைய வளமான கடற்படை பலத்தை சிதைத்தமையின் ஊடாகவே இன்றைக்கு சீனத் தூதுவர் வந்து நின்று அயல்நாட்டை போர் இலக்குடன் பார்ப்பதற்குரிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. இது சிங்கள தேசத்திற்குமான அச்சுறுத்தலே. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் இனப்படுகொலைப்போருக்காக ஸ்ரீலங்கா சில சர்வதேச நாடுகளிடம் பட்ட கடனுக்காகவும் இன்னும் பல அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்பதையே இந்த சமிக்ஞை உணர்த்துகிறது. அதே சமயத்தில் புலிகள் இருந்திருந்தால் அவர்களின் கடற்புலிகள் அமைப்பு சிங்கள மக்களுக்கும் இந்தியாவுக்கும் இப் பிராந்தியத்திற்கும் காவலாய் இருந்திருக்கும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.


## JOB POSTING - Project Coordinator

## Date: December 10, 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The project coordinator will report to the STSP President/Secretary and will work on.
Preparing proposals in consultation with STSP President and secretary, to obtain funds from various funding organization for society activities.
Ensuring all proposals for funding are submitted within the timeline specified.
Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Maintaining all documentations required for each project and communicating actions and issues to the board members.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.
Maintaining and updating the STSP web page periodically and also helping seniors to solve basic computer issues.
Supporting in organization of daily activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

Diploma in Accounting with three years of work experience in a computerized accounting environment or six years of work experience in a computerized accounting field.
Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Effective interpersonal, communication and organizational skills
Working knowledge of community resources, services for seniors in Peel and relevant government programs and policies
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Salary and benefits: Negotiable and according to the experience
Duration of engagement: Minimum of one year on part time basis with possible extension. Minimum 20 hours per week working hours required.

Deadline for application: December 31, 2021
Please forward your application with your updated resume by email to
info@peeltamilseniors.ca

Nadarajah Moorthy
Secretary
Cell: 416 473 5380, nmoorthy10@gmail.com
.




# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



EXPERIENCE THE DIFFERENCE

RE/MAX

REALTY I NC., BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX ACE

Experts In The Local Market

## அனைவருக்கும் எங்கள் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## Congratulations to our 2021 Award winning Agents!



**3 - 1286 Kennedy Rd. Toronto M1P 2L5 | ✆ 416.270.1111 | 🖷 416.270.7000**

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX
REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX ACE
Experts In The Local Market

# WE'RE HIRING

SALES REPRESENTATIVES & BROKERS
www.RemaxACE.com



3 - 1286 Kennedy Rd, Toronto M1P 2L5 | ✆ 416.270.1111 | 🖷 416.270.7000

# மரண அறிவித்தல்



பிறப்பு:
**11-10-1956**

இறப்பு:
**27-12-2021**

## திருமதி ரதிதேவி ஸ்ரீஸ்கந்தராஜா

(பேர்லின்-ஜேர்மனி)

**யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தி, திருகோணமலை, பேர்லின் (ஜேர்மனி) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி. ரதிதேவி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் பேர்லின் நகரில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (Excise Inspector and All Ceylon Wresler ) - தையல்நாயகி (முன்னாள் ஆசிரியை - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோகராஜா. கெங்காம்பிகை (முன்னாள் ஆசிரியை - புனித சூசையப்பர் கல்லூரி. திருகோணமலை) தம்பதியினரின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற கலா அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06-01-2022 வியாழக்கிழமையன்று மதியம் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை AM Hain 1- 13597 . Berlin நகர் ஜேர்மனியில் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்: ஸ்ரீஸ்கந்தராஜா (கணவர் - பேர்லின்): 17624778577
ஸ்ரீதர் (சகோதரர் - கனடா): (416) 846 3120

# குவேனியின் சாபம் சிறிலங்கா ஆட்சியாளர்களைத் துரத்துகிறது!

- கனடா நக்கீரன்

எனக்கு சாபத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் இலங்கையின் வரலாற்றைப் பார்க்கும் போது அது உண்மையாக இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது.

"ஒவ்வொரு வினைக்கும் **(action)** அதற்கு இணைவான எதிர்வினை உண்டு" என்பது அறிவியலாளர் நியூட்டன் அவர்களது மூன்றாவது விதி. எடுத்துக்காட்டாக இருவர் பனியின் மீது ஸ்கேட் (சறுக்குக் கத்திக் காலணி) அணிந்து ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு அசையாது நிற்கும் காட்சி. ஒருவர் உந்தித் தள்ளும் விசைக்கு ஏற்ப மற்றவரும் சரிசமமாக எதிர் விசை தருவார்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் "அரசியலில் பிழை செய்தால்,


குவேனியிடம் விஜயன் அடைக்கலம் கோருதல்



விஜயன் வருகை பற்றி இலங்கை அரசு வெளியிட்டு பிறகு வாபஸ் பெற்றுக்கொண்ட தபால் தலை

அறமே கூற்றுவனாய் நின்று தண்டிக்கும் புகழ்மிக்க பத்தினியை மனிதரே அன்றி முனிவரும் தேவரும் போற்றுதல் இயல்பு. முன்செய்த தீவினை சினந்து வந்து பயனைத் தோற்றுவிக்கும்" எனக் கூறுகிறது.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம் உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம். (பதிகம் 6)

இந்த மூன்று செய்திகளை முன்னிறுத்தியே இளங்கோ அடிகள் காப்பியம் படைத்துள்ளார். முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்பது பழமொழி. காலையில் கேடு செய்தால் மாலையில் துன்பம் வரும் என்பது நேரிடையான பொருள். செயலுக்குத் தானாகவே விளைவு வரும். அது உடனடியாகவும் இருக்கலாம் அல்லது பல ஆண்டுகள் கழித்தும் வரலாம்.

இலங்கையின் வரலாறு விஜயனும் அவனோடு வந்த அவனது 700 தோழர்களோடுதான் தொடங்குகிறது. அவனைப் பற்றிய கதை எல்லோருக்கும் தெரியும். வட இந்தியாவில் உள்ள வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் ஒரு காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்டை ஆண்டவன் சிங்கபாகு. இவன் ஒரு சிங்கத்துக்கும் வங்கநாட்டு இளவரசிக்கும் பிறந்தவன். இவன் தனது உடன்பிறப்பான சிங்கவல்லியைத் திருமணம் செய்து கொள்கிறான். இவர்களுக்கு 16 இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. அவர்களில் மூத்தவன் விஜயன் ஆவான். அவன் முரட்டுக் குணம் படைத்தவன். குடிமக்கள் அவனைப் பற்றி அரசனிடம் முறையிட அரசன் அவனுக்கும் அவனது தோழர்களுக்கும் மொட்டையடித்து ஒரு கப்பலில் ஏற்றி நாடுகடத்தி விடுகிறான். அந்தக் கப்பல் இலங்கையின் வடமேற்குக் கரையை கிமு 543 இல் வந்து சேருகிறது.

விஜயன் கப்பலை விட்டு இறங்கி, இலங்கைத் தீவில் காலடி வைக்கிறான். அங்கு ஒரு மரத்தடியில் குவேனி அமர்ந்திருக்கிறாள். இவள் இயக்கர் அல்லது இராட்சதர் குலத்தைச் சேர்ந்தவள். இலங்கையை ஆண்ட இராவணன் இராட்சதன் என்று கூறப்பட்டதுபோல, மகாவம்சம் குவேனியையும் இராட்சத குலம் என்று வர்ணிக்கிறது. பண்டைய காலத்தில் இனங்கள் இருக்கவில்லை. குடி, குலங்கள் இருந்தன. குடிகள் பெருகி குலங்கள் ஆகின. குலங்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டன. நாகர், இயக்கர், இராட்சதர், இடும்பர், பூதர், அசுரர், அவுணர், கருடர், வேடர், கந்தருவர், வானரர் என அழைக்கப்பட்டார்கள்.

குவேனியை விஜயன் சந்தித்து அடைக்கலம் கோருகிறான். அவள் அடைக்கலம் அளிக்கிறாள். இருவருக்கும் காதல் ஏற்பட்டு, திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறக்கிறார்கள்.

விஜயனும் அவனுடைய 700 தோழர்களும் பல நகரங்களையும், கிராமங்களையும் உருவாக்குகிறார்கள். அந்தப் பகுதிகளை உள்ளடக்கிய இராச்சியத்துக்கு மன்னனாகும்படி, விஜயனை கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால், விஜயன் மறுத்து விடுகிறான்.

"இராச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசியை நான் மணந்தால்தான், அரியணை ஏறமுடியும்" என்று கூறுகிறான். இதன் காரணமாக, விஜயனின் தோழர்கள் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைக்குச் செல்கிறார்கள். மதுரையை ஆண்ட மன்னனுக்கு முத்துக்கள், தங்க நகைகள் முதலியவற்றை பரிசாக வழங்கி, தங்கள் மன்னனான விஜயனுக்கு இளவரசியை மணமுடித்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறார்கள்.

இதற்கு பாண்டிய மன்னன் சம்மதிக்கிறான். பாண்டிய இளவரசியுடன், விஜயனின் 700 தோழர்களுக்கும் 700 பெண்களை தேர்வு செய்து, இலங்கைக்கு அனுப்பி வைக்கிறான். பாண்டிய இளவரசி தன்னை மணப்பதற்கு இசைந்து இலங்கைக்கு வந்து விட்டதை அறிந்து விஜயன் மிகவும் மகிழ்ச்சி அடைகிறான்.

விஜயன் என்பவனுக்கு பாண்டிய மன்னன் ஒருவன் பெண் கொடுத்தான் என்ற செய்தி பாண்டியர்களது வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. எனவே இது கட்டுக்கதையாக இருக்க வேண்டும்.

விஜயன், குவேனியை விளித்து "நான் பாண்டிய இராசகுமாரியை மணக்கப்போகிறேன். என்னுடைய இரண்டு குழந்தைகளையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, இங்கிருந்து போய்விடு" என்று கூறுகிறான். இதனால் வேதனை அடைந்த குவேனி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு "லங்காபுரா" என்ற இடத்துக்கு போய்விடுகிறாள். அவளை அவளது குலத்தவர்கள் கொன்றுவிடுகிறார்கள்.

இந்தக் கதை இன்றைய சிங்கள இனத்தவர்களுக்கு துளியளவும் பெருமை சேர்ப்பதாக இல்லை. எனவே சிங்கத்துக்கு பிறந்த பிள்ளைகள், நாட்டில் இருந்து துரத்தப்பட்ட விஜயன் கதையை இன்று மறக்க அல்லது மறுக்க விரும்புகிறார்கள்.

இலங்கை அரசு 1956 ஆம் ஆண்டு **"விஜயனின் வருகை"** எனக் குறிப்பிட்டு ஒரு 10 சத சிறப்பு முத்திரையை வெளியிட்டது. அது விஜயனும் அவனது 700 தோழர்களும் கிமு 543 இல் தோணிகளில் வந்து 2,500 ஆண்டுகள் நிறைவாகியதைக் கொண்டாடு முகமாக வெளியிடப் பட்டது. அதில் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கைக் கரையை வந்தடைந்த போது அங்கு இயக்கர் குல அரசியான குவேனி ஒரு மரத்தின் கீழ் இருந்து கொண்டு நூல் நூற்றுக் கொண்டிப்பது போன்ற சித்திரம் வரையப்பட்டிருந்தது. இது விஜயன் வந்தேறி என்பதை எண்பிப்பதுபோல இருந்து விட்டது. சிங்கள – பவுத்த தீவிரவாதிகளின் கடுமையான எதிர்ப்பை அடுத்து அந்த முத்திரை அவசர அவசரமாகத் திரும்பப் பெறப்பட்டது.

எனவே இன்று சிங்களவர்கள் தாம் சிங்கத்தின் வம்சம் அல்ல, விஜயன் இலங்கையில் காலடி எடுத்து வைத்த பின்னரே சிங்கள இனத்தின் வரலாறு தொடங்கவில்லை என வரலாற்றைத் திரிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.



இப்போது தாங்கள் விஜயன் வருகைக்கும் முற்பட்ட பூர்வீக குடிகள் என்பதை எண்பிக்க இலங்கை வேந்தன் இராவணனை தோளில் சுமக்க முற்பட்டுளார்கள்.

இந்தப் புதுக் கோட்பாட்டை விலைப்படுத்த பல அமைப்புக்கள் தென்னிலங்கையில் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றில் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் அவர்களது இராவண பலய ஒன்றாகும். இராவண சேனை, சிங்கள பலய என்ற பெயர்களிலும் அமைப்புகள் இயங்குகின்றன. இந்த அமைப்புகளுக்கு பவுத்த தேரர்களே தலைமை தாங்குகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் இலங்கை அரசு சிங்களவர்கள் இராவணனின் சந்ததியினர் என்பதை எண்பிக்க பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

குவேனிய, விஜயன் ஏமாற்றிவிட்டு வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் ஆத்திரமடைந்த குவேனி சாபம் இடுகிறாள். இலங்கையில் சிங்கள சந்ததிகள் யாராலும் நிலையான அரியணையில் அமர முடியாது என்று சாபம் விடுகிறாள். இலங்கை வரலாற்றைப் படிப்பவர்களுக்கு குவேனியின் சாபம் இன்றுவரை பலித்து வருவது தெரிய வரும்.

மகா வம்சத்தின் (கிமு 543 கிபி 275) சிங்கள அரசர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் பலவீனமானவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்ததை மகாவம்சத்திலிருந்தே காணலாம். இந்த வம்சத்தின் 54 மன்னர்களில், 15 பேர் ஓர் ஆண்டிற்கும் குறைவாகவும், 30 பேர் நான்கு ஆண்டுகளுக்கு குறைவாகவும், 11 பேர் அரியணையில் இருந்து நீக்கப்பட்டனர், ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டனர், 13 பேர் போரில் கொல்லப்பட்டனர் மற்றும் 22 பேர் அவர்களின் வாரிசுகளால் கொல்லப்பட்டனர். தொடக்ககால சிங்கள அரசர்களின் இருண்ட அவலமான பதிவு அரியணைக்கான இடைவிடாத போராட்டம், சகோதரக் கொலைகள், சதிகள் மற்றும் உள் சண்டைகள் ஆகியன இடம் பெற்றன.

இன்று 73 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் இலங்கைத் தீவு வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாது ஓட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சிக் கட்டிலில் இருக்கும் இராசபக்சா வம்சம் எப்போது கப்பல் கவிழும் என்ற பயத்தில் இருக்கிறார்கள்.

நெருக்கடிகள் ஒன்றா இரண்டா? அவை வரிசையாக எழுந்து நிற்கின்றன. எல்லா நெருக்கடிகளுக்குள்ளும் தலையாய நெருக்கடி வெளிநாட்டு நாணய கையிருப்பு ஆகும். 2019 ஆம் ஆண்டுக் கடைசியில் அ.டொலர் 7.5 பில்லியன் ஆக இருந்த வெளிநாட்டு நாணய கையிருப்பு இரண்டு நாட்களுக்கு முன்னர் அ.டொலர் 1.3 பில்லியன் ஆகக் குறைந்திருந்தது. ஆனால் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் **(Ajith Nivard Cabraal)** மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய செலவாணி கையிருப்பு இன்று அ.டொலர் 3.1 பில்லியன் ஆக அதிகரித்துவிட்டதாக சொல்கிறார். ஆனால் எப்படி, யாரிடமிருந்து அந்த நிதி கிடைத்தது என்பதை ஆளுநர் சொல்லவில்லை. சீனா 10 பில்லியன் யுவானைக் நாணய மாற்று முறையில் கொடுக்கும் என்ற செய்திதான் வந்திருந்தது. எது எப்படியிருப்பினும் கடன்தான் வெளிநாடுகளிடம் பெற்ற கடன்தான் நாணய இருப்பாகக் காட்டப்படுகிறது.

ஆனால் இந்த நாணய இருப்பு யானைப் பசிக்கு சோழப் பொரி போட்ட கதையாகத்தான் இருக்கும். காரணம் இலங்கையின் மொத்த வெளிநாட்டு நாணயக் கடன் அ. டொலர் 35.1 பில்லியன் ஆகும். இதில் அடுத்த ஆண்டு அ.டொலர் 4.5 பில்லியன் கடனைக் கட்ட வேண்டும். அடுத்த ஆண்டு அ.டொலர் 4.2 பில்லியன் கட்ட வேண்டும்.

2014 ஆம் ஆண்டு தொடக்கம் கடன் கொடுப்பனவு அதிகரித்தவண்ணம் உள்ளது. கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.6 விழுக்காடாகும். இது போன்ற காரணங்களால் வெளிநாட்டு வெளிநாட்டு கடன் முகமைகள் இலங்கையின் கடன்வாங்கும் தகுதியை குறைத்துள்ளன.

புத்தாண்டில் நிதி, உற்பத்தி வீழ்ச்சி, பண வீக்கம், கோவிட், விலைவாசி ஏற்றம் போன்ற நெருக்கடிகளை இலங்கை அரசாங்கம் எதிர் நோக்குகிறது. மக்கள் பால் மா, சமயல் எரிவாயு, அரிசி, சீனிக்கு கியூவில் கால் கடுக்க நிற்கிறார்கள். மரக்கறி உட்பட பொருட்களை கிலோ கணக்கில் இல்லாது 250 கிராம் கணக்கில் வாங்குகிறார்கள். இந்த ஆண்டில் இதுவரையில் 825 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு துறைமுகத்தில் 300 அரிசி கொள்கலன்கள் உட்பட சுமார் 1,000 தேங்கிக்கிடப்பதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

குவேனியின் சாபம் ஒன்றல்ல ஒன்பது என்கிறார்கள். அவை சிறிலங்கா ஆட்சியாளர்களைத் துரத்துகிறது!

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.



பனங்கருப்பட்டி

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.



தேன் நெல்லி





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)


# அமெரிக்க விமானத்தில் ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திர சின்னமா?

- குரு அரவிந்தன்



அலாஸ்காவின் மிகப் பெரிய நகரமான அங்கரேய்ச்சுக்குச் சென்றபோது, அங்கே உள்ள அருங்காட்சியகத்திற்கும் ஒருநாள் சென்றிருந்தேன். வடஅமெரிக்காவின் பழங்குடி மக்கள் பற்றிய, வரலாற்று முக்கியம் வாய்ந்த பல அரிய பொருட்களை அங்கே காணமுடிந்தது. வட அமெரிக்காவின் முதற்குடிமக்களான இவர்கள், பல்லாயிரக் கணக்கான வருடங்களின் முன் ஆசியாவுடன் இருந்த நிலத் தொடர்பு காரணமாக, ஆசியாவில் இருந்து நிலம் வழியாக நடந்து வந்து இங்கு குடியேறினர். இவர்களைப் பற்றிய நிறைய தகவல்களை இந்தக் காட்சியகத்தில் சேகரிக்க முடிந்தது.

இந்தக் காட்சியகத்தில் விபத்தில் சந்தித்த மிகப் பழைய விமானங்களின் சிதைவுகளை-யும் ஓரிடத்தில் காட்சிப்படுத்தி இருந்தார்கள். அந்த விமானங்களின் சிதைவுகள் என்னைக் கவர்ந்ததற்குக் காரணம், "என்ன சொல்லப் போகி-றாய்?" என்ற எனது நாவலிலும் அலாஸ்காவில் விபத்தில் சந்தித்த ஒரு விமானம் முக்கிய இடம் பெற்றிருந்தது. அதனால்தான் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்ட ஒரு விமானத்தின் உடைந்த ஒரு




பகுதி என்னைத் திரும்பிப் பார்க்க வைத்தது. அது என்னவென்றால் ரஸ்யா நாட்டின் சிகப்பு நட்சத்திரம் பெரிதாகப் பொறித்த, இரண்டாம் உலக யுத்தத்தின் போது சுட்டு வீழ்த்தப்பட்ட ஒரு விமானத்தின் பா-கமாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் போது ரஸ்ய விமானத்தை இவர்கள் சுட்டு வீழ்த்தினார்களா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. ஆனால் அங்கே எழுதப்பட்டிருந்த பதாதையைப் பார்த்த போது, அந்த விமானம் உண்மையிலே அமெரிக்காவின் விமானம் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அமெரிக்காவுக்குச் சொந்தமான யுத்த விமானத்தில் ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திரமா?, எப்படி அது நடந்தது, எப்படி இது சாத்தியமாயிற்று என்ற கேள்வி எனக்குள் அப்போது எழுந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பிறந்தவர்கள் என்பதால், சிறுவயதில் பெரியவர்கள் தங்கள் அனுபவங்களைப் பற்றிச் சொன்னதைத் தவிர, அதைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. இந்த யுத்தத்தின் போது ஜெர்மனியால் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தில் ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திர சின்னம் எப்படி வந்தது என்ற கேள்வி எழுந்தபோது, அதைப்பற்றி அவர்கள் போட்டுக் காட்டிய விவரணப் படத்தையும் காத்திருந்து பார்த்தேன், அதன் பின் கணனி-யிலும் அதைப்பற்றித் தேடுதலும் செய்தேன். அப்போதுதான் எங்கள் காலத்திற்கு முந்திய பழைய வரலாற்று நிகழ்வுகள் சில தெரிய வந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது, அமெரிக்கா முதலில் யுத்தத்தில் ஈடுபடவே இல்லை என்பதும் ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலை அமெரிக்காவை உள்ளே இழுத்திருந்தது என்பதும் தெரிய வந்தது.

காட்சியகத்தில் பார்த்த சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் பாகத்திற்கு ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திரம் பதிக்கப்பட்டிருந்ததால், வரலாற்றில் இருந்த ஆர்வம் காரணமாக அதைப்பற்றி வினாவிய போது, பல விடயங்கள் தெரிய வந்தன.

இந்த உலக யுத்தத்தின்போது ஐரோப்பாவில் ஜெர்மனியும், இத்தாலியும் ஆசியாவில் யப்பானும் ஒன்று சேர்ந்து நாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அதாவது 80 வருடங்களின் முன், அமெரிக்காவின் எதிரிக-ளாக ஜெர்மனியும், யப்பானுமே இருந்தன. உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த பேர்ள் ஹாபர் தாக்குதலால் உத்வேகம் பெற்ற யப்பான் நாடு 1942 ஆம் ஆண்டு அலாஸ்காவுக்குச் சொந்தமான மேற்கேயுள்ள அலுற்றியன் தீவுக் கூட்டத்தில் அற்ரூ, கிஸ்கா என்ற இரண்டு சிறிய தீவுகளைக் கைப்பற்றி, அங்கு இராணுவ முகாமமைத்து அதைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த 40 அலுற்றியன்களையும் யப்பான் சிறைப்பிடித்துச் சென்றது. அலாஸ்காவில் இருந்து 1200 மைல்களுக்கு அப்பால் இத்தீவுக் கூட்டம் இருக்கின்றது. 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க கடற்படை யப்பானின் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கான உதவிகளை முதலில் தடுத்து நிறுத்தி முற்றுகையிட்டது. யப்பானிடம் பறிகொடுத்த அமெரிக்காவின் நிலம் இது ஒன்றுதான். இது அமெரிக்காவின் மானப்பிரச்சனையாக இருந்ததால், முற்றுகையைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்கா படைகள் திரும்பவும் யப்பானுடன் போரிட்டு அந்தத் தீவுகளை மீட்டெடுத்தன. அந்த யுத்தத்தைக் கொண்டு நடத்திய யப்பானிய பிரபலமான கேணல் யமாஸாக்கி இறந்ததும் இந்த யுத்தத்தில்தான். இந்த விபரங்களையும் காட்சியகத்தில் உள்ள படங்கள், மற்றும் பதாதைகளில் இருந்து தெரிந்து கொண்டேன்.

இது ஒருபுறம் நடக்க, இதே நேரத்தில் மறுபக்கத்தில் ஹிட்லரின் கட்டளைப்படி ஜெர்மனி, ரஸ்யா மீது போர் தொடுத்து, ரஸ்யாவின் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. ஜெர்மனியின் நவீன யுத்த விமானங்களான Luftwaffe விமானங்களோடு ரஸ்யாவின் யாக்-3 விமானங்கள் சரிசமனாகப் போரிட்டதால், ஜெர்மனிக்குப் பெரும் தலையிடியாக இருந்தது. இதனால் ரஸ்யாவின் ரெட் எயபோஸ் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதில் அதிக கவனம் செலுத்திப் பெருமளவில் ஜெர்மனி அவற்றை அழித்திருந்தது. விமானங்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் ரஸ்யா அமெரிக்காவின் உதவியை எதிர் பார்த்தது நின்றது. ஜெர்மனியை வீழ்த்த வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருந்த அமெரிக்கா இரகசிய-மாக ரஸ்யாவுக்கு உதவ முன்வந்தது. அதன-ால் ஜனாதிபதி பிராங்கிளின் றோஸ்வெல்ட்டின் ஆலோசனைப்படி சுமார் 8,000 விமானங்களை 1942 ஆம் ஆண்டு ரஸ்யாவின் "ரெட் எயபோஸ்" விமானப்படைக்குக் குத்தகை அடிப்படையில் கொடுக்க அமெரிக்கா முன்வந்தது. ஆனால் அப்போது ரஸ்யாவின் அதிபராக இருந்த ஸ்டாலின் விமானங்களை மட்டுமே தரும்படியும், அமெரிக்க விமானிகளை உள்ளே அனுமதிக்க முடியாது என்றும் வேண்டுகோளை விடுத்தார். இதனால் அலாஸ்காவில் வைத்து ரஸ்ய விமானிகளுக்குப் பயிற்சிளை அமெரிக்கா கொடுத்தது. இதன் போது குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட அமெரிக்க விமானங்களில் ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திர சின்னங்கள் பதிக்கப்பட்டன.

யுத்தகாலத்து இராணுவம் சம்பந்தப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் என்பதால், வெளிநாடுகளுக்கு இது தெரிந்திருக்கவில்லை. ரஸ்யாவின் விமானப்படையை அழித்துவிட்டதாக நம்பிய ஜெர்மனி, ரஸ்ய வி-மானப் படையின் தாக்குதல் இருக்காது என்ற நம்பிக்கையில், ரஸ்யாவில் அகலக்காலை வைக்கத் தொடங்கியது. திடீரென ரஸ்யாவின் சிகப்பு நட்சத்திரம் பதித்த அமெரிக்க விமானங்களை ஓட்டிய, அமெரிக்காவில் பயிற்சி பெற்ற ரஸ்ய விமானிகள் ரஸ்யாவின் வான்பரப்பைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் ஜெர்மனி குழம்பிப் போய் விட்டது. ஜெர்மனியின் உளவுத்துறையின் தகவலில் எங்கோ தப்பு நடந்து விட்டதை ஹிட்லர் புரிந்து கொண்டாலும், கடும் குளிர்காரணமாக, தாக்குப் பிடிக்க முடியாத ஜெர்மன் படைகள் ரஸ்யாவில் இருந்து பின்வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

யுத்தம் முடியும் வரையும் மேலதிகமாக 3,400 விமானங்கள் அமெரிக்காவில் இருந்து ரஸ்யாவுக்குக் கொடுக்கப்பட்டன. ரஸ்யாவின் "ரெட் எயபோஸ்" என்ற விமானப்படைக்கு 20 சதவீதமான விமானங்கள் அமெரிக்காவால் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. அலஸ்காவில் இருந்து சைபீரியாவுக்குச் செல்லும் விமானப் பாதையையே இவர்கள் பாவித்தார்கள். இதில் கனன் துப்பாக்கிகள் பொருத்திய பெல் பி-39 எயகோப்ரா விமானங்களே அதிகமாகக் கொடுக்கப்பட்டன. ஜெர்மனியின் விமானப்படை விமானங்களைச் சுட்டு வீழ்த்த இவ்வகை விமானங்கள் அவர்களுக்குப் போதுமா-னதாக இருந்தது. 48 ஜெர்மனிய விமானங்களைச் சுட்டு வீழ்த்திய ரஸ்ய விமானியான அலெக்ஸாந்தர் பொக்கிறிஸ்கின் இந்த விமானங்களைப் பற்றிப் பெருமைப்பட்டார். அதிலும் கியூ-5 ரகவிமானங்கள் அதிக வசதிகளோடு மேலானவையாக இருந்ததால் அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. மொத்தமாகக் கொடுக்கப்பட்ட விமானங்களில்




4719 பெல் பி-39 விமானங்கள் ரஸ்யாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. யுத்தம் முடிந்த போது, இதில் 1030 பி-39 விமானங்களை ரஸ்யா இழந்திருந்தது. யுத்தத்தின் போது, பிரான்ஸ் வி-மானிகள் பாவித்த ரஸ்யாவின் 37 யாக்- 3 விமானங்களைப் பிரான்சுக்கு அன்பளிப்பாக ரஸ்யா கொடுத்திருந்தது.

1945 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தி-கதி மேற்கிலும், 9ஆம் திகதி கிழக்கிலும் ஜேர்மனி முற்றாகச் சரணடைந்தது. இதைத் தொடர்ந்து 1945 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி, அமெரிக்காவின் அணுக்குண்டுத் தாக்குதலால் மி-கவும் மோசமாகப் பாதிப்படைந்த யப்பான் நாடும் சரணடைந்தது. அத்துடன் 2 ஆம் உலகயுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.



FAIR BANK

# கடந்தவையும் கடப்பவையும் (16)

- உமா மோகன் -

உயர்ந்த தென்னை மரங்கள் பல
நிறைந்த தென்னம் தோப்பு அது

களைத்து வந்தவர் இளைப்பு ஆறவே
இறங்கி நிற்கின்றோம் - அங்கும்

நெட்டையான மரங்கள் சில
வட்டுக்களை இழந்தவையாய் குட்டையாகி

உவமைக்கு உதவாமல் உருக்குலைந்து
வழமைக்கு மாறாக பொலிவிழந்தும் நிற்கின்றன

'அச்சுவேலித் தென்னம்பிள்ளை' என்பார்கள்
சற்றே கொஞ்சம் உயரமது கூடியோரை

பச்சைப்பசேலெனக் காய்கறித் தோட்டம்
இச்சைக்குரிய முந்திரித் தோட்டம் - என

அழகான தோட்டங்களை அடிகுறைந்த காலங்களில்
அதிகமாகக் கண்டதுண்டு - பின்னர்

முன்னிருந்த அழகை அங்கேயும் காணவில்லை
தன்னிறைவு வாழ்வால் நன்றாக வாழ்ந்தவர்கள்

அதிகாலைக் குண்டுகளுக்கு அஞ்சியதால்
எதிலும் பெரிதாய் நாட்டமது காட்டவில்லை,

என்பதனை உணர்ந்தவராய் தொடர்ந்தே
எம் தனி வண்டிகளில் பயணமதைத்
தொடங்குகின்றோம்,

அச்சுவேலி தாண்டிவிட்டால் எப்போவரும் - அந்த
தேத்தண்ணிக் கடை என்று மனம் கேட்கும்

வரம் பெற்ற கதை கொண்ட ஆவினத்தின் பால் எடுத்து
திறம்படப் போடுவார்கள் 'பால் ரீ' - அதை

சுடச்சுடத் தரும் வடையோடு அருந்தும் போது
அதைவிடச் சுவை ஏதும் இல்லை என்பார்

அங்கு அதை வாங்கி உண்டவர்கள்,
எங்களுக்கோ வாய்பதிகம் கிடைத்ததுண்டு

பின்னாளில் பல்கலைக்குப் போகும் போது
மூன்று வருடம் உருண்ட பாதை

'வேண்டவேண்டாம் பெடியள் வாறார்' என்பார்கள்
தாண்ட மாட்டேன் வாங்கும் வரை

கோதையர்கள் கோபமே கொண்டாலும்
மாறமாட்டேன் கொண்ட கொள்கை

வேறுவழி இல்லாது வாங்கவும் பழகினார்கள்
ஊறும் இந்த நாக்கு இப்போது நினைத்தாலும் - ஆனால்

ஓடிப்போன போது திறக்கவில்லை - அன்று
கூடிப்பலர் நின்று கூவி விக்கும் சந்தைகூட

ஆரவாரம் இன்றி அமைதியாய் இருக்க - அங்கு
ஓரிருவர் இருந்தே ஓட்டுகிறார் ஈயை - ஒரு காலம்


ஆவினங்கள் அதிகமாயும் அவை உண்ண
பசும்புல் தரைகள் நிரம்பியதாயும் விளங்கியதே

ஆவொன்று இருகால் கொண்டு நின்று இறைவனிடம்
வரமொன்று பெற்றதால் இப்பெயர் கொண்டதாகக் கூறப்படும்

'ஆவரங்கால்' என்ற காரணப் பெயர் கொண்ட - இவ் அழகிய ஊர்...

(தொடரும்)

# கனடா வாழ் "நிவாரணம்" செந்தில்குமாரனின் மனித நேய மற்றும் மனதைக் கவரும் இசைத் துறை பங்களிப்புக்கள்




கனடா வாழ் செந்தில்குமரன் பல்வேறு வழிகளில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களாலும் ஏனைய இனங்கள் சார்ந்த பலராலும் நன்கு அறியப்பெற்றவராக விளங்குகின்றார் என்பதில் சந்தேகமே இல்லை.

"நிவாரணம்" என்னும் மனித நேய நிறுவனத்தினை நிறுவி குறிப்பாக கனடா வாழ் தமிழ் மக்கள் பேராதரவோடு இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் நோயினால் வாடும் அல்லது உயிரைப் பறிக்கும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் மற்றும் அவசர சத்திரசிகிச்சை செய்து. இருதயம் சார்ந்த குறைபாடுகளிலிருந்து விடுபடுவது என நூற்றுக்கணக்கானவர்களுக்கு அருகில் இருந்து உதவுவது போன்று ஒரு உதவும் கரம் போல செயற்பட்டுவருகின்றார்.

இவரது இந்த மனித நேயப் பணிகளுக்கு "நான் முந்தி. நீ முந்தி" என்று தமிழ் அன்பர்கள் தொடர்ச்சியாக நிதி அன்பளிப்புகளை வழங்குவதும்.. இந்த உதவிகள் பலரது உயிர்களை இதுவரை மீட்டெடுத்துள்ளன என்பதும் இதுவரை பதிவு செய்யப்பட்ட உறுதியான தகவல்கள் ஆகும்.





இவ்வாறான செயற்பாடுகளில் ஓய்வின்றி உழைத்து உயிர் காக்கும் ஒரு தூதுவனாக விளங்கும் "நிவாரணம்" செந்தில் குமரன் அவர்கள் தான் உயிராக நேசிக்கும் இசைத் துறையிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார் என்பதும் எம்மைப் போன்ற சிலர் அறிந்துள்ள விடயமாகும்.

"மின்னல் இசைக் குழு" என்னும் இசைப் பிரிவை நடத்தி வரும் செந்தில் குமரன் அவர்கள் தானும் பாடி மகிழ்வதோடு மட்டுமல்லாது மின்னல் இசை நிகழ்ச்சிகள் மூலமும் நிதி சேகரித்து தனது "நிவாரணம்" அமைப்பிற்கு வலுச் சேர்த்து வருகின்றார்.

கனடிய விளம்பர நிறுவனமொன்றில் ஆலோசகராகவும், பங்காளராகவும் உள்ள இவர் முன்று மாகாணங்களில் வெற்றிகரமாக தொழில் செய்கிறார்.

நிவாரண அமைப்பின் செலவுகள் அனைத்தையும் தான் ஏற்று கொண்டு சேரும் முழு நிதியினையும் கணக்கறிக்கையோடு வெளியிட்டு வருகின்றார்.

அத்துடன் இசைத் துறை சார்ந்தவர்கள் வியக்கும் வண்ணம் சில பாடல்களை தேர்வு செய்து, அவற்றை காட்சிகளோடு பதிவு செய்து பிரமாண்ட மான முறையில் ஒளி ஒலி வடிவத்தில் தயாரித்து (மிகுந்த பொருட் செலவில்) இசை ரசிகர்கள் பார்த்தும் கேட்டும் ரசிக்கும் வகையில் படைத்து (Youtube) யுரியுப் வழியாக காட்சிப்படுத்தி வருகின்றார்.

இந்த வரிசையில் அண்மையில் மின்னல் இசைக் குழுவின் தயாரிப்பில் வெளியாகி உள்ள GO GO GOVINDA என்னும் பாடலை கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி ஏராளமான இசை மற்றும் நடனக் கலைஞர்களோடு இணைந்து அற்புதமாக படைத்தளித்துள்ளார்.

இதன் தயாரிப்பிற்கு கனடா வாழ் இசையமைப்பாளர் பிரவின் மணி அவர்கள் இசை வழங்கியுள்ளார். இது தொடர்பான முக்கிய விடயம் என்னவென்றால் தமிழ்த் திரையுலகின் பிரபல இசையமைப்பாளர் டி.இமான் அவர்களும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார். டி.இமான் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில். பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

Heartly wishes to the wonderful talents in Canada. My love goes to all. Congrats! Canada's Minnal Music Team and Dear Brother Pravimani. Stay blessed.





# மாட்டுக் குடிலில் பிறந்த இயேசு பாலனை மகத்தானவராக போற்றி வணங்கும் 'நத்தார் பண்டிகை'

அகன்று பரந்த உரோமை இராச்சியத்தின் சீசர் அரசனாகபதவியேற்ற போது அவன் தன்னை சாம் பிராந்தியத்தின் செசார்என்றும் யூலியஸ் தெய்வத்தின் மகன்என்றும் தந்தையர் நாட்டின் தந்தைஎன்றும் குருக்களின் முதல்வன் என்றும்அழைத்துக் கொண்டான். அவன் தனது ஆளுகைக்கு உட்பட்ட நாட்டின் மக்கள் தொகையை கணக்கிடுமாறு ஆணை பிறப்பித்தான்.

ஆணையை நிறைவு செய்யவே சூசை மாதவன் நிறைமாத தாய்மை நிலை அடைத்திருந்த அன்னை மரியாளை அழைத்துக் கொண்டு கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். அங்கு விண்ணவர் பண்ணிசைக்க, அதிசய விண்மீன் சாட்சியம் வழங்க, மேய்ப்பர்கள் உலகம் எதிர்பார்த்த நற்செய்தியைப் பெற இறைமகன் கன்னி மரியாள் வயிற்றில் அவதரித்தார்.

கடவுள் தம் மக்களை பாவம் எனும் இருளில் இருந்தும் அடிமை வாழ்வில் இருந்தும் விடுவிக்க தொடக்க காலம் முதல் பல இறைவாக்கினர்கள் வழியாக முயற்சித்தார். ஆனால் நாம் வாழும் இந்த காலத்தில் தன் ஒரே மகன் வழியாக அந்த மீட்பு எனும் பேரொளியை அளிக்கின்றார். ஆனால் நாமோ அவரது அன்பை உதறித் தள்ளி விட்டு இன்னும் உறங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இஸ்ராயேல் மக்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் ஆனால் பாவம் என்ற புதரில் வாழ்ந்த அம்மக்கள் விடுதலையை எதிர்பார்த்தவர்களாக வாழ்ந்தார்கள். மேலும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு அடிமைகளாக வாழ்ந்தனர். இத்தகைய இக்கட்டான சூழலில் கிறிஸ்து என்னும் தன் மகன் வழியாக மீட்பு உண்டு என்று இறைவன் கூறினார்.

நீங்கள் என்னை விட்டு விலகிச் சென்றாலும் நான் உங்களைத் தேடி வந்து விடுவிப்பேன் அதுவும், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று வாக்குறுதியும் கொடுக்கின்றார். தன்னுடைய அன்புப் பிள்ளைகள் கொத்தடிமைகளாக வாழ்வதைக் கண்ட கடவுள் மனமிரங்குகின்றார்.

ஒரு நொடி கூட தன் மக்களை மறக்காமல் மீட்பின் ஒளியினை, விடுதலை என்னும் ஒளியை தன் மக்களுக்கு அளிக்க தானே முன்வந்து குழந்தை வடிவில் எளிய முறையில் பிறக்கின்றார். குழந்தை வடிவில் பிறந்த கடவுள் இறந்தோரின் கடவுள் அன்று, மாறாக வாழ்வோரின் கடவுள். அவரிடம் இருக்கின்ற வாழ்வுதான் இன்று மனிதர்களாகிய நம் அனைவருக்கும் ஒளியாக இந்தச் சிறிய குடிலில் பிறந்துள்ளது.

கடவுள் மனிதனாக பிறந்தது மானிட குலத்தின் மாபெரும் கொடையாக அமைந்துள்ளது. பலமுறை பலவகைகளில் இந்த மீட்பு என்னும் ஒளியை, வாழ்வு என்னும் ஒளியை வழங்க முயன்ற கடவுள் தன் ஒரே மகனை உலகிற்கு அளிக்கின்றார். இது கடவுள் உலகின் மீது வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகிறது. வசதியான குடும்பத்தில் பிறந்தால் வாழலாம் என்ற மனித கண்ணோட்டத்தை முறியடித்து அனைவராலும் மிகவும் சிறியதாக கருதப்பட்ட யூதா நாட்டில் இருந்த ஒரு சிறிய ஊரான பெத்லகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தை தேர்ந்தெடுத்து தன்னுடைய அன்பு மக்களை மீட்க மடைமை என உலகம் கருதுபவற்றை கடவுள் தேர்ந்து கொண்டு மீட்பின் ஒளியை குழந்தை வடிவில் உலகிற்கு அளிக்கின்றார்.

கடவுளின் மீட்புக்கான ஞானிகள் பலர் வந்திருந்தனர் ஆனால் கடவுளோ சற்று வித்தியாசமாக சமுதாயத்தில் கடை நிலையில் உள்ளவர்களுக்கு தன்னை வெளிப்படுத்துகின்றார். காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் என்ற ஏசாயாவின் வார்த்தைக்கேற்ப, இடையர்கள் கடவுளின் மாபெரும் மீட்பின் ஒளியைப் பெற்று கொள்கின்றனர்.

அன்று பாலனாக பிறந்த இயேசு தன் பணி வாழ்வில் பாவிகளையும் நோயாளிகளையும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களையும் தானாகத் தேடினார். இதனால் அன்று ஏசாயா முன்னறிவித்த மீட்பின் பேரொளியை மக்கள் பெற்று புதுவாழ்வை பெற்றவர்களாய் புத்துயிர் பெற்றவர்களாய் கடவுளை தங்கள் உள்ளத்தில் ஏந்தியவர்களாய் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்தார்கள்.

இது இவ்வாறிருக்க, இன்றைய காலச் சூழ்நிலையில் நாம் எவ்வாறான நத்தார் விழாவைக் கொண்டாடுகிறோம் என சிந்திப்பது சாலச் சிறந்ததாகும். திருச்சபை வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப் படவில்லை. கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவே கொண்டாடப்பட்டது. அக்காலகட்டத்தில் அதிகமான வேதகலாபனை ஏற்பட்டு பல இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்து திருமறையை வேரூன்றச் செய்தனர்.

கிறிஸ்துவுக்குப் பின்னர் 325 இல் உரோம ராஜ்யத்தின் அரசமறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே 4ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் படிப்படியாக வளர்ந்து வந்த நத்தார் விழா பதினெட்டாம் நூற்றாண்டில் நத்தார் விழா குடும்ப விழாவாக மாற்றம் கண்டது.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் நுகர்வோர் கலாசாரத்தில் நத்தாரின் உண்மைத் தன்மை மறைந்து வெறும் ஆடம்பர விழாவாக, விளம்பரத்தின் விழாவாக வர்த்தக விழாவாக மாற்றம் கண்டுள்ளது. இதே நிலைதான் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடர்கின்றது.

அன்று மாட்டுக் குடிலில் பிறந்த அதே இயேசு பாலன் இன்று பாழடைந்து போன நமது உள்ளம் என்னும் குடிலில் ஒளியேற்ற வருகின்றார். நாமோ கடவுளுக்கு இடம் கொடுக்க மறுக்கின்றோம். ஏனெனில் நாம் சமூக தொடர்பு சாதனங்களுக்குள் மூழ்கி கிடக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து நாம் விடுபட்டு உண்மையான மகிழ்ச்சியான நத்தார் விழாவிற்குள் பிரவேசிப்போம்.

**- அம்புறோஸ் பீற்றர் (மறையாசிரியர்)**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%



கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மலேசிய மடல்

# தமிழ், சீனப் பள்ளிகள் அரசியல் சட்டப்பூர்வமானவை கோலாலம்பூர் உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச 30:



மலேசியாவில் இயங்குகின்ற தாய்மொழிப் பள்ளிகளுக்கு அரசியல் சாசனப்படி முழு அங்கீகாரம் இருப்பதாக கோலாலம்பூர் உயர் நீதிமன்றம் டிசம்பர் 29-ஆம் நாள் வரலாற்றுப்பூர்வ தீர்ப்பை அளித்துள்ளது.

மலேசியாவில் செயல்படுகின்ற தாய்மொழிப் பள்ளிகளுக்கு எதிராக கடந்த 2019-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி முகமட் நஸ்லான் முகமட் கஸாலி மேற்கண்ட அதிரடித் தீர்ப்பை வழங்கினார்.

மலேசியாவில் தமிழ் மற்றும் சீன மொழிகளை பயிற்றுமொழியாகக் கொண்டு சுமார் 1,800 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இத்தகைய தாய்மொழிப் பள்ளிகளின்வழி ஏறக்குறைய 500,000 மாணவர்கள் தங்களின் கல்விப் பயணத்தை தாய்மொழிவழி தொடர்கின்றனர்.

நாட்டின் சுதந்திரத்திற்கு முந்தைய மற்றும் பிந்திய சட்ட நடைமுறைகள், அரசியல் சாசன பிரகடனம் ஆகியவற்றை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நீதிபதி நஸ்லான் தன்னுடைய தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.







தீபகற்ப மலாய் மாணவர் கூட்டமைப்பு (ஜிபிஎம்எஸ்), இஸ்லாமிய கல்வி மேம்பாட்டுக் குழு (மாப்பிம்), மலேசிய எழுத்தாளர் சங்கக் கூட்டமைப்பு (கபீனா) ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் துன் மகாதீர் தலைமையிலான நம்பிக்கைக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் நாட்டிலுள்ள தாய்மொழிப் பள்ளிகளுக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டது.

1996 கல்விச் சட்டப் பிரிவுகள் 2, 17 மற்றும் 28-இன்படி, நாட்டில் தாய்மொழிப் பள்ளிகளின் செயல்பாடும் அவற்றில் மாண்டரின் மற்றும் தமிழ் மொழிகள் பயிற்று மொழிகளாக பயன்படுத்தப்படுவதும் அரசியல் சாசன விதி 152-இன் துணைவிதி (1)-க்கு முரணாக இருப்பதாக வாதிகள் தரப்பில் முன்வைக்கப்-பட்டது.

மேலும், மலேசியாவில் செயல்படுகின்ற தாய்மொழி பள்ளிகள், அரசியல் அமைப்புச் சட்ட விதிகள் 5,8,10,11 மற்றும் 12-ஆம் பிரிவுகளை மீறுவதாக வாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்து அடிப்படை அற்றது என்று தன்னுடைய தீர்ப்பில் தெளிவாக வரையறுத்துள்ள நஸ்லான், தமிழ் மற்றும் மாண்டரின் மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இதே மொழிகள் பயிற்று மொழியாக இருப்பதை மலேசிய அரசியல் சாசன விதி 152 (1) தெளிவாக வரையறை செய்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பை எதிர்பார்த்து தமிழ் மற்றும் சீன மொழி ஆதரவாளர்களும் அந்தந்த மொழிகளுக்கான பொது இயக்கங்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் நீதிமன்ற வளாகத்தில் குவிந்திருந்தனர்.

ஆயினும், நீதிமன்ற வளாகத்தில் கடுமையான கட்டுப்பாடும் கொரோனா தொடர்பிலான எஸ்ஓபி (Standard Operating Procedure) கட்டுப்பாட்டு விதிமுறைகளும் அமல்படுத்தப்பட்டிருந்தன.

இந்த வரலாற்றுப்பூர்வ தீர்ப்பின் தொடர்பில் மலேசிய கல்வித் துறை முன்னாள் துணை அமைச்சரும் மஇகா மத்திய செயலவை உறுப்பினருமான டத்தோ ப.கமலநாதன் கருத்து தெரிவிக்கையில், "இந்தத் தீர்ப்பு உண்மையில் பெருமிதமும் தாய்மொழிக் கல்விக்கான பாதுகாப்பையும் அளிக்கவல்லது" என்று தெரிவித்தார்.

இந்த நாட்டில் தாய்மொழிக் கல்வி குறித்து இனி எவரும் கேள்வி எழுப்ப முடியாத அளவுக்கு இன்றைய உயர் நீதிமன்றத் தீர்ப்பு தீர்க்கமாக அமைந்துள்ளது என்று தெரிவித்த கமலநாதன், இனி இந்தியர்கள் குறிப்பாக தமிழ்ப் பெற்றோர்கள் அனைவருமும் தங்களின் பிள்ளைகளை தமிழ்ப் பள்ளிகளில் சேர்த்து தமிழ்ப் பள்ளிகளின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் துணை நிற்க வேண்டும் என்றும் கமலநாதன் இதன் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்தார்.

அதைப்போல, பேராக் மாநில வழக்கறிஞரும் தமிழ் ஆர்வலருமான மதியழகன் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு குறித்து கருத்து தெரிவிக்கையில், "மலேசியத் திருநாட்டின் தாய்மொழிக் கல்வி குறித்து அரசியல் சாசனப்படி அளிக்கப்பட்டுள்ள உரிமையை இந்தத் தீர்ப்பு மறு உறுதி செய்துள்ளது என்றார். மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றாலும் தமிழ், சீன மொழிகளை பயிற்று மொழிகளாகக் கொண்ட தாய்மொழிப் பள்ளிகளுக்கு எந்தத் தடையும் வராது" என்று ஈப்போ "மதி பரம் & கோ" வழக்கறிஞர் நிறுவன உரிமையாளருமான ச.மதியழகன் தெரிவித்தார்.

வாதிகளின் தரப்பில் நிதிமன்றத்தில் முன்னிலையான வழக்கறிஞர் முகமட் ஹனீஃப் கத்ரி அப்துல்லா, "மலேசியக் கூட்டரசு அரசியல் சாசன விதி 152-இன் துணை விதி(1), நாட்டின் தேசிய மொழி மலாய் மொழி என்பதை தெளிவாக வரையறை செய்துள்ளதால், தாய்மொழிப் பள்ளிகள் இயங்குவது சட்டத்திற்கு புறம்பானது என்றும் அவற்றை தடைசெய்ய வேண்டும்" என்றும் வாதாடினார்.

தவிர, இந்த வழக்கு கடந்த நவம்பர் மாதம் 24-ஆம் நாள் நிறைவுக் கட்டத்தை எட்டியபோது, வழக்கின் தீர்ப்பு டிசம்பர் 29-ஆம் நாள் வழங்கப்படும் என்று நீதிபதி முகமட் நஸ்லான் முகமட் கஸாலி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கு குறித்தும் தாய்மொழிப் பள்ளிகள் குறித்தும் தகவல்கள் ஊடகங்களில் அதிகமாக வரத்தொடங்கின. அதற்கேற்ப சமூக ஆர்வலர்களும் மொழிப் பற்றாளர்களும் கருத்து தெரிவித்து வந்தனர்.

இந்தக் கட்டத்தில் வாதிகளின் தரப்பு வழக்கறிஞரான முகமட் ஹனீஃப், தீர்ப்பு வரும்வரை அனைவரும் வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்று முரட்டுத்தனமாக அறிக்கை வெளியிட்டார்.

தாய்மொழிக் கல்வி என்பதும் தாய்மொழிப் பள்ளிகள் என்பதும் இனம், மொழி சார்ந்த உயிரணைய சிக்கலாகும் உணர்ச்சிப்பூர்வமானதும் ஆகும். எனவே, இது குறித்து பொதுமக்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கருத்து தெரிவிப்பது இயல்பானது.

ஆனால், டிசம்பர் முதல் நாள் இது குறித்து அறிக்கை வெளியிட்ட முகமட் ஹனீஃப் "அனைவரும் வாயைப் பொத்திக் கொண்டிருக்க வேண்டும்" என்று சொன்னது ஜனநாயக விரோதமானது.



கட்டணம் பெற்றுக் கொண்டு ஒரு தரப்புக்காக வாதாடும் ஒருவர், பிரதிவாதிகள், பொதுமக்கள், தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் இவ்வாறு மிரட்டியதற்கு பதில்சொல்ல வேண்டிய நேரம் ஒரு நாளில் நேரும்.

முகமட் ஹனீஃப் தரப்பினர் முன்னெடுத்த வழக்கில் புத்ராஜெயா (மத்தியக் கூட்டரசு) மட்டும்தான் பிரதிவாதியாக தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டது.

பின்னர், மலேசிய இந்தியர் காங்கிரஸ் (மஇகா), மலேசியத் தமிழ் நெறிக் கழகம், மலேசிய சீனர் சங்கம்(மசீச), கெராக்கான், பூமிபுத்ரா கட்சிகள், சீனக் கல்வி கூட்டமைபான டொங் ஸோங், மலேசிய சீன கல்விக் குழு, மலேசியத் தமிழர் சங்கம், பேராக் தமிழர் திருநாள் இயக்கம், தமிழ்ப் பள்ளி ஓய்வுபெற்ற ஆசிரியர் நல சங்கம், மலேசியத் தமிழ்ப்பள்ளி முன்னாள் மாணவர் சங்க கூட்டமைப்பு, ச்சோங் ஹ்வா இடைநிலைப்பள்ளி நிருவாகம் ஆகியத் தரப்பினர் தங்களையும் பிரதிவாதியாக இந்த வழக்கில் இணைத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





**நக்கீரன்** - Nakkeeran
013-244 36 24

# ஈழத்துத் திருக்கோவில்கள் 979



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*“விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து”*

கணபதி வழிபாடு பல்வேறு நாடுகளிலும் போற்றப்படும் சிறப்புடையது. சைனர், பௌத்தர் போன்ற பிற மதத்தினரும் பேணும் பெருமை மிக்கது. இந்தியா முழுவதிலும் இவ் வழிபாடு பழையகாலத்தில் சிறப்புற்று விளங்கியது. இந்தியாவுக்கு வடக்கே நேபாளம், தீபெத்து, சீனா ஆகிய இடங்களிலும் கணபதி வழிபாடு முன்னர் பரவியிருந்தது. சிங்கவாகனம், ஐந்துமுகம், படைதாங்கிய கைகளெட்டு, மோதகம் ஏந்திய கை, அபயகரம் என்னும் அம்சங்கள் அமைந்த ஏரம்ப கணபதி வடிவில் விநாயகரை நேபாளத்தில் இந்துக்களான கூர்க்கர்களும், பௌத்தர்களான மேவார்களும் வழிபடுதல் வழக்கம். அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சாருமதியே நேபாளத்தில் கணபதி வழிபாட்டை அறிமுகம் செய்தாளென அறிஞர்கள் கருதுகின்றனர். நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் இன்றும் காணப்படும் ஏரம்ப கணபதி வடிவம் இவ்வழிபாடு பெற்ற பண்டைச் சிறப்பை எடுத்தியம்புகின்றது.

தீபெத் நாடு, பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. ஆயினும் அங்குள்ள இந்துக்களோடு பௌத்தர்களும் கணபதியை அன்போடு வழிபட்டனர். சீனாவிலே சூரியனின் அம்சமாகக் கணபதியை வழிபட்டனர். ஜப்பானிலே காங்கிடென் என்னும் பெயரில் ஒருவரையொருவர் தழுவும் இரட்டைத் தெய்வ வடிவில், முற்காலத்தில் கணபதியை வழிபட்டுள்ளனர். இந்தியப் பண்பாடு பரவியுள்ள தென்னாசிய நாடுகளில் கணபதி வழிபாடும் பரவலா-கப் போற்றப்பட்டது. இந்தோனேசியா, பர்மா, வியட்நாம், போன்ற நாடுகளிலும் இவ்வழிபாடு போற்றப்பட்டுள்ளது. பொலினேசியத் தீவுக்கூட்டத்திலுள்ள மக்கள் லோனோ என்னும் பெயரில் கணபதியை வழிபட்டு வருகின்றனர்.

ரஷ்யாவில் கஸ்பியன் பகுதியிலுள்ள பக்கு என்னும் இடத்தில், நிலத்தின் கீழுள்ள அக்கினிக் கோயிலின் சுவரில், பளிங்கு விநாயகரின் உருவம் இருப்பதாக ஆய்வாளர் கூறியுள்ளனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மட்டுமன்றி ஆபிரிக்காவிலும், வடஅமெரிக்காவிலும் கணபதி வழிபாடு காணப்படுகின்றது. இந்தியப் பண்பாடு பரவியுள்ள இலங்கையிலும் கணபதி வழிபாடு போற்றப்படுகின்றது. ஏனைய தெய்வங்களுக்குரியது போன்ற நிலையில் மிகப் பெரிய கோவில்கள் காணப்படாவிட்டாலும், விக்கினங்களைத் தீர்ப்பவராகக் கணபதி கருதப்படுவதால், முதல் வணக்கம் செலுத்தும் பிள்ளையாருக்கு நாடெங்கிலும் பரவலாகப் பிள்ளையார் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் தெல்லிப்பளையிலுள்ள வருத்தலைவிளானில் அமைந்து ள்ள விநாயகர் ஆலயம், அருளும், அற்புதங்களும் கொண்ட ஆலயமாக விளங்குகின்றது. ஐரோப்பியர் காலத்திலே சைவம் அருகி, அன்பு வற்றி நலிவுற்ற வருத்தலை விளானிலே, மீண்டும் சமய உணர்வு நிலைக்க ஓங்காரனின் அருளை அனுபூதிமான்கள் அனுதினமும் வேண்டி வழிபட்டனர். அனுபூதிமான்கள் எதிர்காலத்தில ஏற்படப்போவதை உணர்ந்தவர்கள். இவர்களது வேண்டுதலின் விளவாக வருத்தலை விளானில் விநாயகப் பெருமான் எழுந்தருளத் திருவுளங் கொண்டார். தமது வெளிப்பாட்டைச் சில சம்பவங்களின் மூலம் வெளிப்படுத்துதலை காலத்தின் நியதி என்றோ, தெய்வீக அருள் என்றோ பக்தர்கள் கூறுவது வழக்கம்.

வருத்தலை விளானிலும் இத்தகை அருளொளி வீசும் நேரம் நெருங்கியிருந்தது. அந்நாட்களிலே ஆடுகளை வருத்தலை விளானில் உள்ள வெளியில் மேய்ப்பதற்காக ஓர் இடையர் வந்து செல்வது வழக்கம். அவ்வெளியிலே கம்மிக் குளம் அமைந்திருந்தது. ஆடுகளை மேய்க வந்த இடையர் வெளியில் ஆடுகளை மேய விடுவதும், அங்குள்ள கம்மிக் குளத்திலே நீர் பருகவிட்டும் ஆடுகளை மேய்த்து வந்தார். இவ்வாறு மந்தைகள் மேயும் பொழுது நிழல் வேண்டி அப்பிரதேசத்திலே நிழல்பரப்பிக்கொண்டிருந்த மருதவிருட்ச வேர்க்குமிழில் அமர்ந்து ஓய்வெடுப்பார். சிலவேளைகளில் ஆடுகளைத் தூர இடத்திற்கு மேயவிடுவதற்குச் சென்றால், அவ்வேளைகளில் இடையர், தனது மனம் சஞ்சலமுறுவதை அவதானித்தார். ஆடுகளும் ஒன்றோடு ஒன்று இணங்கிச் செல்லாது மோதி அமளிப்படுவதையும் கண்டுகொண்டார். மருதடியைவிட்டு வேறிடங்களுக்குச் செல்ல நேரிடும்பொழுது, வெயிலின் தாக்கத்தையும் உணர்ந்து அவதிப்பட்டார். இவ்வேளைகளில் மருதமரத்தடியை மீண்டும் நாடிவந்து, வழமையாக அமரும் வேர்க்குமிழில் அமர்ந்து, அமைதிகொள்வது இவரது வழக்கமாகக் காணப்பட்டது. ஆடுகளும் மருதமரத்துச் சூழலில் ஒன்றோடொன்று பிணங்காது அமைதியாக மேச்சலில் ஈடுபடும்.

மருதடி வேர்க்குமிழில் அமரும்பொழுது தனது மனதிலுள்ள குழப்பங்கள் அகல்வதையும், மனதில் அமைதி நிலவுவதையும், இச்சூழலில் ஆடுகள் அமைதியாக மேய்வதையும் கருத்தில் கொண்ட இடையர், மருதடி மரவேர்க்குமிழில் ஏதோவொரு சக்தி இருக்கவேண்டும் என்பதில், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராகக் காணப்பட்டார். இக்காரணத்தினால் தினமும் மருத மரத்தை நாடிவந்து, அம்மரத்தின் வேர்க்குமிழில் அமர்வதை வழக்கமாகக் கொண்டார். இவ்வாறான எண்ணத்தோடு ஒருநாள் உறங்கியபோது அவரது கனவிலே மருதமரவேர்க்குமிழ் வெளிப்பட்டது.

*வளரும்...*

SHIVA DURGA ASTROLOGY CENTER








PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

## ஜீவன் முக்தி (பகுதி ) 136

# உணர்ச்சிகள் என்பது சரியா? தவறா?



உணர்ச்சிகள் என்பது சரியா? தவறா? என்கின்ற கேள்விக்கு இடமே இல்லை.

ஏனென்றால் இந்த உணர்ச்சிகள், நமக்குள்ளே இருக்கின்ற சமநிலையை இழக்கும்போதுதான் பிரச்சினையாகிறது.

நமக்குள்ளே உணர்ச்சி மாற்றம் ஏற்படும்போது, நம் உணர்வே அதற்கேற்றாற்போல் உருகிப் போகிறது. நம் நிலையே மாறிப்போகிறது.

சொல்லப்போனால் சில நேரத்தில் வாழ்க்கையின் போக்கையே உணர்ச்சி மாற்றிவிடுகிறது.

ஒருவருடைய வாழ்க்கையையே மிக உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு சின்ன உணர்வே போதுமானது. இல்லை மிக கீழ்நிலைக்கும் போய் தூக்குப் போட்டுக் கொள்கிற நிலைக்கும் கூட எடுத்துச் செல்ல முடியும். உணர்ச்சிகளுக்கு, அவ்வளவு பெரிய சக்தியிருக்கிறது.

கோபம், காமம், எரிச்சல் போன்ற எந்தவிமான உணர்ச்சியும் ஒருவருக்குள் புகுந்தாலும் சரி, அது இன்னொரு உயிரை கொலை செய்கின்ற அளவிற்கோ அல்லது ஒரு உயிரை துன்புறுத்துமளவிற்கோகூட போகமுடியும். அதேபோல் ஒரு நல்ல உணர்ச்சி பொங்கினால் ஒரு பெரிய நாட்டையே காப்பாற்றுமளவிற்கோ அல்லது எரிகின்ற வீட்டிற்குள் குதித்து ஒரு குடும்பத்தையே காப்பாற்றுவதற்கான சக்தியாகவோ பொங்க முடியும். அதனால் உணர்ச்சி சரியா? தவறா? என்ற கேள்வியை நேரடியாக ஆராய முடியாது.

நம் உணர்ச்சியை நாம் சரியாக கையாளுகிறோமா? இல்லையா? என்பதுதான் நம் கேள்வி. நம்மை நோக்கி நாம் கேட்டு ஆராயவேண்டிய கேள்வி இது ஒன்றுதான். வேறொன்றுமில்லை.

இரத்தவோட்டத்திற்கும் உடம்பிற்கும் நடுவில் பாலமாகயிருக்கக் கூடிய ஹார்மோன்கள் நமக்குள்ளே பொங்கும்போது, மனதில் ஏற்படக்கூடிய சில மாற்றங்கள், நம் உணர்விலே ஏற்படுகின்ற சில மாற்றங்கள், இவையெல்லாம் ஒன்றாக சேர்ந்து பொங்கும்போது, உள்ளுக்குள் ஏற்படுகின்ற காய்ச்சலைத்தான் நாம் உணர்ச்சிகள் என்று சொல்கிறோம்.

43 வகையான ஜீரங்கள் இருக்கின்றன. கோபம் எரிச்சல், கவலை துக்கம் போல 43 விதங்கள் இருக்கின்றன. இதில் எந்த காய்ச்சலுமே தவறு கிடையாது. ஆனந்தம்கூட ஒரு ஜீரம்தான் என்று சொல்வார்கள்.

முதல் அனுபவத்தை அடயும்போது, ஒரு மனிதனுக்கு ஆனந்த ஜீரம் ஏற்படுகிறது. உடல் முழுவதும் ஆனந்தம் பொங்கி முழுவதுமாக பற்றி கொள்ளும். தீப்பிடிக்கும்பொழுது எப்படி எல்லாபொருளும் அதில் எரியுமோ, அதைப் போன்று ஆனந்தத்திலே மொத்த உடலும் திகுதிகுவென்று எரியும். அப்போது நம்முடம்பில் ஒரு இனிமையான மிக அருமையான ரசவாத மாற்றம் ஏற்படுகின்றது.

அதைத்தான் 'ஆனந்த ஜீரம்' என்று சொல்கின்றோம்.

உணர்ச்சிகள் என்றால் வெறொன்றுமில்லை. இயற்கை நம் உடம்பில், நம் உடம்பென்னம் வீணையில் ஒலிக்கின்ற, உருவாக்குகின்ற இனிமையான இன்னிசையாகயிருக்கும். சரியாக இசைக்கத் தெரியவில்லையென்றால் நமக்குள்ளே ஒரு இனிமைத்துவம் இருக்காது, அது தொந்தரவாக மாறிவிடுகிறது.

எந்த ஒரு உணர்ச்சியும் பொங்கும்போதும், எந்த ஒரு ஜீரம் நமக்குள்ளே வந்தாலும் 43 வகை ஜீரங்களில் எது எழும்பினாலும் நம்மடைய சமநிலை தடுமாறாத அளவிற்கு நம்முடைய உணர்வுகயை சமச்சீர் செய்யும் பக்குவம் இருந்தால், அந்த ஒரு உணர்வம் உணர்ச்சி கொந்தளிப்பாக மாறாது.

அது உணர்வு மற்றமாக மாறாது. அந்த உணர்வு அப்படியே அனுபவமாக கரைந்துவிடும். அது உடம்பிற்குள்ளே குதுகலமாகவும், ஒரு இனிமையான அனுபவமாகவும் கரைந்துவிடும்.

இப்போது பயத்தையே எடுத்துக்கொண்டால் பயம் என்பது நாம் பொதுவாக மனிதர்களுடைய வார்த்தையில் சொல்லவேண்டும் என்றால், அது ஒரு தேவையில்லாத உணர்வு, தவறான உணர்வு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் பயம் என்பதே ஞானம்தான்.

உணர்ச்சிகள் என்றால் வேறொன்றுமில்லை.
இயற்கை நம் உடம்பில், நம் உடம்பென்கிற வீணையில் ஒலிக்கின்ற,
உருவாக்குகின்ற இனிமையான இசைதான் உணர்ச்சிகள்.
அதைச் சரியாக இசைத்தோமென்றால்,
நாம் உட்கார்ந்து கேட்குமளவிற்கு
இனிமையான இன்னிசையாகயிருக்கும்.

ஒரு முறை நெருப்பில் கைவைத்த பிறகு இன்னொருமுறை அந்த நெருப்பு பக்கம் போகும்போது ஐயோ 'நெருப்பு சுடும்' என்கின்ற அனுபவம் நமக்கு ஏற்படுகின்றது. இது போன்ற அந்த உணர்ச்சியும் ஞானம்தான்.

உண்மையில இதைத்தான், நீங்கள் நெருப்புப் பக்கம் போன அந்த அனுபவம்தான் உங்களுடைய updated intelligence என்று சொல்வது.

அதற்குச் சரியான பேர் கொடுக்கத் தெரியவில்லை.

நம் மொத்த உடலையும் சடன் பிரேக் போட்டு நிறுத்தத் கூடியது அது.

அந்த நிறுத்துகின்ற செயலை, அந்த அதிர்வுக்கு, அதிர்ச்சிக்கு, அந்த உடனடியான, எதிர் செயலை என்ன சொல்வதென்று நமக்குத் தெரியவில்லை. அதனால்தான் அதை பயம் என்று சொல்கிறோமே தவிர அந்த உணர்ச்சிக்குப் பெயர் பயம் அல்ல. அது கெடுதல் விளைவிக்கக்கூடிய உணர்வு கிடையாது.

நீங்கள் நடந்து போய்க்கொண்டேயிருக்கீறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் சென்ற இடத்தில் ஒரு முள் காலில் குத்தியவுடனே பளீரென்று உங்கள் கால்களை எடுத்துக் கொள்கிறீர்கள். இது உடம்பிற்கே உள்ள புத்திசாலித்தனம்தான். intelligence தான்.

இதேபோல உடம்பிலுள்ள ஒவ்வொரு உணர்ச்சியுமே, நமக்குள்ளேயும் வெளியேயும் நடக்கும் மாற்றத்தை நாம் அனுபவிப்பதற்காக பொங்குகின்ற இனிமையான இயற்கையின் சக்திகள். இந்த இயற்கையின் சக்திகளை சரியாகக் கையாள தெரிந்தால், அது தியானம்.

அதை சரியாக கையாளத் தெரிந்தால் அது தியானம். அதைச் சரியாகக் கையாளும் பொழுது உணர்வு சமச்சீர் நிலை உருவாகிறது. அதைச் சரியாகக் கையாளத் தெரியவில்லையென்னும்போதுதான் நமக்குள்ளே உணர்வு சமச்சீரற்ற நிலை. imbalance உருவாகின்றது. இதைத்தான் தடுமாற்றம், துக்கம் என்று சொல்வது, அதனால் நமக்குள்ளே ஏற்படுவதெல்லாம் நாம் சொல்லும்

கோபம் என்கின்ற உணர்ச்சி பொங்கிய
உடன் அதைக் கழற்றி வைத்துவிட்டு நம்மால் போக முடியும்.

உணர்ச்சியால் அவர் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.
அவர் ஒருபோதும் தாக்கப்படுவதில்லை.
உணர்ச்சியால் அவருடைய
வாழ்க்கையானது
தடுமாற்றப்படுவதேயில்லை.
உணர்ச்சி அவருடைய பாகமாக
கருவியாய்
இருக்கிறது.

எதிர்மறை எண்ணங்கள்தான். ஆனால் நிஜமாக ஆராய்ந்து பார்த்தோமென்றால் எந்த உணர்ச்சியும் அதைக் கையாள்கின்ற அளவிற்கு, அது நம்முடைய உடலையும் மனதையும் தாங்குகின்ற அளவிற்கு ஸ்ரோங்கான ஹாட்வெயரும், சொவ்வெயரும் நமக்கு இருந்ததென்றால், அந்த உணர்ச்சி கொந்தளிப்பாக மாறவே முடியாத. எந்த உணர்ச்சியும் தடுமாறாது.

உணர்ச்சி உள்ள அது எந்த வேலையைச் செய்ய வேண்டுமோ அந்த
வேலையைச் செய்துவிட்டு உடனே வெளியில் போய்விடும்.

ஒரு ஞானிக்கும், ஒரு மனிதனுக்கும் இந்த இரண்டு உணர்ச்சியுமேயிருக்கும் 43 ஜீரமும் இருக்கும். பிறகு என்ன வித்தியாசம். ?

ஒரு ஜீவன்முக்தனுக்கும் ஒரு மனிதனுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது. ஒரு மனிதனுக்கு இந்த 43 ஜீரத்தில், எந்த ஜீரம் வந்தாலும் அரண்டுபோய்விடுவார். அப்படியே அநத ஜீரத்தில் மாட்டி, குரோதம் என்கிற ஜீரம் காமம் என்கின்ற உணர்ச்சியோ வந்ததென்றால் கரைந்துவிடுவார். அந்த உணர்ச்சியினுடைய பாகமாகவும், அந்த உணர்ச்சியினுடைய அடிமையாகவும், நரம்பு மண்டலமும் மனதும் மாறிவிடும்.

ஆனால் ஒரு ஜீவன்முக்தர் தனக்குள் எந்த உணர்ச்சி பொங்கினாலும் அவரால் அதை தனித்திருந்து பார்க்க முடியும்.

இரண்டாவது அந்தப பொங்குகின்ற உணர்ச்சியைக் கையாளமுடியும்.

அந்த உணர்ச்சி, அவர் சுதந்திரத்தை பறிக்காமலே பொங்கும். அந்த உணர்ச்சியை அவர் அனுபவிப்பார். எந்த நிமிடம் விடவேண்டுமோ அதை விட்டுவிட்டு அடுத்த செக்கண்டு வேலையைப் பார்ப்பார். அந்த உணர்ச்சியினால் பாதிப்போ, அந்த உணர்ச்சியின் சுவடோ, அந்த உணர்ச்சியின் வாசமோ உள்ளே இருக்காது. அந்த உணர்ச்சி உள்ளே அது எந்த வேலையைச் செய்ய வோண்டுமோ, அந்த வேலையை செய்துவிட்டு, உடனே வெளியில் போய்விடும். இப்போது 4 பேரை சமாளித்தாக வேண்டும் என்றால், ஒரு புதுப்பிரச்சினையை கையாளவேண்டும் என்றால், அந்த இடத்தில் கோபம் என்கின்ற உணர்ச்சி பொங்கவேண்டியிருக்கிறது. நாம் அந்த இடத்தில் இதைக் கோபம் என்ற சொல்லமுடியாது.

எந்த உணர்ச்சியாகயிருந்தாலும்
அதை வாழும்பொழுது முழுமையாக வாழுங்கள்.
அந்த உணர்ச்சியை வாழ்ந்து முடித்த வினாடி அதிலிருந்து, அதை
அன்கிளட்ச் செய்துவிடுங்கள். இந்த
அன்கிளட்ச் என்கின்ற ஒன்றை
செய்துவிட்டால் போதும். தியானம்,
ஆனந்தம், அனுபவம், இவை எல்லாமே வாழ்க்கையுடைய
பாகமாக மாறிவிடும்.

இடத்திலே இதை தப்பு என்று சொல்லமுடியாது. கோபப்பட வேண்டிய இடத்தில் கோபப்பட்டுத்தானக வேண்டும்.

எப்படி ஒரு காரை ரிப்பேர் செய்யும்போது, வேலை முடிந்தவுடன் ஸ்பேனரை அப்படியே கீழே வைத்துவிடுகிறோமோ, அதைப் போலவே கோபம் என்கின்ற உணர்ச்சி பொங்கிய உடன் அதை கழற்றி வைத்துவிட்டு நம்மால் போக முடியும்.

உணர்ச்சியால் அவர் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை. அவர் ஒருபோதும் தாக்கப்படுவதில்லை. உணர்ச்சியால் அவருடைய வாழ்க்கையானது தடுமாற்றப்படுவதேயில்லை. உணர்ச்சி அவருடைய பாகமாக, கருவியாய் இருக்கிறது.

ஒரு ஜீவன்முக்தன் அந்த உணர்ச்சியென்கின்ற 43 கருவிகளை, 43 ஜீரங்களை, எப்போதெல்லாம், என்னென்ன சூழ்நிலையில் எல்லாம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் பயன்படுத்திவிட்டு கீழே வைத்துவிடுவார். அது அவரை பாதிக்காது. ஆனால் ஒரு சாதாரண மனிதரை அது நிச்சயமாகப் பாதிக்கும்.

ஜீவன்முக்த வாழ்க்கையை வாழ, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். 43 ஜீரத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள். அனுபவிக்கம்போது அனபவியுங்கள். வந்தபிறகு உடனே விட்டுவிடுங்கள். விடுபடுகிற அளவிற்கு உங்கள் விழிப்புணர்வை அதிகப்படுத்துங்கள். அதுவே போதுமானது.

உங்கள் உணர்வுத் தெளிவு உங்களுக்குள்ளே பொங்க ஆராம்பித்தால் போதும். நம் உணர்வு பொங்குவதற்கு நேரடியாக உதவுவது தியானம். அல்லது தியான நுட்பம் என்றும் சொல்லலாம்.

இன்னும் மொத்தமாக எளிமையாக சொல்லி முடிக்க வேண்டுமென்றால் எந்த உணர்ச்சியாகயிருந்தாலும் அதை வாழும்பொழுது, அதை முழுமையாக வாழுங்கள். அந்த உணர்ச்சியை வாழ்ந்து முடித்த வினாடி, அதிலிருந்து, அதை அன்கிளடச் செய்துவிடுங்கள். இந்த அன்கிளட்ச் என்கின்ற ஒன்றை செய்துவிட்டால் போதும். தியானம். ஆனந்தம், அனுபவம் இவை எல்லாமே வாழ்க்கையுடைய பாகமாகமாறிவிடும்.

தியானமும் செய்வீர்கள். அனுபவமும் நடக்கும். ஆனந்தமும் அனுபூதியாகும். உணர்ச்சிகளில் சிக்கிக் கொள்ளமாட்டீர்கள். உணர்ச்சிகளை அனுபவிப்பது தவறில்லை, ஆனால், அந்த உணர்ச்சியிலேயே சிக்கிக் கொள்வதுதான் தவறு. உணர்ச்சிகளிலிருந்து அன்கிளட்ச் செய்யுங்கள். ஆனந்தமாக இருப்பீர்கள்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# 2021 ஆம் ஆண்டு நடந்த சில விண்வெளி நிகழ்வுகள்

**- குரு அரவிந்தன்**



**கோ**விட்-19 பேரிடர் 2020-1921 ஆம் ஆண்டுகளில் ஒரு பக்கம் உலக மக்களை வீட்டுக்குள் முடக்கி வைத்திருக்க, மறுபக்கம் முன்னேறிய நாடுகள் விண்வெளி சார்ந்த தமது நடவடிக்கைகளை மிகவும் கவனமாக நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறன. கோவிட் பேரிடரைக் காரணம் காட்டி அவற்றைத் தள்ளிப் போடவோ அல்லது நிறுத்திவைக்கவோ முடியாத ஒரு நிலையில் விண்வெளி சார்ந்த நிகழ்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. பல நூறு விண்கலங்களும், ரோபோக்களும் விண்வெளியில் வலம் வந்து கொண்டிருப்பதால், அவற்றின் நடவடிக்கைகள் பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையங்களில் இருந்துதான் கண்காணிக்கப்படுகின்றன. அதனால் பூமியில் இயங்கும் கட்டுப்பாட்டுத் தளங்கள் தொடர்ந்தும் இயங்கத்தான் வேண்டும். கோவிட் காரணமாக சில விண்வெளித் தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தாலும், தேவை காரணமாக அவை இப்போது மீண்டும் இயங்கத் தொடங்கிவிட்டன.

அரசியலை ஓரம் தள்ளிவிட்டு இந்த நாடுகள் அறிவியல் நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்குக் காரணம் எதிர்காலம் விண்வெளி நிகழ்வுகளில்தான் தங்கி இருக்கப் போகின்றது என்பது தெளிவாகப் புலனாகின்றது. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் நாடுகளைப் பிடிப்பதில் ஈடுபட்டது போல, இப்போ கிரகங்களைப் பிடிப்பதில் நாடுகளிடையே போட்டிகள் ஆரம்பமாகி விட்டன. எனவே 2021 ஆம் ஆண்டு நடந்த சில விண்வெளி நிகழ்வுகளை இங்கே தருகின்றேன்.

விண்வெளிப் பயணத்தை முதன் முதலாக ஸ்புட்னிக் மூலம் 1957 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்துப் பல சாதனைகளை நிலைநாட்டிக் காட்டியது ரஸ்யாதான். அதைத் தொடர்ந்து அமெரிக்காவும், சீனாவும் இப்பொழுது சாதனை படைக்கத் தொடங்கிவிட்டன. இந்த வருடம் செவ்வாய்க்கிரகம் நோக்கிய ரோபோக்களின் பயணத்தில் அமெரிக்கா, சீனா, ஐக்கிய அமீரகம் ஆகிய மூன்று நாடுகள் ஈடுபட்டிருந்தன. 2021 செவ்வாய் நோக்கிய முதல் பயணத்தை அமீரகத்தின் ஹோப் விண்கலம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து சீனா அனுப்பிய விண்கலம் 2021 மே மாதம் ரோவரைத் (China's Tianwen-1 mission) தரை இறக்கம் செய்தது. பெப்ரவரி 18 ஆம் திகதி நாசாவின் (NASA's Perseverance rover) ரோவர் செவ்வாயில் தரை இறக்கப்பட்டது. இதில் அமெரிக்கா வெற்றிகரமாக ஹெலிகொப்டர் ஒன்றையும் செவ்வாய்க் கிரகத்தில் பறக்க விட்டிருந்தது. முதன்முதலாக வேற்றுக் கிரகத்தில் பறந்த ஹெலிக்கொப்டர் என்ற பெயரை அமெரிக்காவின் இன்ஜெனுட்டி என்ற சிறிய ஹெலிக்கொப்டர் தட்டிக் கொண்டது. செவ்வாய் கிரகத்தில் இதுவரை 16 பறப்புகளை மேற்கொண்டிருந்தது தானியங்கியான இந்த ஹெலிகொப்டர். இதன் முதலாவது பறப்பு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு நடைபெற்றது. அமெரிக்காவைத் தொடர்ந்து செவ்வாய்க் கிரகத்தில் இரண்டாவதாக ரோபோவை இறக்கிய பெருமை சீனாவுக்கு உரியது.

எல்லா கிரகங்களிலும் தேடுதல்கள் வேகமாக நடைபெறுகின்றன. புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கோள்களில் ரோவர்கள் தரை இறங்கி இருக்கின்றன. குறுங்கோள்களிலும் ரோவர்களின் தரை இறக்கங்கள் நடைபெற்றிருக்கின்றன. அக்ரோபர் 16 ஆம் திகதி லூசி என்ற விண்கலம் நாசாவால் விண்வெளி நோக்கி அனுப்பப்பட்டது. 12 வருடங்கள் பயணிக்கப்போகும் இந்த விண்கலம் முக்கியமான ஏழு விண்கற்களைப் பற்றி ஆய்வு செய்ய இருக்கின்றது. வியாழன் கிரக மண்டலத்தில் உள்ள ஆறு விண்கற்களையும், அதிக விண்கற்கள் அடங்கிய பட்டியில் இருந்து தெரிவு செய்த ஒரு விண் கல்லையும் இது ஆய்வு செய்யும். 2011 ஆம் ஆண்டு ஆனுப்பப்பட்ட யூனோ விண்கலம் தொடர்ந்தும் வியாழன் கிரகத்தை ஆய்வு செய்கின்றது. 2025 ஆம் ஆண்டுவரை இதன் சேவை நீடிக்கப்பட்டிருக்கின்றது. நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி னுசுயுகுவு என்ற விண்கலம் டிமோபோஸ் என்ற விண்கல்லைத் தாக்கித் திசை திருப்புவதற்காக அனுப்பப்பட்டது. 24,000 கிலோ மீட்டர் வேகத்தில் விண்கல்லைத் தேடிச் செல்லும் இந்த விண்கலம், 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிற்பகுதியில் குறித்த இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முயற்சி வெற்றி பெற்றால் பூமியை நோக்கி வரும் ஆபத்தான விண்கற்களை இனிவருங்காலங்களில் திசை திருப்ப முடியும்.

சந்திரனின் மறுபக்கத்திற்கு அனுப்பப்பட்ட சீனாவின் சாங்-4 தரைஇறங்கியும் யூரு-2 ரேவரும் சந்திரனின் மறுபக்கத் தரையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சீனா தனக்கான விண்வெளி நிலையம் ஒன்றை 29 ஏப்ரல் 2021 ஆம் ஆண்டு விண்வெளியில் அமைக்கத் தொடங்கி இருக்கிறது. தியாங்காங் (Tiangong) என்ற அதற்கான வேலைகள் விண்வெளியில் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன. கட்டுமானப் பணிக்காக சென்ற யூன் மாதம் 17 ஆம் திகதி, நி ஹாய்ஷெங், லு பூமிங், ராங் ஹாங்போ ஆகிய மூன்று விண்வெளி வீரர்களை சீனா தனது விண்வெளி நிலையத்திற்கு அனுப்பி இருந்தது. இதுவரை 14 சீனவீரர்கள் விண்வெளிக்குச் சென்றிருக்கிறார்கள். இவர்களில் லீ யாங் என்ற பெண்மணியும் அடங்குவார். இந்தத் திட்டம் 2024 ஆம் ஆண்டு முழுமையாக நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வர்ஜின் கேலக்டிக் நிறுவனமும் மற்றும் ப்ளூ ஒரிஜின் நிறுவனமும் விண்வெளிக்குச் சுற்றுலாப் பயணிகளை அனுப்பியதன் மூலம் 2021 யூலை மாதம் சாதனை படைத்திருந்தனர். அந்த வரிசையில் மூன்றாவதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும் செப்ரெம்பர் மாதம் 2021 தனியார் விண்வெளிப் பயணத்தில் இணைந்து கொண்டது. இதுவரை மூன்று கோடீஸ்வரர்களும், வேறுசில விண்வெளிச் சுற்றுலாப் பயணிகளும் விண்வெளி சென்று வந்திருக்கிறார்கள். விண்வெளித் தொலைநோக்கியான Imaging X-ray Polarimetry Explorer டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி விண்வெளிக்கு நாசாவால் அனுப்பப்பட்டது. நாசா நிறுவனமும் இத்தாலிய விண்வெளி நிறுவனமும் கூட்டாகச் செயற்பட்டன. 188 மில்லியன் டொலர் பெறுமதியான இந்தத் தொலைநோக்கி கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் நட்சத்திரங்கள், கருந்துளைகள், சுப்பநோவா போன்றவற்றை ஆய்வு செய்ய இருக்கின்றது. இதேபோல கிறிஸ்மஸ் தினத்திலன்று 25 ஆம் திகதி ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி விண்வெளி நோக்கி அனுப்பப்பட்டது. இது மில்லியன் மைல்களுக்கு அப்பால் சென்று தகவல்களைச் சேகரிக்க இருக்கின்றது. பிரபஞ்சத்தின் தொடக்க காலத்தில் பெரும் வெடிப்பு காரணமாக நட்சத்திரங்கள் எப்படித் தோன்றின, அகச்சிவப்பு ஒளி என்பது போன்ற பல தகவல்களைப் பின்நோக்கிச் சென்று சேகரித்துப் பூமிக்கு அனுப்ப இருக்கின்றது.

விண்வெளி நோக்கிய விண்கலங்களின் பயணம் இந்த வருடம் மட்டும் (2021) இதுவரை 137 நடந்திருக்கிறது. இதில் 128 வெற்றிகரமாகச் செயற்பட்டது. ஆகக்கூடிய பயணமாக நவெம்பர் மாதத்தில் 16 விண்வெளிப் பயணங்கள் நடந்திருக்கின்றது. இவற்றில் 52 விண்கலங்களை அனுப்பிய சீனா முன்னணி வகிக்கிறது. அடுத்ததாக அமெரிக்கா 51, ரஸ்யா 23, ஐரோப்பா 5, இந்திய 2, யப்பான் 2, தென் கொரியா 1 ஐயும் அனுப்பி இருக்கின்றன. அதிக ரொக்கெட்டுகள் சீனாவின் யூகுவான் ஏவுதளத்தில் இருந்து 21 ஏவப்பட்டன. இரண்டாவதாக அமெரிக்காவின் கேப்காணிவெல் தளத்தில் இருந்து 19 ரொக்கெட்டுகள் ஏவப்பட்டன. ரஸ்யா, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், ஹஸகிஸ்தான், நியூசிலாந்து, தென்கொரியா, ஈரான், யப்பான் ஆகிய நாடுகளில் ரொக்கெட் ஏவுதளங்கள் இருக்கின்றன.

விண்வெளிப் பயணத்தில் சீனா எல்லா நாடுகளையும் மிஞ்சப் போகிறது என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாகும். இதைவிட சீனா பொருளாதாரத் துறையில் சிறப்பாக இருப்பதும், அந்த நாட்டு அதிபர் விண்வெளித்திட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவராக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. வானத்தில் இருந்தே இந்த உலகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நிலைமை ஒரு நாள் ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. தொடக்க காலத்தில் ரஸ்யா மிகவும் ஆர்வமாக விண்வெளிப் பயணத்தில் ஈடுபட்டாலும், பொருளாதார நெருக்கடி காரணமாக ரஸ்யாவால் முழுமூச்சாக ஈடுபட முடியவில்லை.

"விண்வெளிப் பாவனைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருப்பதாலும், விண்வெளியில் குப்பைகள் தொடர்ந்தும் குவிக்கப்படுவதாலும் நாம் எல்லோரும் சர்வதேச ரீதியாக இணைந்து இந்த விடயத்தில் பொறுப்பாகக் கவனம் செலுத்த வேண்டும்" என்று வெள்ளைமாளிகை ஊடகச் செயலாளர் Jen Psaki சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார். பழுதடைந்த நிலையில் பல விண்கலங்கள் விண்வெளியில் சுற்றிக் கொண்டிருப்பதால், விண்கற்களைப்போல இவையும் பூமிக்கு ஆபத்தானவையே. அமெரிக்காவின் ஸ்கைலாப், சோவியற்யூனியனின் சல்யூட் மற்றும் மிர் விண்வெளி நிலையம், சீனாவின் லோங் மாச் -5பி போன்றவை பழுதடைந்ததால் விண்வெளிக் குப்பைகளாக இருந்தது மட்டுமல்ல, ஒரு துப்பாக்கி ரவையைவிட 5 மடங்கு வேகமாக வந்து பூமியில் விழும்போது இதனால் மனிதருக்கும் ஆபத்தாகும். ரஸ்யாவின் உளவு விண்கலமான கொஸ்மோஸ் 954 வடமேற்கு கனடியப் பரப்பில் விழுந்தபோது பல மைல் தூரத்திற்கு கதிர்வீச்சு இருந்தது அவதானிக்கப்பட்டது. சுமார் 6 கோடி மில்லியன் டொலர்களுக்கு மேல் அதைத் துப்புரவு செய்யக் கனடா செலவிட்டதும் குறிப்பிடத் தக்கது. ரஸ்யா நாட்டின் விண்வெளித் திரைப்படமான "த சலஞ்ச்" என்ற படம் நிஜமாகவே விண்வெளியில் அக்ரோபர் மாதம் 2021 ஆம் ஆண்டு படமாக்கப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் உறைநிலையில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2023 ஆண்டு ரஸ்யாவின் விண்கலம் ஒன்று இது பற்றி ஆய்வு செய்வதற்காகச் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்ல இருக்கின்றது. தண்ணீர் இருக்குமானால் வெகுவிரைவில் குடியேற்றங்கள் அங்கு நடைபெறலாம்.

## இசையமைப்பாளர் டி.இமான் – மோனிகா ரிச்சர்ட் தம்பதி விவாகரத்து



இசையமைப்பாளர் டி.இமான் - மோனிகா ரிச்சர்ட் தம்பதி அதிகாரபூர்வமாக விவாகரத்து பெற்றுள்ளதாக அறிவித்துள்ளனர். தமிழின் முன்னணி இசையமைப்பாளரான இமான் கடந்த 2008-ல் மோனிகாவை திருமணம் செய்துகொண்டார். 13 ஆண்டுகள் தம்பதியாக இருந்து வந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் இருவரும் விவாகரத்து பெற்று விட்டதாக அறிவித்துள்ளார் இமான்.

மேலும், "இருவரது தனிப்பட்ட சுதந்திரத்திற்கு அனைவரும் மதிப்பளித்து நடந்து கொள்ளவேண்டும்" என இமான் கேட்டுக் கொண்டுள்ளார். இமான் இசையில் கடைசியாக "அண்ணாத்த" வெளியானது. அடுத்ததாக "எதற்கும் துணிந்தவன்" படம் வெளியாகவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசிய மடல்

# மலேசிய இந்துக்களின் மறுமலர்ச்சித் தலைவர் டான்ஸ்ரீ ஆர். நடராஜா



நக்கீரன்

பத்துமலை, டிச.25:

சோதிடம், சாதகம், பஞ்சாங்க பலன் போன்றவற்றின் மூலம் பக்தர்கள் வஞ்சிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். தை முதல் நாள்தான் தமிழர்களுக்கு புத்தாண்டு சித்திரை முதல் நாளைப் பொறுத்தவரை அது இந்துப் புத்தாண்டுதான். ஆனால், சித்திரை முதல் நாளையும் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடினால் அது அவர வர் எண்ணத்தையும் சிந்தையையும் பொறுத்தது என்று கோலாலம்பூர் அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தானத் தலைவர் டான்ஸ்ரீ ஆர். நடராஜா குறிப்பிட்டார்.




"சோதிட இரத்தினம்" அஸ்ட்ரோபுகழ் மணி முத்துசாமி இயற்றிய சித்திரைப் புத்தாண்டு வாக்கிய பஞ்சாங்க நூல், இன்று பத்துமலை திருமுருக திருத்தல வளாகத்தில் வெளியிடப்பட்டது.

அந்த விழாவிற்கு தலைமையேற்று சிறப்புரை ஆற்றிய நடராஜா, "நான் சுயமரியாதைக் கொள்கையை கொண்டிருக்கவில்லை மலேசிய திராவிடர் கழகத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை முழு ஆன்மிகவாதியாக வாழ்கிறேன். ஆனாலும், இந்து சமயத்தில் நிலவும் ஒருசி ல ஏற்றத் தாழ்வையும் வர்த்தக நோக்கையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்றார்.



சோதிடத்திலும் பஞ்சாங்கத்திலும் சாதக பலன் என்பது சாதகாமாக நாலு சங்கதியை சொல்வதுதான். பக்தர்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் துன்பத்தையும் துயரத்தையும் எதிர்கொள்ளும்பொழுது, இறைவனிடம் தஞ்சம் அடைவதைவிட அர்ச்சகர்களையும் குருக்கள்களையும்தான் நாடுகின்றனர்.

அர்ச்சனை சீட்டுகூட வாங்க மாட்டார்கள் ஆலய உண்டியலில் காணிக்கை செலுத்துவதுகூட இரண்டாம்பட்சம்தான். ஆனால், குருக்களைப் பார்த்த உடன் அவர் நீட்டும் அர்ச்சனைத் தட்டில் தாராளமாக பணத்தைப் போடுவார்கள். அப்படியே, தங்களின் பிரச்சினையை அவர்களிடம் சொல்லி பரிகாரம் தேட முயற்சிப்பார்கள்.

சம்பந்தப்பட்ட குருக்களோ பஞ்சாங்கத்தைப் பார்த்து நன்மையைச் சொல்வதாற்குப் பதிலாக, "நம்மிடம் ஒருத்தன் வசமாக சிக்கிக் கொண்டான்" என்று மனதிற்குள் நினைத்து, அவர்களிடம் ஏதாவது பரிகார பூசை, 1008 சங்கு பூசை, அபிஷேகம், ஆராதனை என்றெல்லாம் சொல்லி ஏற்கெனவே நொந்து வந்த பக்தனை மேலும் வாட்டிஎடுத்து விடுவார்கள்.



அதேவேளை, நான், என் மேலாடையை அகற்றிவிட்டு, ருத்திராக்க மாலை, திருநீற்றுப் பட்டை எல்லாம் அணிந்தபடி என்னை ஒரு சாமியாராகவோ அர்ச்சகராகவோக் காட்டிக் கொண்டால் ஒரு பக்தரும் என்னை நாடமாட்டார்கள். இத்தனைக்கும் நான் கருப்பாக இல்லை ஓரளவு நல்ல நிறத்தில் இருந்தாலும் யார் சமஸ்கிருதத்தில் நாலு வார்த்தை சொல்கிறார்களோ மந்திரம் சொல்கிறார்களோ அது சரியோ தவறோ தங்களுக்குப் புரிகிறதோ இல்லையோ அவர்களைத்தான் பக்தர்கள் நாடி நிற்கின்றனர்.

இதற்கெல்லாம் பக்தர்களிடம்தான் விழிப்பு ஏற்பட வேண்டும். அதற்காக, அர்ச்சகப் பெருமக்களை நான் குறைசொல்வதாக கருதக்கூடாது. எங்கள் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஆலயங்களின்மூலம் நூற்றுக் கணக்கான அர்ச்சகர்களை ஆதரித்து வருகிறோம். அதேவேளை, நல்ல அர்ச்சகர்களும் உள்ளனர் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். சமய நெறி வழுவாமல், பக்தர்களுக்கு அபயக்கரம் நீட்டும் உன்னத அர்ச்சகர்களையும் நான் அறிவேன்.



2022 ஏப்ரல் 14-ஆம் நாள் தொடங்கி 2023 ஏப்ரல் 13-வரை உள்ள சுபகிருது ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்கத்தை சோதிட-சாதக நிபுணர் மணி முத்துசாமி இயற்றிய வாக்கிய பஞ்சாங்க நூல், அனைத்து அர்ச்சகர்களுக்கும் பயனளிக்கக் கூடியது. குருக்கள்மாருடன் பக்தர்களும் இந்த பஞ்சாங்க நூலை வாங்கி தாங்களே வாசித்து தங்களின் நட்சத்திர-யோக பலன்களை அன்றாடம் தெரிந்துகொள்ளும் வகையில் எளி-மையாக இந்தப் பஞ்சாங்கம் எழுதப்பட்டுள்ளது.

எனவே, இந்த நூலை அனைவரும் வாங்கி ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தன் உரையை நிறைவு செய்தார் தேசிய ஒற்றுமைத் துறை சமய நல்லிணக்கக் குழு ஆ-ணையருமான டான்ஸ்ரீ நடராஜா.

21-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப மலேசியவாழ் இந்துப் பெருமக்களிடம், குறிப்பாக தமிழர்களிடையே சமய நன்னெறி, ஆன்மிக மறுமலர்ச்சிக் கருத்துகளை துணிவுடன் எடுத்துரைத்துவரும் டான்ஸ்ரீ நடராஜா மலேசியாவின் இந்து சமய மறுமலர்ச்சித் தலைவராக பரிமாணம் அடைந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவஸ்தான செயலாளர் சேதுபதி 500 வெள்ளி வழங்கி முதல் நூலைப் பெற்றுக் கொண்ட இந்த நிகழ்வில் நூற்றுக் கணக்கில் சமய அன்பர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

நூலாசிரியரான "சோதிட திலகம்" மணி முத்துசாமி இந்த நூலைப் பற்றி குறிப்பிடுகையில், பஞ்சாங்கம் என்பது பஞ்ச(5) அங்கங்களைக் கொண்டது என்று பொருள்.

மனிதன் தன் அன்றாட வாழ்வில் நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் கூறுகளின் அடிப்படையில்தான் வாழ்க்கைப் பலனை அன்றாடம் எதிர்கொண்டு வருகிறான்

ஒரு மனிதனின் குணம், வாழ்க்கைப் பயணம், உடல்வாகு, அன்றாட பலன், சுப-அசுப காரியங்கள் யாவும் இந்த ஐந்து(பஞ்ச) அங்கங்களின் மூலமே கணிக்கப்படுகின்றன. கரணங்களில் 11 வகை உண்டு எந்தக் கரணம் ஒரு மனிதனுக்கு உரியது என்பது அவன் பிறந்த நேரத்தின் அடிப்படையில் உறுதிசெய்யப்படும்.



இவை யாவும் நம் முன்னோர்களும் சித்தர்களும் வகுத்தளித்த மரபுப்படியே வழிவழியாகத் தொடர்கின்றன என்று சுபகிருது(2022-2023) ஆண்டு பஞ்சாங்க நூலைப் பற்றி மணி முத்துசாமி விளக்கம் தந்தார்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24


## இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு



ஒரே நேரத்தில்
100 இட்லி செய்யக்குடிய
இட்லி குக்கர
விற்பனைக்கு உண்டு.

**$ 200**

தொடர்புகளுக்கு:
(647) 996-6932

# அன்பின் தொனி - 635

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுதம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?**

B. **சிலுவையின்மூலம் தேவனோடு புதிய உறவு**

தேவன் பரிசுத்தராகவும், நீதியுள்ளவராகவும் இருக்கிறபடியால், பாவம் வம்மை அவரிடமிருந்து பிரிக்கிறது. பாவத்தில் வாழ்பவன் எவனும் அவருடைய பரிசுத்த பிரசன்னத்தில் வரமுடியாது. எனவே இயேசு சிலுவையில் மரித்ததின் மூலம், நமக்குப் பதிலாக நமது பாவங்களுக்கான தண்டனையை தாமே ஏற்றுப் பாடுபட்டதோடு மட்டுமின்றி, பரிசுத்த தேவாதி தேவனை நாம் தனிப்பட்ட முறையில் அறிந்து, அவரோடு உறவுகொள்வதன்மூலம் உண்மையான சந்தோஷ சமாதானத்தையும், அவருடைய பேரன்பையும் அனுபவிக்கும்படியான வாய்ப்பையும் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். - **2 கொரி.5: 21**

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவரு மாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப் பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. **- கொலோசெயர் 1: 13-14**

என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவஞ்செய்வா னானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். - **1 யோவான் 2: 1-2**

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். **- யோவான் 1: 12-13**

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். **- எபேசியர் 2: 13-16**

C. **சிலுவையின்மூலம் விடுதலை**

இயேசுவின் சிலுவை மரணம் மனித சமுதாயத்திற்கு ஒரு பெரிய வெற்றியாக நமக்கு விடுதலையைப் பெற்றுத்தந்திருக்கிறது. தேவன் நமது பாவங்களுக்காக எடுத்த நடவடிக்கை நமது பாவங்களைப் போக்கிறதுமட்டுமல்லாமல், பாவத்தின் காரணமாக உருவாகும் துன்பம் மற்றும் வேதனைகளையும் போக்கக்கூடியதாய் அமையும் நடவடிக்கையுமாகும். மேலும் இயேசுவின் மரணம் பின் வரும் பலதரமான விடுதலைகளையும் பெற்றுத் தருகிறது:

1. **சாத்தனிடமிருந்து விடுதலை**
2. **கடந்தகாலப் பாவங்களிலிருந்து விடுதலை**
3. **நிகழ்காலப் பாவங்களிலிருந்து விடுதலை**
4. **வியாதியிலிருந்து விடுதலை**
5. **சாபத்திலிருந்து விடுதலை**
6. **நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலை**
7. **நித்திய மரணத்திலிருந்து விடுதலை**

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். - **கொலோசேயர் 2: 15**

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். **- யோவான் 8: 36**

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. **- ரோமர் 6: 14**

அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. **- மத்தேயு 8: 17**

மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிர மாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். **- கலாத்தியர் 3: 13**

அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே, அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். **- எபிரேயர் 9: 26-27**

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



***மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்***




***அத்தியாயம் - 03***

"பாரதமெங்கும் பாரதி" எனும் தொடர் நிகழ்ச்சியை பாரத் தேசத்தின் 28 மாநில நகரங்களிலும், 8 எல்லையூர்களிலும் (TERRITORIES) கொண்டு செல்ல வேண்டும் எனும் உத்வேகத்துடன் செயலாற்றிவரும் சென்னை ஸ்ரீ கிருஷ்ணா இனிப்பு நிறுவன அதிபர் திரு. முரளி ஐயாவும், அவருடன் இணைந்து கைகொடுக்கும் சகோதர நிறுவனங்களும் பாரதி நூற்றாண்டு நினைவாக கொண்டாடி வரும் இக்காலத்தில் "பாரெங்கும் பாரதியை" அறியவைப்போம் என என் பங்கிற்கு "தமிழ் சினிமாவில் "மகாகவி" பாரதி பாடல்கள்" என எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி எண்ணி பேருவகை கொள்கிறேன்!


மஹாகவி பாரதி தனக்குத் தானே வேண்டியதை போன்று, "கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடுவயதுக்குள்ள மனத்திடனும், இளைஞர்களுடைய உற்சாகமும், குழந்தையின் இதயமும், தேவர்களே! எனக்கு எப்போதும் நிலைத்திருக்க அருள் செய்யுங்கள்", என இறைவனை நானும் வேண்டிக் கொள்கிறேன்.

"நாம் இருவர்" "வேதாள உலகம்" ஆகிய இரு படங்களிலும் பாரதி எழுதிய பாடல்களை அறிமுகம் செய்து வைத்த (அமரர்) ஏ.வி.எம்.செட்டியார் அவர்கள் தயாரிப்பில் வெளிவந்த "வாழ்க்கை" திரைப்படத்திலும் பாரதியின் தேசிய கீதப்பாடலான "பாரத சமுதாயம் வாழ்கவே..." பாடலைக் காட்சிப்படுத்தியிருந்தார். இப்படம் 1949ல் வெளியானது.

இப்படத்தின் மூலம் தான் பரதக் கலையில் சிறந்தவர்களுள் ஒருவரான திருமதி வைஜெயந்திமாலா அவர்களை ஏவிஎம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். ஒரு நாட்டிய நிகழ்ச்சியாக வைஜெயந்திமாலா அவர்களின் நடனம் இடம் பெற்றிருந்தது. "மகாகவி" யாரால் "பியாக்" ராகத்தில் எழுதப்பெற்ற இப்பாடல் திருமதி டீ.கே பட்டம்மாள் அம்மையாரால் பாடப்பெற்றது.

பாடல் இதுதான்:

பல்லவி: பாரத சமுதாயம் வாழ்கவே! - வாழ்க! வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! - ஜய ஜய ஜய (பாரத)
அனுபல்லவி: :



முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துகொரு புதுமை - வாழ்க (பாரத)

பாரத மாதாவை பின்புலத்தில் கொண்டு வைஜெயந்திமாலாவும் - தோழியர்களும் ஆடிப் பாடும் இக்காட்சி படத்தில் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு ஏவிஎம் அவர்கள் பாரதியின் தேசிய கீதங்களை தனது தயாரிப்புகளில் இடம்பெறச் செய்து தேசிய உணர்வையும் தேச பக்தியையும் வளர்த்தெடுப்பதற்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

அடுத்து 1954 இல் ஏவிஎம் தயாரிப்பில் வெளிவந்த படம் "பெண்" ஆகும்.

இப்படமும் அக்காலத்தில் வெளியான சிறந்ததொரு படமாகும். இதிலும் வைஜயந்திமாலா - அஞ்சலிதேவி - ஜெமினி கணேசன் - வீணை எஸ் பாலச்சந்தர் ஆகியோர் பங்கேற்று நடித்திருந்தனர்.

"மகாகவி" பாரதியார் பெண்குலத்தை பெருமைப்படுத்தி எழுதியிருந்த பாடல்களுள் ஒன்றான "மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையை நாம் கொளுத்துவோம்" என ஆரம்பிக்கும் இப்பாடலை பிரபல பின்னணி பாடகர் ரி. ஏ மோதி பாடியிருந்தார். படத்தில் இப்பாடலுக்கு பாடி நடித்தவர் ஜெமினி கணேசன். துணையாக ஆடியவர் வீணை எஸ் பாலச்சந்தராகும்.

ஏவிஎம் மின் "பெண்" படம் வெளிவருவதற்கு முன்பே தயாராகி வெளிவந்த படம் அறிஞர் அண்ணா கதை வசனம் எழுதிய "ஓர் இரவு" படமாகும். இப்படம் 1951 இல் வெளிவந்தது. இதுவும் ஏவிஎம் செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி அண்ணா எழுதிய சித்திரமாகும்.

இக்காலத்தில் அண்ணாவுடன் செட்டியாருக்கு நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. ஏவிஎம் அவர்கள் தனக்கு மிகுந்த மிகவும் தெரிந்த இராம சுப்பையா என்ற நண்பர் மூலம் அண்ணாவுடன் தொடர்பு கொண்டார். இந்த ராமசுப்பையர் திராவிடக் கொள்கைகளில் பற்றுள்ளவர். அண்ணாவுடன் நட்புடையவர். பெரியவர் இராம சுப்பையா தான் இயக்குனர் எஸ் பி முத்துராமன், திராவிட கொள்கை பரப்பாளர் திரு சுப வீரபாண்டியன் ஆகியோரின் தந்தையுமாவார். திரு இராம சுப்பையா அவர்கள் விருப்புக்கு ஏற்ப அண்ணா அவர்களால் ஒரு இரவிலேயே எழுதப்பெற்ற திரைக்கதைதான் "ஓர் இரவு" என படமாக்கப்பட்டது. இப்படத்தின் கதை வசனத்தை கவனித்து விமர்சனம் எழுதிய கல்கி ஆசிரியர் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அறிஞர் அண்ணாவை "தென்னாட்டு பெர்னாட்ஷா" என புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். நாமும் பெருமிதம் அடைந்தோம்.

"ஓர் இரவு" படத்தில் இடம்பெற்ற மகாகவியின் பாடல் வரிகள் "முரசு" தலைப்பில் இடம் பெற்றவையாகும்.

காட்சியில் "நடிப்பிசைப் புலவர்" கே ஆர் ராமசாமி தன் சொந்தக் குரலில் பாடுவார். அவருடன் ஏ நாகேஸ்வரராவ், திருமதி லலிதா ஆகியோர் ஒரு குழந்தைக்குச் சொல்வது போல் பாடல்காட்சி படமாக்கப்பட்டிருக்கும். இப்பாடலுடனேயே படம் நிறைவுபெறும்.

"முரசு" பாடலில் இடம்பெறும் பாரதியின் முழுமையான கவிதை வரிகளில் பொருத்தமான வரிகளை மட்டும் வெட்டி ஒட்டி இசையமைத்திருந்தார்கள்.
இதோ பாடல் வரிகள்...

"கொட்டு முரசே.. கொட்டு முரசே..
அன்பென்று கொட்டு முரசே - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால் (கொட்டு)

சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம் (கொட்டு)

ஒன்றென்று கொட்டு முரசே - அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே - இந்தச்
நானில மாந்தருக் கெல்லாம் (கொட்டு)




பாரதியார் "காணி நிலம் வேண்டும்" என்று பராசக்தியைப் பார்த்து யாருக்காக பாடினார்? .... அடுத்த இதழில் பதில் கிடைக்கும்.

*- வீணை மைந்தன்*

# *வந்தாளே மகராசி 2022*

*புத்தாண்டுத் திருமகளை வரவேற்போம்*

*விண்ணுலகத் தேவதைகள்*
*வெண்துகில்கள் பொடியாகி*
*மண்ணில் விழுந்தனவோ!*
*மண் சுமந்த பெருமானின்*
*வெண்சடையும் இது தானோ!*
*என வியப்புடனே*
*மாசகற்றி தூசகற்றி*
*மண்மகளை தூய்மை செய்யும்*
*பனிமகளை வரவேற்று*
*வாரத்தில் வெள்ளிதோறும்*
*விருப்புடன் விரியும் "உதயன்"*
*வெள்ளிவிழா ஆண்டு (2021) தனைக்*
*கொண்டாடி மகிழ்வுற்று*
*நல்லோர்கள் வாழ்த்தொலிக்க*
*நன்றியுடன் விடைபகிர்ந்து*
*விழிகள் குளமாக*
*கையசைத்துக் கண்ணசைத்துக்*
*காதலியை பிரிவது போல்*
*கனத்த இதயமுடன் போமகளே - என*
*வழிசொல்லி அனுப்பி நிற்க*
*"வந்தாளே மகராசி" 2022!*
*வருகின்ற புத்தாண்டு திருமகளை*
*இனித்தமுடன் வரவேற்போம்!*



*புதியவளாய் பூமகளாய்*
*பூமணக்கும் புத்தெழிலாள்*
*நாமனக்கும் தமிழெடுத்து*
*நாடும் ஏடும் வரவேற்க*
*காமணக்கும் பூங்காவில்*
*களித்திருக்கும் காதலர்போல்*
*பாமணக்க பாட்டெழுதி*

*நீடுதுயில் நீக்கவந்த*
*பாடுநிலா பாரதியையும்*
*எங்கள் வாழ்வும்*
*எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று*
*சங்கொலித்த தாசனையும்*
*வணங்கியே தான் பாவையுனை*
*வரவேற்போம் !*

*"அது ஒரு குரோனா காலம்", என*
*கதை சொல்லும் பாட்டிகளின்,*
*துன்பியல் நினைவுகளைத் துயரங்களை*
*சுட்டுப் பொசுக்கிவிட்டு*
*நாளெல்லாம் நோயின்றி*
*வாழ்விலே மகிழ்ச்சி பொங்கும்*
*இருபது இருபத்திரண்டே*
*உருமாறும் ஓமிக்கிரானை ஒழித்தழிக்க வாராயே!*

*காமத்துப் பால் பருகக்*
*கல்லூரி பெண்களுக்கு*
*வலைவிரிக்கும் கபோதிகளுக்கும்*
*காடையர்க்கும் "அந்நியன்"*
*வந்திங்கு கண்டிக்க ஆசிகூறு !*

*பூமிதான் சாமி சாமிதான் பூமி*
*பூமித்தாய் மேனியெங்கும்*
*பசுமையை வளர்த்தெடுப்போம் !*
*தமிழீழ வட்டுக் கிராம*
*அரசடி வீதியெங்கும்*
*தலைவிரித்தாடும் சாதிக் கொடுமைகளைத்*
*தீயிட்டுகக் கொளுத்திடுவோம்!*

*உலகின் அழுகையொலி*
*உல்லாசச் சிரிப்பலையாய்*
*பாரெங்கும் ஒலிக்கட்டும்*
*வறுமை - பிணி - சாக்காடு*
*வராமல் தடுத்திடுவோம்*
*ஊழலற்ற தலைவர்கள்*
*நல்லாட்சி மலரட்டும் !*
*ஏர்பிடித்து உழுவோர்கள்*
*நெற்குவியல் காய்கனிகள்*
*பசிபோக்கி குவியட்டும்!,*
*உண்மையொளி வாக்கினிலே ஒளிரட்டும்,*
*உலகத்து மாந்தரெல்லாம்*
*இதழ் சிந்தும் புன்னகையில்*
*கருணை - அன்பு - பாசமுடன்*
*கறுப்பென்றும் வெள்ளையென்றும்*
*நிறபேதம் இனபேதமில்லாது*
*ஆணவக் கொலைகளை*
*அரங்கேற்றம் செய்யாது*
*ஒன்றே குலமென்றும்*
*உயர் தெய்வம் ஒன்றென்றும்*
*மனிதகுலம் மாண்புறவே*
*மனித நேயம் பொங்கட்டும் !*

**- வீணைமைந்தன்**

# ஜெர்மனி காதலனை இந்து மத முறைப்படி திருமணம் செய்த ரஷிய பெண்



ஜெர்மனியை சேர்ந்த காதலனை ரஷிய பெண் இந்து மத முறைப்படி திருமணம் செய்தார். ரஷ்யாவை சேர்ந்தவர் ஜூலியா உக்வெஸ்கினா. இவர் வியட்நாம் நாட்டில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றி வந்தார். ஜெர்மனியை சேர்ந்த கிறிஸ் முல்லர். தொழிலதிபரான இவர் பன்னாட்டு நிறுவனத்தில் செயல் அதிகாரியாக செயல்பட்டு வருகிறார். கிறிஸ் தொழில் ரீதியிலான பயணத்திற்காக வியட்நாம் சென்றுள்ளார். அங்கு அவர் ஜூலியா உக்வெஸ்கினாவை சந்தித்துள்ளார். இருவரும் இடையே காதல் மலர்ந்துள்ளது.

காதலர்கள் இருவரும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். அந்தந்த நாடுகளில் பின்பற்றப்படும் பண்பாடு, பழக்கவழக்கங்கள் குறித்து தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

ஜூலியா இந்தியாவுக்கு 8 முறை வந்துள்ளார். அதேபோல், கிறிஸ் கடந்த ஆண்டு நடைபெற்ற கும்பமேளா நிகழ்ச்சிக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், காதல் ஜோடிகளான கிறிஸ் - ஜூலியா இருவரும் திருமணம் செய்ய முடிவு செய்தனர். இதனை தொடர்ந்து இந்து மத முறைப்படி நமது திருமணம் நடைபெற வேண்டும் என ஜூலியா தனது விருப்பத்தை தெரிவித்தார். தனது காதலியின் விருப்பத்தை ஏற்ற கிறிஸ் இந்து முறைப்படியே திருமணம் செய்துகொள்வோம் என கூறினார்.

அதன்படி, இந்தியாவின் குஜராத் மாநிலம் சபர்காத் மாவட்டத்தில் உள்ள தனது நண்பர்களை தொடர்பு கொண்ட கிறிஸ் தனது திருமணம் இந்து மத முறைப்படி நடைபெற வேண்டும் கூறினார். இதனையடுத்து, கிறிஸ் - ஜூலியா திருமணத்தை சபர்காத் மாவட்டத்தில் நடத்த தேவையான நடவடிக்கைகளை நண்பர்கள் எடுத்தனர்.

அதன்படி, கடந்த வியாழக்கிழமை குஜராத்தின் சபர்காத் மாவட்டம் ஹிமத்நகர் கிராமத்தில் தனது காதலியான ரஷியாவை சேர்ந்த ஜூலியா உக்வெஸ்கினாவை ஜெர்மனியை சேர்ந்த கிறிஸ் முல்லர் இந்து மத முறைப்படி திருமணம் செய்துகொண்டார். இருவரின் திருமண புகைப்படம் தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.


## NOW HIRING!




**தொழில் நிபந்தனைகள்:**

| | |
|---|---|
| மருத்துவ வசதிகள் மற்றும் தங்குமிடம் | - வழங்கப்பட மாட்டாது |
| உணவு | - வழங்கப்பட மாட்டாது |
| இலங்கையிலிருந்து விமானச் சீட்டு | - வழங்கப்பட மாட்டாது |
| இலங்கைக்கு திரும்ப விமானச் சீட்டு | - வழங்கப்பட மாட்டாது |
| தினசரி வேலை நேரங்கள் | - காலை 6.00 - பிற்பகல் 3.00 |
| தொழில் ஒப்பந்தம் | - ஒரு வருடம்- புதுப்பிக்கலாம் |
| ஏனைய நிபந்தனைகள் | - கனடிய சட்டத்திற்கு அமைய |

**Terms & Conditions:**

| | |
|---|---|
| Accommodation & Medical Facilities | - Included |
| Food | - Not Included |
| Daily Working Hours | - 6:00 AM to 3:00 AM |
| Air Ticket from Sri Lanka to Place of Work | - Not Included |
| Air Ticket from Place of Work to Sri Lanka | - Not Included |
| Period of Contract | - 1 year, option to renewal |
| Any other Terms & Conditions | - Ref. Canadian Law/Order |

**2291681 Ontario Incorporated**
(416) 846-3120 | (639) 318-1894

## தமிழ்ப் பூங்கா
THAMIL POONKA SCHOOL
PRESENTS

## மூத்தோர் நிகழ்வு SENIORS' SESSIONS

திங்கட் கிழமைகளில்
Every Mondays
10:00am to 12:30pm

STARTING: JAN 3RD 2022
Zoom ID: 647 706 6123
Password: Not Necessary

பகவத்கீதை (தமிழில்)
Bahavat Gita
(in Tamil)



Mrs. Lalitha Karthikeyan
Bahavat Gita Forums Presenter
in Schools and Colleges

தொல்காப்பியம்
Tholkappiyam
(in Tamil)



Dr. Mrs. S. Sridas
Annamalai Canada
Tamil Lecturer



Hosted by:
Yoga Arulsubramaniam M.Sc.
Tel: 647-706-6123
Website: www.thamilpoonka.org




## இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும் WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம் வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும்,
கனடாவில் வசித்துவந்து அமரத்துவமடைந்தவருமான

## திருமதி. புவனேஸ்வரி பொன்னம்பலம் (ஔவையார்)

அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி.



**மண்ணிற்கு:**
**02-04-1925**

**விண்ணிற்கு:**
**07-01-2011**

### திதி வெண்பா

ஆண்டு விகிர்தி மார்கழி இருபத்தி மூன்றில்
பூண்டதோர் நற்திதியாம் சதுர்த்திதனில்
நீண்ட புகழ் புவனேஸ்வரி பொன்னம்பலம்
வேலணை முத்துமாரி பதம் அடைந்தார் காண்.

அன்னையே எங்கள் ஆருயுயிர்த்தாயே!
முன்னைய தவத்தின் பேறாய் முகிழ்ந்ததோர் அம்மையே
பின்னையெம் வாழ்வுக்கு வழிகாட்டி நின்ற தெய்வமே
உன்னையே தந்து உயிராய் எமை வளர்த்தீரே
தந்தையை பிரிந்து தவியாய் தவித்திட
தாயும் தந்தையுமாய் தாங்கி நின்றீர் அம்மா
உண்ண நல் உணவெனவே உன்குருதி தன்னை
பாலாக தந்து எம்மை வளர்த்து விட்டீரே
கல்வியில் உயர்ந்திட பிள்ளைகளுக்கு
கல்வியினையும் நற்பண்புகளையும்
ஊட்டி வளர்த்தீர் தாயே
அன்பாய் உரைத்திடும் நல்அறிவுரைகள்
தென்பாய் என்றும் நாளும் இருந்திடுமே
அன்னை மொழி எம் காதினில் ஒலிக்கும்
அம்மா முகம் கண்டால் அகம் குளிர்ந்திடும்
என்னேயுன் கல்விப்புலமையென்று எல்லோரும் வியந்து போற்ற
உங்கள் பணிகளை நீங்களே செய்து
வளமோடும் புகழோடும் வாழ்ந்து மடிந்தீர்களே
செம்மையுற வாழவைத்த எங்கள் அம்மாவை
தெய்வமென நித்தம் வேண்டித் தொழுதிடுவோம்
ஆண்டுகள் பத்து ஓடியே மறைந்தாலும்
அம்மா உன் திருமுகம் எம்மனங்களை விட்டுமறையாது

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

அம்மாவின் நினைவோடு வாழ்ந்திடும்
அருமைப் பிள்ளைகள்
கலையரசி பொன்னம்பலம் (மகள்): (647) 787-6270
மாதினி விஜயன் (மகள்): (647) 774-5395
மற்றும் பேரப்பிள்ளைகள்

# இவ்வார ராசிபலன்

## 31-12-2021 வெள்ளி தொடக்கம் 06-01-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** சந்தோஷமான சூழ்நிலை அமையும் வாரம். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாக்கும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். எதிர்பாராத செலவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். பயணம் தடைப்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. கலை ஆர்வம் கூடும். எண்ணங்கள் ஈடேறும். எதிர்பார்ப்புக்கள் கூடும். அலுவலக பணியில் கவனம் தேவை. உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மறையும். பூர்வீக சொத்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. இயந்திரத் தொழில் லாபம் தரும். குழந்தைகள் நலத்தில் அதிகம் அக்கறை தேவை. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: *3,9,8,1*

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**ரிஷபம்:** விவசாயிகள் பயன்பெறும் வாரம். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். எதிர்பார்ப்புகள் உருவாகும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியினால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. பெருமைகள் சேரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். கனவுத்தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். மனோ பயம் நீங்கும். குதூகலம் அதிகமாகம். உடல் உபாதை அதிகமாகும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குல தெய்வம், அதிர்ஷ்ட எண்: *2,7,9,1*


அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N




**மிதுனம்:** நினைத்தது நிறைவேறும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். செயல்களில் பொறுமை தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். முதலீடு கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பம் தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: *5,2,4,7*

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**கடகம்:** சுபகாரியம் கைகூடும் வாரம். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. தந்திரமாக செயல்படுவீர்கள். வியாபாரம் வெற்றி தரும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். எதிர்பார்த்த உதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். இனிப்பான செய்திகள் வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். சச்சரவுகள் அகலும். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். எதிரிகளால் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: *4,1,9,3*

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**சிம்மம்:** யோகமான வாரம். திருப்புமுனை ஏற்படும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆலோசனை பூர்த்தியாகும். தொழிலில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பொறாமைகள் அதிகரிக்கும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பயணம் தடைப்படும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். ஷேர்மார்க்கெட்டில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். முதுகில் வலி வந்து நீங்கும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**கன்னி:** வேண்டாத விஷயங்கள் விலகும் வாரம். நிர்வாகத்தில் நிதானம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. குடும்ப வளர்ச்சி கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களால் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிர்ப்புகள் விலகும். திடீர் பயணம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். இடமாற்றம் உண்டு. கல்வியில் கவனம் வேண்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத் தடை ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். கல்வி ஆர்வம் கூடும். தொழில் லாபம் தரும். பங்குச்சந்தையில் லாபம் தரும். பாதகம் விலகும். பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. பெற்றோர் ஆசி கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். வெற்றிச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: *2,4,2,3*

அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**துலாம்:** பாராட்டுக்கள் கிடைக்கும் வாரம். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித்தரும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். தனவரவு உற்சாகம் தரும். செயலில் வேகம் கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். ஏற்றமான தருணம் அமையும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கைகூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டும் கிட்டும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். புதிய உத்தியோகம் அமையும். விவசாயம் கை கொடுக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *6,3,1,2*


அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**விருச்சிகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். நிர்வாக வாய்ப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். உறவினரால் தொல்லை நேரும். மாற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். உத்தியோக ஏற்றம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. வருமானம் திருப்தி தரும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வீண் செலவுகள் தவிர்க்கவும். வேலை பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். புண்ணியம் சேரும். சந்தர்ப்பம் சாதகம் உண்டு. ஆரோக்கியம் கூடும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உஷ்ணம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: *1,5,3,9*

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம் அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** தேக ஆரோக்கியம் கூடும் வாரம். வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். மனிதநேயம் மிகுதியாகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர் திறமை பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: *4,2,1,3*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. விரயங்கள் கூடும். பயணங்கள் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. உற்சாகம் அலைமோதும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். கடன் தொல்லை அகலும். குடும்ப ஒற்றுமை மேம்படும். விவேகம் வெற்றி தரும். பயணம் அனுகூலம் தரும். வாகன நன்மை உண்டு. நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். இனிக்கும் செய்திகள் வரும். நினைத்தது நடக்கும். தொட்டது துலங்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொலைதூர தொடர்பு லாபம் தரும். முதலீடு உண்டாகும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *4,5,3,7*


அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L




**கும்பம்:** கலை ஈடுபாடு அதிகரிக்கும் வாரம். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். குழப்பங்கள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். செய்தொழில் லாபம் தரும். புதிய நட்பில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்பு கூடி வரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *3,2,7,9*

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X




**மீனம்:** தொட்டது துலங்கும் வாரம். வழக்கு வெற்றித்தரும். புத்திர வழியில் தொல்லையுண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏமாற்றம் அடைவர். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. ஜீவராசிகளுக்கு உணவு அளித்தல் யோக பலன் கூடும். வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பண விரயம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை அகலும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் ஒழியும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குல தேவதை, அதிர்ஷ்ட எண்: *2,1,3,9*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
01
08
1936



ஆண்டவன் அரவணைப்பில்
29
12
2021

யாழ். கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகவும்,
கனடா, ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி

யாழ். கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி அவர்கள் 29.12.21 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பொன்னம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தெய்வானை அவர்களின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புச் சகோதரியும்,

விஜயகுமாரி (மல்லி), விஜயகுமார், காலஞ்சென்ற வசந்தகுமாரி, சாந்தகுமாரி (சாந்தி), சந்திரகுமார் (பாபு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் (சிறி), கலாரஞ்சனி, சிவயோகநாதன், லோகேஸ்வரன், கருணாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும்,

துஷ்யந்தி (கண்ணன்), துஷாந்தி (திவாகரன்), கஜனி (ரிஷி), விவேகா, வீனுகா, விவேன், விதுரா, சாமந்தி, விஜயந்தி, திபியந்தி, மேகலா, இராகுலன், அகல்யா, அகிலன், அச்சுதன், ஆகியோரின் அன்பு பேத்தியும்,

இஷான், அபிஷன், ஆர்த்தியா, அக்ஷன், அதிரன், அஞ்சனன், ரியா, மாயா, டியா, ஹைரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
பார்வைக்கு:
2 January, 2022 ஞாயிற்றுக்கிழமை, Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave., Markham, பிற்பகல் 1:30 மணிக்கும் 3:00 மணிக்கும் இடையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் பி. ப. 3:00 மணிக்கும் பி. ப 4:30 மணிக்கும் இடையில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரியைக்காக 12492 woodbine Avenue இல் உள்ள Highland Hills Crematorium க்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தொடர்புகளுக்கு:

விஜயகுமார் மகன்
905 456 9607

விஜயகுமாரி (மல்லி) மகள்
416 431 0121

சாந்தகுமாரி (சாந்தி) மகள்
647 456 4838

சந்திரகுமார் (பாபு) மகன்
416 587 7690

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com



Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca





# 25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE TRANSMISSION
RUSTPROOFING OILCHANGE
TYRES AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3

உதயம் 1343 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 31, 2021

## இலங்கை கிழக்கு மாகாணத்தின் மாணவ மாணவிகளுக்கு ஓர் முன்னுதாரணமாக விளங்கும் புதிய மருத்துவர் தர்ஷிகா



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பட்டமளிப்பு விழாவின் போது, முதன்நிலை மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட பட்டதாரிகளுக்கென வழங்கப்படும் 37 தங்கப் பதக்கங்களில் 13 பதக்கங்களை பெற்று மருத்துவரான தமிழ் பெண் தர்ஷிகா சாதனை படைத்துள்ளார்.இலங்கையின் கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த தர்ஷிகா தணிகாசலம் என்பவரே இந்த வியப்பு மிகுந்த சாதனையை நிகழ்தியுள்ளார்.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

## கனடா வாழ் 'நிவாரணம்' செந்தில்குமாரனின் மனித நேய மற்றும் மனதைக் கவரும் இசைத் துறை பங்களிப்புக்கள்



கனடா வாழ் செந்தில்குமரன் பல்வேறு வழிகளில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களாலும் ஏனைய இனங்கள் சார்ந்த பலராலும் நன்கு அறியப்பெற்றவராக விளங்குகின்றார் என்பதில் சந்தேகமே இல்லை

*(உள்ளே விபரமான செய்தி 26ம் பக்கத்தில்)*

## கனடா உதயனின் வெள்ளி விழா ஆண்டான 2021 க்கு விடை கொடுப்போம் வாருங்கள்!!!







கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டான 2021 க்கு விடை கொடுக்கும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில். 'உதயன்' பத்திரிகையின் வளர்ச்சியிலும் வெளியீட்டிலும் ஆதரவு வழங்கி வரும் பல நண்பர்கள் கடந்த சில மாதங்களாக கௌரவிக்கப்பெற்று வருகின்றார்கள்.

இந்த வரிசையில் கடந்த பல வருடங்களாக எமக்கு துணை நிற்கும் அன்பர். நண்பர். ஆதரவாளர் தற்போது கனடாவில் புகழ்பெற்ற வீடு விற்பனைத் துறை வெற்றியாளர்- திரு ராஜ் நடராஜா மற்றும். நண்பர் நிதி ஆலோசகர் திரு ஆர். ஆர். ராஜ்குமார் நிதி ஆலோசகர் அண்மையில் பத்திரிகையின் அலுவலகத்திற்கு வருகை தந்தபோது அவர்கள் இருவருக்கும் உதயன் வெள்ளி விழா மலர் மற்றும் நன்றி செலுத்தும் அடையாளமாக அன்பளிப்புப் பொதி ஆகியன வழங்கப்பெற்றன.

படங்களில் உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் அலுவலகப் பணியாளர் பரா. பிரதீபன் ஆகியோர் இரண்டு வர்த்தக நண்பர்களோடும் நிற்பதைக் காணலாம்.

## தமிழ்நாடு மத்தியமண்டலம், திருச்சி, காவல் துறைத்தலைவர், வே. பாலகிருஷ்ணன் (ஐ.பி.எஸ்) எழுதும்

## மூத்தக் குடிமக்கள் முதன்மை குடிமக்கள்



திருப்பூர் மாவட்டத்தில் ஒரு கோயிலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மூத்தக் குடிமகன் ஒருவரை காக்கும் முயற்சியாக அவரிடம் பேசி அவர் பின்னணியைத் தெரிந்து கொண்ட பின் அவரை அவர் குடும்பத்துடன் சேர்த்து வைக்க முயன்றபோது அவர் "தயவு செய்து வீட்டுக்கு மட்டும் அனுப்பிவிடாதிர்கள்" என கைகளைக் கூப்பி அவர் அழுதது இன்றும் என் கண்முன்னே நிற்கின்றது. பின்னர் அவரின் இரு மகன்களையும் வரவழைத்து அவர்களுக்கு நீண்ட ஆற்றுப்படுத்தல் செய்தபின் தந்தையும் குழந்தைகளும் ஆரத் தழுவியபோது கண்ணில் கண்ணீர் சாரைசாரை-யாக கொட்டியதை பார்க்கும்போது "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்ற வள்ளுவர் வரிகள் வந்து நின்றன. இதைப் போல் நூற்றுக்கணக்கான தருணங்களைமூத்தக் குடிமக்கள் குறித்தபாதுகாப்பு பணியில் கண்டிருக்கிறேன். *(உள்ளே விபரமான கட்டுரை 15ம் பக்கத்தில் .. தொடர்ந்து அன்னாரின் கட்டுரைகளை வாரா வாரம் படியுங்கள்)*

## சென்னை புத்தகக் காட்சியில் 'மணிமேகலை' ரவி தமிழ்வாணன் – பாரதி பாஸ்கர் ஆகியோர்க்கும் கலைஞர் பொற்கிழி விருது





சென்னை புத்தகக் காட்சி விழாவில் சென்னை மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாணன் மற்றும் பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கர் உள்ளிட்ட 6 பேருக்கு கலை-ஞர் பொற்கிழி விருது வழங்கப்பட உள்ளது. சென்னையில் ஆண்டுதோறும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் புத்தகக் காட்சி, நடைபெறுவது வழக்கம்.

இந்த 'கலைஞர் விருது' வழங்கும் சிறப்பு நிகழ்ச்சியில் ஏனையோரோடு சென்னை மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாணன், அவர்களுக்கு சிறந்த புத்தக விற்பனையாளருக்கான பதிப்புச் செம்மல் விருது வழங்கப்பெறுகின்றது. இந்த விரு-துகளை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வழங்குவார் என அறியப்படுகின்றது.

## றொறன்ரோ கிறிஸ்த்தவ சபை தேவாலயத்தில் நத்தாரை வரவேற்கும் ஏற்பாட்டு நாள் பிரார்த்தனைகள்



றொறன்ரோ மாந-கரில் பின்ச்-மிடில்பீல்ட் சந்திப்புக்கு அருகி-ல் அமைந்துள்ள றொறன்ரோ கிறிஸ்த்தவ சபையின் தேவாலயத்தில் இவ்வருடத்திற்குரிய நத்தார் திருநாளை வரவேற்கும் ஏற்பாட்டு நாள் பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகள் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

## தமிழ் பேசும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் Senior Persons Living Connected

**Scarborough ,y; 3333 Finch Avenue East** என்ற முகவரியில் அமைந்துள்ள **Senior Persons Living Connected (SPLC)** நிறுவனம் தமிழ் பேசும் வயது முதிர்ந்த மற்றும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவை-களை வழங்கி வருகின்றது. நீங்கள் சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற இக்காலகட்டங்களில் உங்களுடைய மனநலம் மற்றும் உடல் நலம் சார்ந்த தேவைகளைக் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான சேவைகளை வழங்கிவருகின்றனர். இணையவழி மூலம் வாரார்ந்த மற்றும் மாதாந்த மெய்நிகர் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டள்ளன. இந் நிகழ்வுகளில் பங்குகொண்டு பயன் பெறுங்கள் அத்தடன் நீங்கள் தன்னார்வுத் தொண்டர்களாக எமது நிறுவனத்தில் இணைந்து செயற்படலாம்.

மேலதிக தகவல்களை இணையத்தளத்திலோ **(splc.ca)** தொலைபேசி மூலமோ (416 493 3333) பெற்றுக்கொள்ளலாம்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker



